SUPREME AUDIT INSTITUTION OF INDIA
लोकहितार्थ सत्यनिष्ठा
Dedicated to Truth in Public Interest

# இந்திய தணிக்கைத் தலைவரின் அறிக்கை

# ‘ஜல் ஜீவன் இயக்கம்’
# மீதான செயலாக்கத் தணிக்கை

தமிழ்நாடு அரசு
2025ஆம் ஆண்டிற்கான அறிக்கை எண் 10
(சிவில்)

# இந்திய தணிக்கைத் தலைவரின் அறிக்கை

## ‘ஜல் ஜீவன் இயக்கம்’
## மீதான செயலாக்கத் தணிக்கை

**தமிழ்நாடு அரசு**
**2025ஆம் ஆண்டிற்கான அறிக்கை எண் 10**
**(சிவில்)**

## பொருளடக்கம்


| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| முகவுரை | | v |
| நிர்வாகச் சுருக்கம் | | vii |
| **அத்தியாயம் I – முன்னுரை** | | |
| ஜல் ஜீவன் இயக்கம் - விரிவான நோக்கங்கள் | 1.1 | 1 |
| நிறுவன அமைப்பு | 1.2 | 2 |
| தணிக்கை நோக்கங்கள் | 1.3 | 2 |
| தணிக்கை அளவுகோல்கள் | 1.4 | 3 |
| தணிக்கை நோக்கம் மற்றும் செயல்பாட்டுமுறை | 1.5 | 3 |
| தமிழ்நாட்டில் ஜல் ஜீவன் இயக்கத்தின் கூறுகள் மற்றும் அவற்றிற்கான செயல்படுத்தும் முகமைகள் | 1.6 | 4 |
| ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் நிலை | 1.7 | 6 |
| ஏற்பு | 1.8 | 7 |
| அறிக்கை கட்டமைப்பு | 1.9 | 7 |
| **அத்தியாயம் II – நிறுவன கட்டமைப்பு மற்றும் திட்டமிடல்** | | |
| ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் நிறுவன கட்டமைப்பு | 2.1 | 9 |
| கிராமப்புற குடிநீர் மற்றும் சுகாதாரக் குழுவின் செயல்பாடு | 2.2 | 10 |
| கிராம செயல் திட்டங்களை தயாரிப்பதில் இருந்த குறைபாடுகள் | 2.3 | 11 |
| மாவட்ட குடிநீர் மற்றும் சுகாதாரக் குழுவின் செயல்பாடு | 2.4 | 12 |
| ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் பணிகளைத் திட்டமிடுவதில் இருந்த சிக்கல்கள் | 2.5 | 14 |

| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| **அத்தியாயம் III – ஜல் ஜீவன் இயக்கத்தின் செயலாக்கம்** | | |
| முன்னுரை | 3.1 | 23 |
| FHTCகள் வழங்கலில் அடையப்பட்ட நிலை | 3.2 | 24 |
| வீடுகள் குறித்த தரவுகளில் இருந்த வேறுபாடுகள் | 3.3 | 25 |
| திட்டங்களை செயல்படுத்துதல் | 3.4 | 26 |
| ஒப்பந்த மேலாண்மையில் காணப்பட்ட முரண்பாடுகள் | 3.5 | 27 |
| ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் TWAD வாரியத்தின் பணிகள் | 3.6 | 31 |
| RD&PR துறையில் உள்ளூர் கூறுகளுக்கான பணிகள் | 3.7 | 36 |
| பயன்படுத்தப்படாத கட்டமைப்புகள் | 3.8 | 37 |
| அதிகப்படியான சேமிப்பு அமைப்புகளின் கட்டுமானம் | 3.9 | 39 |
| **அத்தியாயம் IV - நிதி மேலாண்மை** | | |
| முன்னுரை | 4.1 | 43 |
| JJMன் கீழ் சமூக பங்களிப்புகளின் குறைவான வசூல் | 4.2 | 44 |
| குடிநீர் கட்டணங்களின் குறைவான வசூல் | 4.3 | 46 |
| பிற சிக்கல்கள் | 4.4 | 47 |

| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| **அத்தியாயம் V - குடிநீர் தரம் மற்றும் கண்காணிப்பு** | | |
| முன்னுரை | 5.1 | 49 |
| குடிநீர் தர பரிசோதனைக்கு போதுமான உள்கட்டமைப்பு மற்றும் உபகரணங்கள் இல்லாதது | 5.2 | 50 |
| குடிநீர் ஆதாரங்கள் மற்றும் அளவுருக்களை பரிசோதனை செய்தல் | 5.3 | 54 |
| கள சோதனைப் பெட்டிகள் பயன்படுத்தப்படாமை | 5.4 | 56 |
| செயல்படாத எதிர்மறை சவ்வூடுபரவல் ஆலைகள் | 5.5 | 58 |
| **அத்தியாயம் VI - செயல்பாட்டுக்குப் பிந்தைய மேலாண்மை, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு** | | |
| கண்காணிப்பில் காணப்பட்ட சிக்கல்கள் | 6.1 | 61 |
| JJMன் கீழ் IEC நடவடிக்கைகளை செயல்படுத்துதல் | 6.2 | 64 |
| குடிநீர் குழாய் இணைப்புகளை புவிசார் குறியீடு செய்தல் | 6.3 | 65 |
| FHTCஐ ஆதார் உடன் இணைத்தல் | 6.4 | 66 |
| JJMன் கீழ் சமூகத் தணிக்கை நடத்தப்படாமை | 6.5 | 66 |
| நிறைவடைந்த பணிகளின் முறையற்ற பராமரிப்பு | 6.6 | 66 |
| **அத்தியாயம் VII - ஜல் ஜீவன் இயக்கத்தின் பலன் மற்றும் விளைவு கட்டமைப்பு** | | |
| முன்னுரை | 7.1 | 69 |
| முதன்மைப் பலன் அடையப்படாமை | 7.2 | 69 |
| JJMன் விளைவுகள் | 7.3 | 76 |

## இணைப்புகள்


| இணைப்பு எண் | விவரங்கள் | பக்கம் |
|---|---|---|
| 1.1 | தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்கள், வட்டாரங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் விவரங்கள் | 83 |
| 1.2 | தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் TWAD பணிகளின் நிலவரம் | 85 |
| 2.1 | தேனி மாவட்டத்தில் முன்மொழியப்பட்டு வழங்கப்பட்ட FHTCகளின் விவரங்கள் | 87 |
| 3.1 | ‘ஹர் கர் ஜல்’ சான்றளிக்கப்பட்ட VPகளில் VP வரி போர்ட்டலின்படியான மதிப்பீடுகளுக்கு எதிராக JJM டேஷ்போர்டு தரவின்படியான FHTCகளின் எண்ணிக்கை | 88 |
| 3.2 | நில அளவை மற்றும் மட்ட அளவை பணிகளுக்கான தொகுப்பு வாரியான பணி விவரக்குறிப்புகள் | 90 |
| 3.3 | 2020-24ஆம் ஆண்டில் JJM/ஒருங்கிணைப்பு திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட உள்ளூர் பணிகளின் எண்ணிக்கை | 91 |
| 4.1 | மத்திய மற்றும் மாநில பங்குகளை ‘ஒற்றை முதன்மைக் கணக்கிற்கு’ விடுவித்தலில் தாமதம் | 92 |
| 5.1 | ஆய்வகங்களில் உள்ள உள்கட்டமைப்பு மற்றும் பற்றாக்குறை பற்றிய விவரங்கள் | 94 |
| 5.2 | தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களின் ஆய்வகங்களில் உபகரணங்களின் பற்றாக்குறை | 95 |
| 6.1 | குழாய்களின் விலை விகிதத்தின் தவறான ஏற்பினால் அதிகப்படியான செலவினம் | 97 |
| 6.2 | பணிக்கான செலவினத்தில் தவறாக சேர்க்கப்பட்ட DPR கட்டணங்கள் | 98 |
| 7.1 | தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் வீட்டிற்கு வெளியே நிறுவப்பட்ட FHTCகளின் விவரங்கள் | 104 |
| | சுருக்கங்களின் சொற்களஞ்சியம் | 105 |

# முகவுரை

மார்ச் 2024-உடன் முடிவடைந்த ஆண்டிற்கான இத்தணிக்கை அறிக்கை, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2)வது பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ளவாறு, சட்டமன்றத்தில் வைக்கப்படும் பொருட்டு தமிழ்நாடு ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்பட தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்திய தணிக்கைத் தலைவரின் இவ்வறிக்கை, தமிழ்நாட்டில் ஜல் ஜீவன் இயக்கம் மீதான செயலாக்கத் தணிக்கையின் முடிவுகளைக் கொண்டுள்ளது.

இவ்வறிக்கையில், 2019-24 ஆண்டுகளின் கணக்குகளை சோதனை தணிக்கை செய்யும்போது கண்டறியப்பட்ட நேர்வுகளும், முந்தைய ஆண்டுகளில் கண்டறியப்பட்டு முந்தைய ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகளில் சேர்க்கப்படாத நேர்வுகளும் சேர்க்கப்பட்டுள்ளன

இந்திய தணிக்கைத் தலைவரால் வெளியிடப்பட்ட தணிக்கைத் தரங்களுக்கு இணங்கும் வகையில் இத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ள இவ்வறிக்கையில் ஐயம் ஏதும் ஏற்படின், ஆங்கில அறிக்கையே அதிகாரப்பூர்வமானது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

# நிர்வாகச் சுருக்கம்

# நிர்வாகச் சுருக்கம்

'ஊரக சமூகங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில், ஒவ்வொரு ஊரக குடும்பமும் பரிந்துரைக்கப்பட்ட தரத்திலான குடிநீரை போதுமான அளவில் (குறைந்தபட்சம் 55 lpcd) மலிவான விநியோகக் கட்டணத்தில் தொடர்ச்சியாக நீண்ட கால அடிப்படையில் பெற வேண்டும்' என்ற தொலைநோக்குடன் ஜல் ஜீவன் இயக்கம் ஆகஸ்ட் 2019ல் தொடங்கப்பட்டது. ஜல் ஜீவன் இயக்கம் என்பது ஒரு பரவலாக்கப்பட்ட மற்றும் சமூகத்தால் நிர்வகிக்கப்படும் திட்டமாகும்.

இந்த இயக்கத்தின் விரிவான நோக்கங்களுள் சில (i) ஒவ்வொரு கிராமப்புற வீடு, பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள் மற்றும் பிற அரசு கட்டிடங்களுக்கு குடிநீர் குழாய் இணைப்பு (Functional Household Tap Connection - FHTC) வழங்குதல் (ii) தரம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் FHTCகள் வழங்கப்பட முன்னுரிமை அளித்தல் (iii) இணைக்கப்பட்ட குடிநீர் குழாய்களின் செயல்பாட்டைக் கண்காணித்தல் மற்றும் உள்ளூர் சமூக பங்களிப்பின் மூலம் தன்னார்வத்தை ஊக்குவித்து அச்சமூகத்தினரின் உரிமையை உறுதி செய்தல் (iv) குடிநீர் மூல ஆதாரம், உள்கட்டமைப்பு, செயல்பாடு மற்றும் பராமரிப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய குடிநீர் விநியோக அமைப்பின் நிலைத்தன்மையை உறுதிப்படுத்த உதவுதல் மற்றும் (v) பாதுகாப்பான குடிநீரின் முக்கியத்துவம், போன்ற அம்சங்கள் மீதான விழிப்புணர்வைக் கொண்டு வருதல்.

ஒரு குறிப்பிட்ட நிர்வாக அலகில், அதாவது கிராம ஊராட்சி (Village Panchayat – VP)/வட்டாரம்/மாவட்டத்தில், FHTCகள், 100 விழுக்காடு வழங்கப்பட்ட நிலையில் அவ்வலகு வீடு தோறும் குடிநீர் ('ஹர் கர் ஜல்') நிலையை அடைந்ததாகக் கூறப்படுகிறது.

ஒவ்வொரு வீட்டிற்கும், சமையலறை, சலவை & குளியல் பகுதி மற்றும் கழிப்பறை ஆகியவற்றிற்கான மூன்று விநியோக குழாய்களுள் ஒன்று ஜல் ஜீவன் இயக்கத்தின் நிதியுதவியுடன் வழங்கப்படுகிறது. இந்த இயக்கத்தை செயல்படுத்துவதற்கான மத்திய-மாநில நிதியானது, ஊரக வீடுகளில் FHTCகள் வழங்கப்பட 50:50 என்ற விகிதத்திலும், குடிநீர் தரம் மற்றும் கண்காணிப்பு (WQM&S) உள்ளிட்ட ஆதரவு நடவடிக்கைகளுக்கு 60:40 என்ற விகிதத்திலும் பகிரப்படுகிறது. உள்ளூர் குழாய்நீர் வழங்கல் உள்கட்டமைப்புக்கான மூலதனச் செலவில் 10 விழுக்காடு, ரொக்கம் மற்றும்/அல்லது பொருள் மற்றும்/அல்லது உடல் உழைப்பாக ஊரக வீடுகளிலிருந்து சமூக பங்களிப்பாக பெறப்படுகிறது. மீதமுள்ள செலவின தொகை மேலே கூறப்பட்டுள்ள விகிதங்களில் பகிர்ந்து கொள்ளப்படும்.

தமிழ்நாட்டில், ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் பல-கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் (Tamil Nadu Water Supply and Drainage - TWAD) வாரியத்தால் செயல்படுத்தப்படுகின்றன. ஒரு VPக்கு மட்டுமே குடிநீர் வழங்கும் நிலை அல்லது ஒரு VPக்குள்ளேயே குடிநீருக்கான ஆதாரம் இருக்கும் நிலையில்,

அத்திட்டங்களை செயல்படுத்துவதற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (RD&PR) துறை பொறுப்பேற்கிறது.

ஊரகப் பகுதிகளில் குழாய் நீர் வழங்குதல் உறுதி செய்யப்பட வேண்டும் என்னும் இவ்வியக்கத்தின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, தெரிவு செய்யப்பட்ட ஆறு மாவட்டங்களில், 2019-2024 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகளின் மீதான இச்செயலாக்கத் தணிக்கை CAGயால் மேற்கொள்ளப்பட்டது. திட்டமிடப்பட்ட இலக்கை அடைவதில் இவ்வியக்கத்தின் திட்டமிடுதல் மற்றும் செயல்படுத்தல் ஆகியவற்றிற்கான திறன்மிகு நிறுவன கட்டமைப்பு உள்ளதா, நிதி சிக்கனமாகப் பயன்படுத்தப்பட்டதா, வழங்கப்பட்ட குழாய் இணைப்புகள் மற்றும் குடிநீர் பாதுகாப்பு நீடித்து நிலைத்திருந்தனவா என்பதை மதிப்பிடுவதே தணிக்கையின் நோக்கமாகும்.

### முக்கிய தணிக்கை கண்டுபிடிப்புகள்

இவ்வியக்கத்தின் தொடக்க நிலையில் மாநிலத்தில் இருந்த 1.25 கோடி வீடுகளில், 21.76 இலட்சம் வீடுகளுக்கு (17.37 விழுக்காடு) மட்டுமே குடிநீர் குழாய் இணைப்புகள் இருந்தன. தணிக்கையின் போது (2024), 1.05 கோடி வீடுகள் (83.94 விழுக்காடு) இணைப்புகளைப் பெற்றிருந்தன. இதில் 10 மாவட்டங்களில் 100 விழுக்காடு இணைப்புகள் பதிவாகியிருந்தன. இருப்பினும், தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில், குழாய் இணைப்புகள் வழங்கப்பட்ட 50 விழுக்காடு ஊரக வீடுகளுக்கு போதுமான அளவு (55 lpcd) குடிநீர் வழங்கப்படவில்லை என்பது கவனிக்கப்பட்டது. வழங்கப்பட்ட பெரும்பாலான FHTCகள் (96 விழுக்காடு) வழிகாட்டுதல்களுக்கு முரணாக வீடுகளுக்கு வெளியே காணப்பட்டன.

கிராம செயல் திட்டத்தில் சேர்ப்பதற்கான தேவை மதிப்பீடுகளை உறுதிப்படுத்த எந்த அடிப்படை கணக்கெடுப்பும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும், மாவட்ட குடிநீர் மற்றும் சுகாதார இயக்கம், 2019-24 ஆண்டுகளில், பரிந்துரைக்கப்பட்ட எண்ணிக்கையிலான கூட்டங்களை நடத்தவில்லை என்பதையும் தணிக்கை கவனித்தது. இது திட்டத்தின் செயல்பாட்டை பாதித்தது. இராமநாதபுரம் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒரு வட்டாரத்தில் செப்டம்பர் 2021ல் எடுக்கப்பட்ட 12 பணிகளுள் எட்டு பணிகள் தொடங்கப்படுவதற்கு முன்பே ரத்து செய்யப்பட்டன என்பது JJM பணிகளின் சோதனைச் சரிபார்ப்பில் வெளியானது. அதனைத் தொடர்ந்து மீதமுள்ள நான்கு பணிகள் உள்ளூர் சமூகத்தினரால் எழுப்பப்பட்ட ஆட்சேபனைகள் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டன. மற்றொரு நேர்வில், நியமிக்கப்பட்ட பகுதியில் நிலத்தடி நீர் உப்புத்தன்மை கொண்டதாகவும், குடிக்கத் தகுதியற்றதாகவும் இருந்ததால் திறந்தவெளி கிணறுகளை அமைக்க வேண்டாம் என்று கோரிக்கைகள் விடுத்திருந்த போதிலும், மூன்று திறந்தவெளி கிணறுகள் கட்டப்பட்டு இறுதியில் இக்கிணறுகள் கிராம ஊராட்சியால் பயன்படுத்தப்படாமல் இருந்தன.

TWAD வாரியத்தால் செயல்படுத்தப்பட்ட பணிகளுடன் உள்ளூர் கூறுகளுக்கான பணிகள் ஒருங்கே மேற்கொள்ளப்படவில்லை. இதன் விளைவாக, முடிக்கப்படாத மூலப் பணிகள், நீர் ஆதாரங்கள் இல்லாமை போன்ற காரணங்களால் உருவாக்கப்பட்ட உள்கட்டமைப்பு பயன்படுத்தப்படவில்லை. JJM பணிகளுக்கான ஒப்பந்த நடைமுறையில் குறைபாடுகள் இருந்தன. TWAD வாரியத்தின் பணிகளில் தளங்களை அடையாளம் காண்பதில் தாமதம், தொடர்புடைய துறைகளிடமிருந்து அனுமதிகளைப் பெறாதது மற்றும் தாமதமாக செயல்படுத்துதல் போன்ற சிக்கல்கள் கவனிக்கப்பட்டன. RD&PR துறையால் செயல்படுத்தப்பட்ட பணிகளைப் பொறுத்தவரை, அவற்றின் தாமதத்திற்கு எந்த அபராதமும் விதிக்கப்படவில்லை. குறைபாடுள்ள திட்டமிடல் காரணமாக, பற்றாக்குறை இருந்த இடங்களுக்குப் பதிலாக, ஏற்கனவே போதுமான அளவு பெற்றிருந்த குடியிருப்புகளில் நீர் சேமிப்பு கட்டமைப்புகள் கட்டப்பட்டன.

JJMன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச அளவு (55 lpcd) குடிநீர் வழங்கலைப் பொறுத்தவரை, சோதனை-சரிபார்க்கப்பட்ட மாவட்டங்களில், நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள எந்த குடியிருப்புகளுக்கும் 55 lpcd தண்ணீர் வழங்கப்படவில்லை என்பதை கவனித்தோம். FHTCகள் வழங்கலில், கோயம்புத்தூர் மாவட்டம் 100 விழுக்காட்டை பதிவு செய்திருந்தாலும், அதன் 8.67 விழுக்காடு குடியிருப்புகளுக்கு மட்டுமே பரிந்துரைக்கப்பட்ட அளவு விதிமுறைகளின்படி குடிநீர் வழங்கப்பட்டது.

மேலும் பின் வருவன கவனிக்கப்பட்டன:

(i) NABL அங்கீகாரம் இல்லாமல் நான்கு மாவட்ட நீர் சோதனை ஆய்வகங்கள் செயல்பட்டன; (ii) தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் பல்வேறு மட்டங்களில் இருந்த 18 ஆய்வகங்களிலும் (மாநில ஆய்வகம் உட்பட) உள்கட்டமைப்பு மற்றும் உபகரணங்கள் போதிய அளவில் இல்லை; (iii) பரிந்துரைக்கப்பட்ட 13 அளவுருக்களுள் சிலவற்றிற்கான நீர் தர சோதனை TWAD வாரியத்தால் மேற்கொள்ளப்படவில்லை; (iv) மாசுபாடுகளுக்கான சோதனையில் நேர்மறை முடிவுகளைக் கொண்ட மாதிரிகளை உயர் மட்ட ஆய்வகங்களுக்குப் பரிந்துரைப்பதற்கான எந்த வழிமுறையும் இல்லை மற்றும் (v) தேர்ந்தெடுக்கப்பட்ட எந்த மாவட்டத்திலும் கள சோதனை பெட்டிகள் பயன்படுத்தப்படவில்லை.

ஆறு மாவட்டங்களில் சீரற்ற முறையில் தெரிவு செய்யப்பட்ட 43 குடியிருப்புகளிலிருந்து குடிநீர் மாதிரிகளை எடுத்து, TWADன் மாவட்ட குடிநீர் சோதனை ஆய்வகங்களில் சோதனை செய்தோம். இவற்றுள், கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள குடியிருப்புகளிலிருந்து பெறப்பட்ட ஐந்து மாதிரிகள் மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து பெறப்பட்ட இரண்டு மாதிரிகள் பரிந்துரைக்கப்பட்ட குடிநீர் தர வழிகாட்டுதல்களை (BIS 10500:2012 குடிநீர் தரநிலைகள்) பூர்த்தி செய்யவில்லை. விழுப்புரம், இராமநாதபுரம் மற்றும் தேனி மாவட்டங்ளின் சில குடியிருப்புகளில் மேற்கொளப்பட்ட நேரடி கூட்டு தேர்ந்தாய்வின் போது, வழங்கப்பட்ட குடிநீர் குடிப்பதற்கு ஏற்றதாக இல்லை என்றும் பயனாளிகள் கருத்து தெரிவித்திருந்தனர்.

ஜல் ஜீவன் இயக்க டேஷ்போர்டில் பதிவாகியிருந்த வீடுகளின் எண்ணிக்கை மற்றும் VP வரி போர்ட்டலில் காணப்பட்ட சொத்து வரி மதிப்பீடுகளின் எண்ணிக்கை ஆகியவற்றில் வேறுபாடு காணப்பட்டது. சமூக பங்களிப்பில் சுமார் 67 விழுக்காடு இன்னும் வசூலிக்கப்படாமல் இருந்தது. குடிநீர் இணைப்புக் கட்டணங்கள் மதிப்பிடப்படாமலும் மற்றும் வசூலிக்கப்படாமலும் இருந்ததால், குடிநீர் குழாய் இணைப்புகளின் செயல்பாடு மற்றும் பராமரிப்பில் கூடுதல் சுமை ஏற்படும் நிலை காணப்பட்டது. எதிர்மறை சவ்வூடுபரவல் ஆலைகளின் பராமரிப்பு தொடர்பான போதுமான கண்காணிப்பு இல்லாததால், இராமநாதபுரம், விழுப்புரம் மற்றும் சேலம் ஆகிய மூன்று மாவட்டங்களில் நிறுவப்பட்ட 55 விழுக்காடு RO ஆலைகள் செயல்படவில்லை. இதன் விளைவாக, குறிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்னும் நோக்கம் அடையப்படவில்லை.

மூன்றாம் தரப்பு ஆய்வு நிறுவனங்களின் (Third Party Inspection Agencies - TPIAகள்) கண்காணிப்பு மற்றும் சரிபார்ப்பு செயல்முறைகளில் குறைபாடுகள் காணப்பட்டன. TPIAஆல் பயன்படுத்தப்பட்ட ஆய்வு அறிக்கைகள் முழுமையற்று காணப்பட்டன. தகவல், கல்வி மற்றும் தொடர்புக்கான (IEC) அச்சிடப்பட்ட ஆவணங்கள் பெறப்பட்டு ஆறு மாதங்களுக்கும் மேலாகியும், மாவட்டங்களில் அவை விநியோகிக்கப்படாமல்/ பயன்படுத்தப்படாமல் இருந்ததை தணிக்கை கவனித்தது. உருவாக்கப்பட்ட உடைமைகள் புவிசார் குறியிடப்படல் மற்றும் FHTCகள் ஆதாருடன் இணைக்கப்படல் ஆகியவை முழுமையடையவில்லை. தெரிவு செய்யப்பட்ட ஆறு மாவட்டங்களுள் ஒன்றிலும் சமூகத் தணிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

மாநிலத்தின் ஊரக மக்களுள் 84 விழுக்காட்டினருக்கு FHTC வழங்கப்பட்டிருந்தும், அவர்களுள் 50 விழுக்காட்டினர் இன்னும் 55 lpcd தண்ணீரைப் பெறவில்லை. பணிகள் மேற்கொள்ளப்படுவதில் இசைவு இல்லாதது, வழங்கப்பட்ட குழாய் இணைப்புகள் பயன்படுத்தப்படாமைக்கு வழிவகுத்தது. மேலும், நான்கு மாவட்ட ஆய்வகங்கள் NABL அங்கீகாரம் பெறாமல் செயல்பட்டு வந்தன. பரிந்துரைக்கப்பட்ட அளவுருக்களுக்கான சோதனை நடத்தப்படவில்லை மற்றும் சோதனையில் நேர்மறை முடிவுகளைக் கொண்ட மாதிரிகளை அடுத்த நிலைக்கு எடுத்துச் சென்று மேலும் சோதனை செய்வதற்கான வழிமுறை இல்லை. மேலும், தாமதமான செயல்படுத்தல், குறைபாடுள்ள திட்டமிடல் போன்ற சிக்கல்களால் பணிகளை செயல்படுத்துவது பாதிக்கப்பட்டது. அனைத்து பயனாளிகளிடமும் குடிநீர் கட்டணங்கள் மதிப்பீடு செய்யப்படாததால் கிராம ஊராட்சிகளில் O&M மீதான செலவினத்தில் கூடுதல் சுமை ஏற்பட்டது. மூன்றாம் தரப்பு ஆய்வு நிறுவனங்களின் கண்காணிப்பு மற்றும் சரிபார்ப்பு செயல்முறைகளில் குறைபாடுகள் காணப்பட்டன.

### நாங்கள் பரிந்துரைப்பது என்ன?

தணிக்கை பின்வரும் பரிந்துரைகளை வழங்கியுள்ளது:

**நிறுவன கட்டமைப்பு மற்றும் திட்டமிடல்:**

- தேவை மதிப்பீடுகளுக்குப் பின்னரே பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று செயல்படுத்தும் நிறுவனங்களுக்கு அரசு உத்தரவு வழங்க வேண்டும். மேலும் உள்ளபடியான தேவைகள் கணக்கிடப்பட்ட பின்னரே மதிப்பீடுகள் தயாரிக்கப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.
- உள்ளூர் கூறுகளில் உருவாக்கப்பட்ட உடைமைகளை பயன்படுத்துவதில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்க்க, செயல்படுத்தும் நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் பணிகளில் ஒத்திசைவை அரசு உறுதி செய்ய வேண்டும்.

**ஜல் ஜீவன் இயக்கத்தின் செயலாக்கம்**

- அனைத்து மாவட்டங்களும் இத்திட்டத்தில் உட்படுத்தப்படுவதை உறுதி செய்யும் வகையில், IMIS போர்ட்டலில் உள்ள குடும்பங்களின் தரவை கால முறையில் புதுப்பிக்குமாறு அரசு, துறையை அறிவுறுத்த வேண்டும்
- ஒப்பந்த நடைமுறைகளில் ஏற்படும் குறைபாடுகளுக்கான பொறுப்பை அரசு நிர்ணயித்து, தொடர்புடைய சட்டம் மற்றும் விதிகள் பின்பற்றப்படுவதை உறுதி செய்ய செயல்படுத்தும் நிறுவனங்களை அறிவுறுத்த வேண்டும்.
- JJMன் கீழ் நீர் வழங்கல் பணிகள் அனைத்தும் தாமதமின்றி நிறைவேற்றப்பட, அவை தொடங்கப்படும் முன்னரே தேவையான அனைத்து ஒப்புதல்களும் பெறப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்யுமாறு TWAD வாரியத்தை அரசு அறிவுறுத்த வேண்டும்.
- அடையப்பட வேண்டிய இலக்கு எட்டப்பட, உருவாக்கப்பட்ட அனைத்து உடைமைகளும் பயன்படுத்தப்பட வேண்டும். இதனை உறுதி செய்ய, பணி நிறைவேற்றப்படுவதில் காணப்பட்ட குறைபாடுகள் விரைவில் முறையாக சரி செய்யப்பட வேண்டும் என்று துறையை அரசு அறிவுறுத்த வேண்டும்.
- உருவாக்கப்பட்ட கட்டமைப்புகள் பயனற்றதாக இருப்பதைத் தவிர்க்கவும், வளங்களின் உகந்த பயன்பாட்டிற்கும், தேவைகளுள்ள குடியிருப்புகளில் மட்டுமே சேமிப்பு உள்கட்டமைப்பு உருவாக்கப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

### நிதி மேலாண்மை

- செயல்பாட்டு வழிகாட்டுதல்களின்படி தேவையான சமூக பங்களிப்புகள் பயனாளிகளிடமிருந்து வசூலிக்கப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.
- கிராம ஊராட்சிகளின் வருவாய் ஆதாரத்தை அதிகரிக்கும் வகையில், அனைத்து பயனாளிகளிடமிருந்தும் குடிநீர் கட்டணங்கள் மதிப்பிடப்பட்டு வசூலிக்கப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

### குடிநீர் தரம் மற்றும் கண்காணிப்பு

- குடிநீர் பரிசோதனை ஆய்வகங்களின் அங்கீகாரம் விரைவில் புதுப்பிக்கப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.
- விரிவான குடிநீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு உரிய நேரத்தில் தீர்வு நடவடிக்கை எடுக்கப்பட அனைத்து உபகரணங்களும் கொள்முதல் செய்யப்பட்டு விரைவில் ஆய்வகங்கள் முழுமையாக செயல்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.
- பரிசோதனைகளை மேற்கொண்டு அவற்றை பதிவேற்றுவதன் மூலம் கள சோதனைப் பெட்டிகள் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்யும்படி, செயல்படுத்தும் முகமைகளை அரசு அறிவுறுத்த வேண்டும்.
- தரமான குடிநீரை வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட எதிர்மறை சவ்வூடு பரவல் ஆலைகளின் பயன்பாட்டை உறுதி செய்ய அரசு துறையை அறிவுறுத்த வேண்டும்.

### செயல்பாட்டுக்குப் பிந்தைய மேலாண்மை, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

- மூன்றாம் தரப்பு ஆய்வு நிறுவனங்களிடமிருந்து அனைத்து வகைகளிலும் முழுமைபெற்ற சரிபார்ப்பு அறிக்கைகள் கிடைத்த பின்னரே ஒப்பந்ததாரர்களுக்கு பணம் விடுவிக்கப்படுகிறது என்பதை உறுதி செய்யுமாறு அரசு துறையை அறிவுறுத்த வேண்டும்.
- சமூகத் தணிக்கை மேற்கொள்ளப்படுவதிலும், குடிநீர் வழங்கலுக்காக உருவாக்கப்பட்ட உடைமைகளை புவிசார் குறியீடு செய்வதிலும் இயக்கத்தின் வழிகாட்டுதல்கள் பின்பற்றப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

### ஜல் ஜீவன் இயக்கத்தின் பலன் மற்றும் விளைவு கட்டமைப்பு

- அனைத்து பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களுக்கும் FHTCகளை வழங்கும் வகையில், அவற்றை JJM வரம்பிற்குள் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# அத்தியாயம் I

# முன்னுரை

# அத்தியாயம் I

# முன்னுரை

## 1.1 ஜல் ஜீவன் இயக்கம் - விரிவான நோக்கங்கள்

'ஊரக சமூகங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில், ஒவ்வொரு ஊரக குடும்பத்திற்கும் பரிந்துரைக்கப்பட்ட தரத்திலான குடிநீரானது நீண்ட கால அடிப்படையில் தொடர்ச்சியாகவும் போதுமான அளவிலும் வழங்கப்பட வேண்டும்' என்ற தொலைநோக்குடன் ஜல் ஜீவன் இயக்கம் ஆகஸ்ட் 2019ல் தொடங்கப்பட்டது. ஜல் ஜீவன் இயக்கம் என்பது ஒரு பரவலாக்கப்பட்ட, தேவை அடிப்படையிலான மற்றும் சமூகத்தால் நிர்வகிக்கப்படும் திட்டமாகும். இந்த இயக்கத்தின் விரிவான நோக்கங்களுள் சில:

- ஒவ்வொரு கிராமப்புற வீட்டிற்கும், பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், கிராம ஊராட்சி கட்டிடங்கள், சுகாதார மையங்கள், நல்வாழ்வு மையங்கள் மற்றும் சமூக கட்டிடங்களுக்கும் குடிநீர் குழாய் இணைப்புகள் (Functional Household Tap Connection - FHTC) வழங்குதல்;
- தரம் பாதிக்கப்பட்ட பகுதிகள், வறட்சி மிகுந்த மற்றும் பாலைவனப் பகுதிகளில் உள்ள கிராமங்கள், நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்ட கிராமங்கள் (Sansad Adarsh Gram Yojana Villages) போன்றவற்றில் FHTCகளை வழங்குவதற்கு முன்னுரிமை அளித்தல்.
- இணைக்கப்பட்ட குடிநீர் குழாய்களின் செயல்பாட்டைக் கண்காணித்தல் மற்றும் பங்களிப்பு[1] மூலம் உள்ளூர் சமூகத்தினரிடையே தன்னார்வம் ஊக்குவிப்பதன் மூலம் உரிமையை மேம்படுத்துதல் மற்றும் உறுதி செய்தல்;
- குடிநீர் மூல ஆதாரம், குடிநீர் விநியோக உள்கட்டமைப்பு மற்றும் தொடர் செயல்பாடு மற்றும் பராமரிப்புக்கான நிதி (O&M) ஆகியவற்றை உள்ளடக்கிய குடிநீர் விநியோக அமைப்பின் நிலைத்தன்மையை உறுதிப்படுத்த உதவுதல்;
- பாதுகாப்பான குடிநீரின் பல்வேறு அம்சங்கள் மற்றும் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் அனைத்து பங்கேற்பாளர்களையும் குடிநீரின் மேலாண்மை மற்றும் பராமரிப்பில் ஈடுபடுத்துதல்.

---

இவ்வறிக்கையில் பயன்படுத்தப்பட்டுள்ள சுருக்கங்கள் பக்கம் 105ல் உள்ள சொற்களஞ்சியத்தில் பட்டியலிடப்பட்டுள்ளன.

[1] பணம், பொருள் மற்றும்/அல்லது உழைப்பு மற்றும் தன்னார்வ பங்களிப்பு (ஷ்ரம்தான்).

## 1.2 நிறுவன அமைப்பு

தமிழ்நாட்டில் ஜல் ஜீவன் இயக்கத்தை செயல்படுத்துவதற்கான நிறுவன அமைப்பு **விளக்கப்படம் 1.1ல்** கொடுக்கப்பட்டுள்ளது. மாநில அளவில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு முதன்மைச் செயலாளர், செயல்படுத்தும் அதிகாரியாகவும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் (Tamil Nadu Water Supply and Drainage - TWAD) வாரியத்தின் நிர்வாக இயக்குநர், தமிழ்நாட்டில் ஜல் ஜீவன் இயக்கத்தின் திட்ட இயக்குநராகவும் உள்ளார்.

**விளக்கப்படம் 1.1: ஜல் ஜீவன் இயக்கத்தை செயல்படுத்துவதற்கான நிறுவன முறை**




## 1.3 தணிக்கை நோக்கங்கள்

பின்வருவனவற்றை உறுதி செய்யும் நோக்கில் செயலாக்கத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது

- திட்டத்தின் நோக்கங்கள் (பலன் மற்றும் விளைவு – Output and Outcome) வெற்றிகரமாக அடையப்பட்டுள்ளனவா.
- திட்டத்தின் மீதான திட்டமிடல், செயல்படுத்தல் மற்றும் செயல்பாட்டுக்குப் பிந்தைய மேலாண்மை ஆகியவற்றிற்கான திறன்மிகு நிறுவன கட்டமைப்பு இருந்ததா.
- நிதி வளங்கள் பொருளாதார ரீதியாகவும் மற்றும் திறன்படவும் பயன்படுத்தப்பட்டுள்ளனவா; மற்றும்

- எதிர்கால சந்ததியினருக்கு குடிநீர் தடைபடாது கிடைக்கும்படி இத்திட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் உடைமைகள் அடுத்த இருபது முதல் முப்பது ஆண்டு காலங்களுக்கு நீடித்து செயல்படுமா?

## 1.4 தணிக்கை அளவுகோல்கள்

தணிக்கை அளவுகோல்களுக்கான முக்கிய ஆதாரங்கள்:

- மத்திய மற்றும் மாநில அரசால் வெளியிடப்பட்ட ஜல் ஜீவன் இயக்கத்தின் செயல்பாட்டிற்கான செயல்பாட்டு வழிகாட்டுதல்கள்;
- குடிநீர் தரம் மற்றும் கண்காணிப்பு கட்டமைப்பு;
- மத்திய பொது சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் அமைப்பு கையேடு 2005;
- தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்ட குறியீடுகள், கையேடு மற்றும் விதிகள்;
- தமிழ்நாட்டில் ஜல் ஜீவன் இயக்கத்தை செயல்படுத்துவதற்கு மாநில அரசின் குறிப்பிட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் அனைத்து உத்தரவுகள்;
- 'தமிழ்நாடு ஒப்பந்த வெளிப்படைத்தன்மை சட்டம் 1998' மற்றும் அதன் கீழுள்ள 'தமிழ்நாடு ஒப்பந்த வெளிப்படைத்தன்மை விதிகள் 2000' ஆகியவற்றின் விதிமுறைகள்

## 1.5 தணிக்கை நோக்கம் மற்றும் செயல்பாட்டுமுறை

தமிழ்நாட்டில் 37 மாவட்ட ஊராட்சிகள் (சென்னை நீங்கலாக 37 மாவட்டங்களுக்கு தலா ஒன்று), 388 ஊராட்சி ஒன்றியங்கள் (வட்டாரங்கள்) மற்றும் 12,525 கிராம ஊராட்சிகள் உள்ளன. 37 மாவட்டங்களுள், **அட்டவணை 1.1ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி, தணிக்கை ஆறு மாவட்டங்களை தெரிவு செய்தது.

**அட்டவணை 1.1: ஜல் ஜீவன் இயக்கத்தில் செயலாக்கத் தணிக்கைக்கான மாதிரி தேர்ந்தெடுப்பு**

| நிலை | தணிக்கை மாதிரித் தேர்ந்தெடுப்பு |
|---|---|
| மாவட்டம் | ஜூன் 30, 2024 வரை வழங்கப்பட்ட குடிநீர் குழாய் இணைப்புகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் மாவட்டங்கள், உயர், சராசரி மற்றும் குறைந்த செயல்திறன் கொண்ட மாவட்டங்களென மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன, மேலும் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் இரண்டு மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டன (**விளக்கப்படம் 1.2**). |
| வட்டாரம் | தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து, சீரற்ற தேர்ந்தெடுப்பு முறையில் இரண்டு வட்டாரங்கள் தெரிவு செய்யப்பட்டன. |
| கிராம ஊராட்சி | தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு வட்டாரத்திலுமிரு , சீரற்ற தேர்ந்தெடுப்பு முறையில் 5 VPகள் தெரிவு செய்யப்பட்டன. |

(ஆதாரம்: அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டுதல்கள்)

தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்கள், வட்டாரங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் விவரங்கள் **இணைப்பு 1.1ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசின் RD&PR மற்றும் MA&WS துறைகள், TWAD வாரியம் மற்றும் DRDAக்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட ஆறு மாவட்டங்கள், வட்டாரங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளில் உள்ள TWAD பிரிவுகளின் செயலகத்தில், பதிவுகள் மீதான ஆய்வு தணிக்கையால் மேற்கொள்ளப்பட்டது. கூடுதலாக, துறை அதிகாரிகளுடன் நேரடி கூட்டுத் தேர்ந்தாய்வு (Joint Physical Verification - JPV), ஒவ்வொரு வட்டாரத்தின் பங்கேற்பாளர்களுடனான குழு கலந்துரையாடல் (Focused Group Discussion - FGD) மற்றும் தெரிவு செய்யப்பட்ட கிராம ஊராட்சிகளில் பயனாளிகள் கருத்தாய்வு ஆகியவற்றையும் தணிக்கை மேற்கொண்டது.

**விளக்கப்படம் 1.2: PAக்காக தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்கள்**




இச்செயலாக்கத் தணிக்கை 2019-2024 காலகட்டத்தை உள்ளடக்கியது. 25 ஜூலை 2024 அன்று MA&WS துறையின் தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளருடன் தொடக்கக் கூட்டம் நடைபெற்றது, இதில், தணிக்கை அளவுகோல்கள் மற்றும் தணிக்கையின் செயற்பரப்பு விவரிக்கப்பட்டது. தணிக்கை முடிவுகளைப் பற்றி விவாதிக்க 10 மார்ச் 2025 அன்று MA&WS துறையின் அரசு முதன்மைச் செயலாளருடன் ஒரு நிறைவுக் கூட்டம் நடைபெற்றது.

தணிக்கை செய்யப்பட்ட நிறுவனங்களால் வழங்கப்பட்ட பதில்கள் பரிசீலிக்கப்பட்டு இவ்வறிக்கையில் பொருத்தமான இடங்களில் இணைக்கப்பட்டுள்ளன.

## 1.6 தமிழ்நாட்டில் ஜல் ஜீவன் இயக்கத்தின் கூறுகள் மற்றும் அவற்றிற்கான செயல்படுத்தும் முகமைகள்

கிராமப்புற வீடுகளுக்கான குடிநீர் விநியோகத்தை உறுதி செய்யும் இலக்கை அடையும் நோக்குடன், தமிழ்நாடு அரசு (GoTN) ஜூன் 2020ல் ‘ஜல் ஜீவன் இயக்கத்தை செயல்படுத்துவதற்கான செயல்பாட்டு வழிகாட்டுதல்களை’ வெளியிட்டது. இது ஆகஸ்ட் 2022ல் மேலும் திருத்தியமைக்கப்பட்டது. ஜல் ஜீவன் இயக்கத்தின் கூறுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

- கிராம ஊராட்சிகளில் ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் குழாய் இணைப்பை வழங்கிட உள்ளூர் அளவிலான குடிநீர் விநியோக உள்கட்டமைப்பை உருவாக்குதல். இதில் குடிநீர் ஆதாரங்களை

மேம்படுத்துதல், சேமிப்பு, விநியோக குழாய் அமைப்புகள் மற்றும் வீட்டு குழாய் இணைப்புகள் ஆகியவை அடங்கும்.

- நிலையான குடிநீர் ஆதாரத்தை (ஒற்றை கிராமத் திட்டம் (Single Village scheme - SVS)[2] மற்றும் பலகிராமத் திட்டம் (Multi Village Scheme - MVS)/கூட்டுக் குடிநீர் திட்டத்தை (Combined Water supply Scheme - CWSS)[3]) உருவாக்குதல் மற்றும்/அல்லது நீர் ஆதாரங்களை மேம்படுத்துவதன் மூலம் குடிநீர் விநியோக அமைப்புகளை நீண்ட காலத்திற்கு செயல்படுத்துதல்.
- குறைந்தபட்சம் நாளொன்றுக்கு ஒரு நபருக்கு 55 லிட்டர்[4] குடிநீர் வழங்கப்படும் வகையில், ஏற்கனவே முடிக்கப்பட்ட மற்றும் செயல்படுத்தப்பட்டு கொண்டிருக்கும் SVS/MVS (CWSS)களின் FHTCகளை மறுசீரமைத்தல்.
- ஆதரவு நடவடிக்கைகள்: உள்ளூர் சமூகங்களிடையே தகவல் பரிமாற்றம், கல்வி மற்றும் தொடர்பு (Information, Education and Communication - IEC), பயிற்சி, பயன்பாடுகளின் மேம்பாடு, மூன்றாம் தரப்பு ஆய்வு, குடிநீர் தர ஆய்வகங்கள், குடிநீர் தர சோதனை மற்றும் கண்காணிப்பு போன்றவை.

தமிழ்நாட்டில் ஜல் ஜீவன் இயக்கத்தின் பல்வேறு கூறுகளை செயல்படுத்தும் நிறுவனங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| **உள்ளூர் உள்கட்டமைப்பு** | : | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (RD&PR) துறை |
| **MVS (CWSS)** | : | தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் (TWAD) |
| **பராமரிப்பு** | : | கிராம ஊராட்சியால் (VP) உள்ளூர் கூறுகள் மற்றும் TWAD வாரியத்தால் CWSS பராமரிக்கப்படுதல் |
| **ஆதரவு நடவடிக்கைகள்** | : | TWAD வாரியம், RD&PR துறை, சுய உதவிக்குழுக்கள் போன்றவை |

2 குடிநீர் ஆதாரம் ஒரு குடியிருப்பு/கிராம ஊராட்சிக்குள் அமைந்துள்ளபோது, அந்த கிராம ஊராட்சியில் உள்ள ஒன்று/ஒன்றுக்கு மேற்பட்ட அல்லது அனைத்து குடியிருப்புகளுக்கும் குடிநீர் விநியோகிப்பதற்கான ஒரு திட்டம். குறைந்தபட்சம் 20 வீடுகள் மற்றும்/அல்லது 100 நபர்களைக் கொண்ட குழுவை குடியிருப்பு என ஜல் ஜீவன் இயக்க செயல்பாட்டு வழிகாட்டுதல்கள் வரையறுக்கிறது.

3 தமிழ்நாட்டில் பல்-கிராமத் திட்டம், கூட்டுக் குடிநீர் திட்டம் என்று அழைக்கப்படுகிறது. இதில் ஒன்றுக்கும் மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு, அதாவது ஒன்றுக்கும் மேற்பட்ட கிராம ஊராட்சிகளுக்கு குடிநீர் விநியோகிக்கப்படுகின்றது.

4 நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு லிட்டரில் (குடிநீர் அளவு).

## 1.7 ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் நிலை

மாநிலத்தில் அனுமதிக்கப்பட்டு, TWAD வாரியத்தால் 2019-24 வரையிலான காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட MVS/CWSS பணிகள், இந்தப் பணிகளுடன் தொடர்புடைய உள்ளூர் கூறுகள் மற்றும் RD&PR துறையால் செயல்படுத்தப்பட்ட SVS பணிகள் மற்றும் டிசம்பர் 2024 நிலவரப்படி இப்பணிகளின் நிலை ஆகியவை **அட்டவணை 1.2ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 1.2: மாநில அளவில் நிலுவையில் இருந்த ஜல் ஜீவன் இயக்கப் பணிகள்**

| MVS (CWSS) பணிகள் - செயல்படுத்தும் நிறுவனம் - TWAD வாரியம் | | | |
|---|---|---|---|
| ஆண்டு | பணிகளின் எண்ணிக்கை | | |
| | அனுமதிக்கப்பட்டது | முடிக்கப்பட்டது | நிலுவையில் உள்ளது |
| 2020-21 | 10 | 9 | 1 |
| 2021-22 | 5 | 3 | 2 |
| 2022-23 | 86 | 62 | 24 |
| 2023-24[5] | 0 | 0 | 0 |
| மேலே குறிப்பிடப்பட்ட MVS (CWSS) பணிகளின் உள்ளூர் கூறு - செயல்படுத்தும் நிறுவனம் - RD&PR துறை | | | |
| புதிய MVS | 7,993 | 5,525 | 2,468 |
| MVS மறுசீரமைப்பு | 2,654 | 2,654 | 0 |
| SVS பணிகள் - செயல்படுத்தும் நிறுவனம் - RD&PR துறை | | | |
| 2020-21 | 15,164 | 15,164 | 0 |
| 2022-23 | 3,244 | 3,244 | 0 |
| 2023-24 | 1,301 | 722 | 579 |

(ஆதாரம்: TWAD வாரியம் மற்றும் RD&PR துறை)

தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில், 2019-24 வரையிலான காலகட்டத்தில், TWAD வாரியம் மற்றும் RD&PR துறையால் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் எண்ணிக்கை மற்றும் டிசம்பர் 2024 நிலவரப்படி இந்தப் பணிகளின் நிலை **அட்டவணை 1.3ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

5 2023-24 ஆம் ஆண்டில் TWAD வாரியத்தால் எந்த புதிய பணிக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. மேலும் முன்னர் அனுமதிக்கப்பட்ட பணிகள் இன்னும் செயல்பாட்டில் இருந்தன.

அட்டவணை 1.3: தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்ட ஜல் ஜீவன் இயக்கப் பணிகளின் நிலை

(எண்களில்)

| மாவட்டம் | TWAD வாரியத்தால் நிறைவேற்றப்பட்ட பணிகள் | | | RD&PR துறையால் நிறைவேற்றப்பட்ட பணிகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | அனுமதிக்கப்பட்டது | முடிக்கப்பட்டது | நிலுவையில் உள்ளது | அனுமதிக்கப்பட்டது | முடிக்கப்பட்டது | நிலுவையில் உள்ளது |
| கோயம்புத்தூர் | 1 | 1 | 0 | 1,196 | 1,196 | 0 |
| நாகப்பட்டினம் | 1 | 0 | 1 | 517 | 326 | 191 |
| இராமநாதபுரம் | 2 | 0 | 2 | 1,565 | 408 | 1,157 |
| சேலம் | 5 | 3 | 2 | 2,570 | 2,553 | 17 |
| தேனி | 0 | 0 | 0 | 452 | 452 | 0 |
| விழுப்புரம் | 1 | 1 | 0 | 457 | 457 | 0 |
| **மொத்தம்** | **10** | **5** | **5** | **6,757** | **5,392** | **1,365** |

(ஆதாரம்: TWAD மற்றும் RD&PR துறை)

தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில், 2020-24 வரையிலான காலகட்டத்தில் 10 முக்கிய பணிகளை TWAD நிறைவேற்றியது. டிசம்பர் 2024 நிலவரப்படி இப்பணிகளின் நிலை **இணைப்பு 1.2ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

## 1.8 ஏற்பு

இச்செயலாக்கத் தணிக்கையை மேற்கொள்வதில் TWAD வாரியம் உட்பட அனைத்து தணிக்கை செய்யப்பட்ட நிறுவனங்கள் மற்றும் துறைகள் வழங்கிய ஒத்துழைப்பிற்கு தணிக்கை ஏற்பு அளிக்கிறது.

## 1.9 அறிக்கை கட்டமைப்பு

தணிக்கை முடிவுகள் பின்வரும் அத்தியாயங்களின் கீழ் தொகுக்கப்பட்டுள்ளன:

- அத்தியாயம் II : நிறுவன கட்டமைப்பு மற்றும் திட்டமிடல்
- அத்தியாயம் III : ஜல் ஜீவன் இயக்கத்தின் செயலாக்கம்
- அத்தியாயம் IV : நிதி மேலாண்மை
- அத்தியாயம் V : குடிநீர் தரம் மற்றும் கண்காணிப்பு
- அத்தியாயம் VI : செயல்பாட்டுக்குப் பிந்தைய மேலாண்மை, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு
- அத்தியாயம் VII : ஜல் ஜீவன் இயக்கத்தின் பலன் மற்றும் விளைவு கட்டமைப்பு

# அத்தியாயம் II

# நிறுவன கட்டமைப்பு மற்றும் திட்டமிடல்

# அத்தியாயம் II

## நிறுவன கட்டமைப்பு மற்றும் திட்டமிடல்

**கிராமப்புற குடிநீர் மற்றும் சுகாதாரக் குழு கூட்டங்கள் நடத்தப்படாததால், தேவை மதிப்பீடு மேற்கொள்ளப்படாமல் கிராம செயல் திட்டங்கள் வகுக்கப்பட்டன. இது திட்டம் செயல்படுத்தப்படுதலை பாதித்தது. தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில், 2019-24 வரையிலான காலகட்டத்தில், நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையிலான கூட்டங்கள் மாவட்ட குடிநீர் மற்றும் சுகாதாரக் குழுவால் நடத்தப்படவில்லை. கிராம ஊராட்சிகளின் தேவைகளை உறுதிப்படுத்த எந்த அடிப்படை கணக்கெடுப்பும் நடத்தப்படாததால், பணிகள் ரத்து செய்யப்பட நேரிட்டது. செயல்படுத்தும் நிறுவனங்களான தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பணிகளில் ஒருங்கிணைப்பு காணப்படவில்லை.**

## 2.1 ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் நிறுவன கட்டமைப்பு

அனைத்து கிராமப்புற வீடுகளுக்கும் குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்படுவதை நோக்கமாகக் கொண்ட பல்வேறு கூறுகளை செயல்படுத்துவதற்கான முறையான திட்டமிடலை ஜல் ஜீவன் இயக்கத்தின் செயல்பாட்டு வழிகாட்டுதல்கள் முக்கியத்துவப்படுத்தியுள்ளது. செயல்பாட்டு முறைகள், மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள், அடையப்பட வேண்டிய பலன்கள் போன்றவற்றைக் குறிப்பிடும் கிராமம், மாவட்டம் மற்றும் மாநில அளவிலான செயல் திட்டங்கள், **விளக்கப்படம் 2.1ல்** விவரிக்கப்பட்டுள்ளபடி தயாரிக்கப்பட்டு இறுதி செய்யப்பட வேண்டும்.

**விளக்கப்படம் 2.1: JJM திட்டமிடலின் நிலைகள்**

**கிராம செயல் திட்டம் (VAP)**

அடிப்படை கணக்கெடுப்பு, வள இணைப்பு மற்றும் கிராம சமூகத்தின் தேவைகள் ஆகியவற்றின் அடிப்படையில் VWSCஆல் தயாரிக்கப்பட்டு கிராமத்தின் கிராம சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

**மாவட்ட செயல் திட்டம் (DAP)**

அனைத்து VAPகளும் ஒருங்கிணைக்கப்பட்டு, கால வரம்பு, நீர் ஆதாரங்கள், பராமரிப்பு மற்றும் நிதி அம்சங்கள் போன்றவற்றின் மீதான பகுப்பாய்வு மூலம் DWSMஆல் இறுதி செய்யப்பட வேண்டும்.

**மாநில செயல் திட்டம் (SAP)**

அனைத்து DAPகளும் ஒருங்கிணைக்கப்பட்டு, அதனோடு நடவடிக்கைகள் மற்றும் நிதிகளின் ஒருங்கிணைப்பு, குடிநீர் குழாய் இணைப்புகளை உறுதி செய்தல் மற்றும் இணைக்கப்பட வேண்டிய அம்சங்கள் முன்னுரிமையின்படி இணைக்கப்படுதல் ஆகியவற்றை மேற்கொண்டு, SWSMஆல் இறுதி செய்யப்பட வேண்டும்.

ஒரு ஆண்டுக்கான செயல்பாடு மற்றும் நிதி இலக்குகளைக் கொண்ட வருடாந்திர செயல் திட்டம் (Annual Action Plan - AAP) SAPயிலிருந்து உருவாகிறது. இது மத்திய அரசின் குடிநீர் மற்றும் சுகாதாரத் துறையால் (Department of Drinking Water and Sanitation - DDWS) அங்கீகரிக்கப்படுகிறது. ஜல் ஜீவன் இயக்கத்தின் மாநிலத்திற்கான வழிகாட்டுதல்களிலும் திட்டமிடல் உத்தி மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## 2.2 கிராமப்புற குடிநீர் மற்றும் சுகாதாரக் குழுவின் செயல்பாடு

கிராம செயல் திட்டம் (Village Action Plan - VAP) என்பது ஒரு கிராமத்திலுள்ள வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்படுவது மற்றும் பிற தேவைகளை நிவர்த்தி செய்யும் ஒரு விரிவான ஆவணமாகும். ஜல் ஜீவன் இயக்கத்தின் வழிகாட்டுதல்களின்படி, அடிப்படை ஆய்வுகள் மற்றும் சமூகத் தேவைகளின் அடிப்படையில், கிராம ஊராட்சி அல்லது கிராம குடிநீர் மற்றும் சுகாதாரக் குழு (Village Water and Sanitation Committee - VWSC) போன்ற அதன் துணைக் குழுக்களால் VAPகள் தயாரிக்கப்பட வேண்டும். நிதித் தேவைகள், கால வரம்பு, கழிவுநீர் சுத்திகரிப்பு, மறுபயன்பாட்டுத் திட்டங்கள் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை VAP விவரித்துக் காட்டுகிறது. கிராமத்தில் உள்ள அனைத்து குடிநீர் தொடர்பான பணிகளின் ஒருங்கிணைப்பு மற்றும் செயல்திறனுக்கு VAP பின்பற்றப்பட வேண்டும்.

தமிழ்நாட்டில், ‘வளர்ச்சிக் குழு’ உட்பட பல்வேறு குழுக்களை VPகளுக்காக நிறுவ தமிழ்நாடு அரசு உத்தரவுகளை பிறப்பித்தது (ஜூலை 2005). ஜல் ஜீவன் இயக்க செயல்பாட்டிற்குப்பின், மேற்கூறப்பட்ட வளர்ச்சிக் குழுவானது JJM செயல்பாட்டிற்கான VWSC ஆகவும் செயல்படும் என தமிழ்நாடு அரசு மார்ச் 2020ல் ஆணைகளை பிறப்பித்தது. குடிநீர் வழங்கல் திட்டங்களை நிர்வகித்தல், திட்டமிடுதல், செயல்படுத்துதல் மற்றும் உள்கட்டமைப்பை பராமரித்தல், குடிநீர் இருப்பு, அவற்றின் தரம் மற்றும் குடிநீர் குழாய் இணைப்பின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான VAP ஐத் தயாரிப்பதற்காக இவ்வாணை பிறப்பிக்கப்பட்டது.

- தெரிவு செய்யப்பட்ட VPகளில் VWSCகளின் உருவாக்கம் குறித்த தணிக்கை வினாத்தாளில், தெரிவு செய்யப்பட்ட 60 VPகளுள் 52ல் VWSCகள் உருவாக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.
- விழுப்புரம் மாவட்டத்தில், 2021-22 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட 10 VPகளில் VWSC நிறுவப்பட்டிருந்ததை பதிவுகளின் தணிக்கை ஆய்வு வெளிப்படுத்தியது. இருப்பினும், இந்த கிராமங்களில் உள்ள ஒவ்வொரு குழுவும் ஒரு கூட்டத்தை மட்டுமே நடத்தியிருந்தன (அதாவது, குழு உருவாக்கப்பட்ட போது). இது சுட்டிக்காட்டப்பட்டபோது, தெரிவு செய்யப்பட்ட வட்டாரங்களின் BDOக்கள், அந்தந்த குழுவின் உறுப்பினர்களைக் கண்காணித்து காலமுறையில் கூட்டம் நடத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதிலளித்தனர்.
- இராமநாதபுரம் மாவட்டத்தில், 2023ல் VWSC உருவாக்கப்பட்டது, அதற்குப் பின் எந்த கூட்டங்களும் நடத்தப்படவில்லை.

- சேலம் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட VPகளிலும் VWSCகள் செயல்படவில்லை.

VWSC கூட்டங்கள் நடத்தப்படாததால், எந்தவொரு தேவை மதிப்பீடோ அல்லது அடிப்படை கணக்கெடுப்போ இல்லாமல் VAPகள் உருவாக்கப்பட்டன, இது திட்டம் செயல்படுத்தப்படுவதில் தாக்கத்தை ஏற்படுத்தியது.

## 2.3 கிராம செயல் திட்டங்களை தயாரிப்பதில் இருந்த குறைபாடுகள்

தமிழ்நாட்டிற்கான JJM டேஷ்போர்டு தரவுகளின்படி, மாநிலத்தில் உள்ள மொத்தம் 12,525 VPகளுள் 11,558 VPகளுக்கு (92.29 விழுக்காடு) VAP தயாரிக்கப்பட்டிருந்தது. தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களைச் சார்ந்த ஒன்பது VAPகளின் மீதான சோதனை சரிபார்ப்பு பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது:

- மேற்கூறப்பட்ட ஒன்பது கிராமங்கள் எதிலும் அதன் மக்கள் தொகை, வீடுகளின் எண்ணிக்கை மற்றும் அதற்கேற்ற அவற்றின் குடிநீரின் தேவை ஆகியவை அதன் குடிநீர் ஆதாரங்களுக்கு ஏற்றதாக இல்லை.
- செயல் திட்டங்களில் கழிவு நீர் மேலாண்மை (உறிஞ்சுக் குழிகள்/கழிவு நிலைப்படுத்தும் நீர்நிலை போன்றவை) கவனிக்கப்படவில்லை.
- ஒன்பது VAP ஆவணங்களுள் மூன்றில்[1] செயல்பாட்டு வழிகாட்டுதல்களின் பரிந்துரைக்கப்பட்ட வடிவமைப்பு பின்பற்றப்படவில்லை மற்றும் VAP ஆவணங்களில் எதுவும் முறையாக கையொப்பமிடப்படவில்லை[2].
- ஒன்பது கிராமங்களும் வள ஆதாரங்கள் மற்றும் சமூக மேப்பிங் செய்திருப்பதாக அறிவித்திருந்த போதிலும், அவை VAP உடன் இணைக்கப்படவில்லை.
- தேனி மாவட்டத்தின் கோகிலாபுரம் கிராமத்தில், சமூக பங்களிப்பு VAPல் குறிப்பிடப்பட்டிருந்தாலும், கிராமவாசிகள் திட்டச் செலவில் பங்களிக்க விரும்பவில்லை என்பது JPVன் போது கவனிக்கப்பட்டது, இதன் விளைவாக முன்மொழியப்பட்ட பணிகள் ரத்து செய்யப்பட நேரிட்டது.
- தெரிவு செய்யப்பட்ட மற்ற VPகள் எந்தவொரு விரிவான VAPஐயும் உருவாக்காமல், கிராமத்தில் ஜல் ஜீவன் இயக்கத்தை செயல்படுத் ட, போர்ட்டலில் பதிவேற்றப்பட்ட தகவல்களை மட்டுமே VAPஆக முன்வைத்தன.

இறுதி வேலையை செயல்படுத்துதல் (உள்ளூர் கூறுகளில்) மற்றும் SVS ஆகியவை VPகளின் பொறுப்புகளாகும். விரிவான அடிப்படை கணக்கெடுப்பு மற்றும் தேவை மதிப்பீடுகள் இல்லாமல் உருவாக்கப்பட்ட

1 கோகிலாபுரம், நாகையகவுண்டன்பட்டி, சில்லமரத்துப்பட்டி.

2 தலைவர், பொது சுகாதாரப் பொறியியல் துறை/ஊரகக் குடிநீர் வழங்கல் அதிகாரி & ஆதரவு செயல்பாட்டு முகமைகளின் பிரதிநிதி ஆகியோரால்.

VAPகள் உள்ளபடியான தேவைகளைப் பிரதிபலிக்கவில்லை. இதனால், **பத்தி 2.5.1ல்** வழங்கப்பட்டுள்ளபடி பணிகளைச் செயல்படுத்துவதில் தாக்கத்தை ஏற்படுத்தியது.

## 2.4 மாவட்ட குடிநீர் மற்றும் சுகாதாரக் குழுவின் செயல்பாடு

மத்திய அரசின் ஜல் ஜீவன் இயக்க செயல்பாட்டு வழிகாட்டுதல்களின்படி, மாவட்டங்களில் உள்ள மாவட்ட குடிநீர் மற்றும் சுகாதாரக் குழு (District Water and Sanitation Mission - DWSM), மாவட்ட செயல் திட்டங்களை (DAPகள்) தயாரித்தல், இறுதி செய்தல் மற்றும் செயல்படுத்துதலுக்கான பொறுப்பைக் கொண்டுள்ளது, இதன் அடிப்படையில் மாநில செயல் திட்டம் ஒருங்கிணைக்கப்படுகிறது. ஜல் ஜீவன் திட்டத்தில், குறை தீர்ப்பு தவிர, மாவட்டத்தின் செயல்பாடு மற்றும் நிதியின் செயல்திறனை DWSM கண்காணித்து மதிப்பீடு செய்கிறது.

மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு அனைத்து மாவட்டங்களிலும் DWSM-ஐ அமைப்பதற்கான ஆணைகளை தமிழ்நாடு அரசு வெளியிட்டது (மார்ச் 2020). இது திருத்தம் செய்யப்பட்டு (ஏப்ரல் 2020) DRDA திட்ட இயக்குநரை தலைவராகக் கொண்ட மாவட்ட அளவிலான திட்ட மேலாண்மை அலகு (Project Management Unit - PMU) அமைக்கப்பட்டது.

உள்ளூர் குடிநீர் வழங்கல் திட்டங்கள் மற்றும் கழிவு நீர் மேலாண்மை போன்றவற்றுக்கான நிர்வாக ஒப்புதலை பரிசீலித்து வழங்குவதற்காக DWSM மாதாந்திர கூட்டங்களைக் கூட்ட வேண்டும் என்று ஜல் ஜீவன் இயக்க செயல்பாட்டு வழிகாட்டுதல்கள் கூறுகின்றன. மாநிலத்தில் உள்ள 37 மாவட்டங்களுக்கும் (சென்னை தவிர) DAPகள் உருவாக்கப்பட்டு மாநில செயல் திட்டத்தில் (SAP) இணைக்கப்பட்டுள்ளதாக TWAD திட்ட இயக்குநர் கூறினார் (அக்டோபர் 2024). இருப்பினும், தணிக்கை ஆய்வு, 2019-20 முதல் 2023-24 வரை தெரிவு செய்யப்பட்ட ஆறு மாவட்டங்களுள் ஒன்றிலும் ஒரு ஆண்டுக்கான கட்டாயமாக்கப்பட்ட 12 கூட்டங்கள் நடத்தப்படவில்லை என்பதை வெளிப்படுத்தியது. நடத்தப்பட்ட கூட்டங்களின் விவரங்கள் **அட்டவணை 2.1ல்** விவரிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.1: தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் நடத்தப்பட்ட DWSM கூட்டங்களின் விவரங்கள்**

| மாவட்டம் | உருவாக்கப்-பட்ட நாள் | நடத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை | கூட்டங்கள் நடத்தப்பட்ட தேதி |
|---|---|---|---|
| கோயம்புத்தூர் | 12-05-2020 | 3 | விவரங்கள் வழங்கப்படவில்லை |
| நாகப்பட்டினம் | 22-04-2020 | 2 | 22-04-2020 மற்றும் 17-03-2022 |
| இராமநாதபுரம் | 20-03-2020 | 2 | 25-02-2021 மற்றும் 04-03-2022 |
| சேலம் | 06-04-2020 | 4 | 09-02-2021, 26-02-2021, 07-03-2022 மற்றும் 06-05-2022 |
| தேனி | 28-04-2020 | 1 | 13-01-2022 |
| விழுப்புரம் | 30-04-2020 | 3 | 21-09-2020, 27-11-2021 மற்றும் 07-11-2022 |

(ஆதாரம்: DRDA பதிவேடுகள்)

காலமுறையில் கூட்டங்கள் நடத்தப்படாதது மாவட்ட அளவில் இருந்த கண்காணிப்புக் குறைவைக் குறிப்பதாகத் தணிக்கை கண்டது.

### 2.4.1 மாநில குடிநீர் மற்றும் சுகாதாரக் குழுவின் செயல்பாடு

மத்திய அரசின் செயல்பாட்டு வழிகாட்டுதல்களின்படி, மாநில குடிநீர் மற்றும் சுகாதாரக் குழு (State Water and Sanitation Mission - SWSM) என்பது ஜல் ஜீவன் இயக்கத்தின் வெற்றிகரமான செயல்பாட்டிற்குத் தேவையான அதிகாரங்களைக் கொண்ட ஒரு மாநில அளவிலான நிறுவனமாகும். SWSM ஒரு தலைமைக் குழு மற்றும் ஒரு செயற்குழுவைக் கொண்டிருக்கும்.

இத்தலைமைக் குழு மாநில தலைமைச் செயலாளர் தலைமையில் செயல்படும். கிராமப்புற குடிநீர் விநியோகம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள், தொடக்கக் கல்வி, சுகாதாரம், நிதி, திட்டமிடல், தகவல் மற்றும் மக்கள் தொடர்புத் துறைகளின் செயலாளர்கள் மற்றும் மத்திய அரசின் பிரதிநிதி ஆகியோர் இதன் உறுப்பினர்களாவார்கள். கொள்கை வழிகாட்டுதலை வழங்குதல், மாநிலத்தில் ஜல் ஜீவன் இயக்கத்தின் ஒட்டுமொத்த திட்டமிடல், அதற்கான உத்திகளை வகுத்தல் மற்றும் செயல்படுத்துதல் ஆகியவற்றிற்கு தலைமைக் குழு பொறுப்பேற்கிறது. மேலும் 2024 ஆம் ஆண்டுக்குள் ஒவ்வொரு கிராமப்புற வீட்டிலும் FHTC வழங்கப்படும் வகையில் மாநில செயல் திட்டத்தை இறுதி செய்வதற்கும் பொறுப்பேற்கிறது.

TWAD வாரியத்தின் திட்ட இயக்குநர் வழங்கிய விவரங்களின்படி, தமிழ்நாட்டிற்கான மாநில செயல் திட்டம், 37 மாவட்டங்களின் DAPகளின் அடிப்படையில் அக்டோபர் 2021ல் இறுதி செய்யப்பட்டு, நவம்பர் 2021ல் மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டது. SAP, தமிழ்நாட்டில் 99 CWSSகளை மறுசீரமைத்து, 78 புதிய MVSகளையும் நிலையான உள்ளூர் குடிநீர் ஆதாரங்கள் கொண்ட கிராமங்களில் SVSகளையும் வழங்குவதன் மூலம் அனைத்து கிராமப்புற வீடுகளும் FHTCகளால் தன்னிறைவு நிலையை அடையும் வகையில் தயாரிக்கப்பட்டது.

தலைமைக் குழு ஆண்டுக்கு இரண்டு முறை அல்லது இயன்றவரை காலாண்டுக்கு ஒரு முறையாவது கூட்டப்பட மத்திய அரசு வழிகாட்டுதல்கள் அறிவுறுத்துகின்றன. இருப்பினும், 2023-24 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள தலைமைக் குழு ஒரு முறை கூட கூட்டப்படவில்லை என்பதை தணிக்கை கவனித்தது. கூட்ட நடவடிக்கைகளின் சுருக்கக் குறிப்புகளை மதிப்பாய்வு செய்ததில், நடவடிக்கை அறிக்கைகள், செயல்படுத்தலுக்கான காலக்கெடு, முந்தைய முடிவுகளின் மதிப்பாய்வு போன்ற முறையான வழிமுறை எதுவும் இல்லை என்பதை வெளிப்படுத்தியது. இக்குறைபாடுகள், தொடர்ச்சியான கண்காணிப்பு இல்லாமையையும், அதன் விளைவாக திட்டங்கள் முடிக்கப்படுவதில் ஏற்பட்ட தாமதத்தையும் குறிக்கின்றன.

## 2.5 ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் பணிகளைத் திட்டமிடுவதில் இருந்த சிக்கல்கள்

தமிழ்நாட்டில், சென்னை பெருநகர மேம்பாட்டுப் பகுதிகளைத் தவிர, குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வசதிகளை மேம்படுத்தும் பொறுப்பு TWAD வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தவிர, முக்கிய CWSS/MVS பணிகளைப் பராமரிப்பதும் அதன் பொறுப்பாகும். இத்திட்டத்தின் கீழ் உள்ளூர் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான பொறுப்பு RD&PR துறையிடம் உள்ளது.

JJMன் தமிழ்நாடு அரசு வழிகாட்டுதல்கள், குடிநீரின் தேவை மற்றும் அதன் இருப்பை அடிப்படையாகக் கொண்டு திட்டமிடல் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று உரைக்கிறது. அதன்படி, நிலத்தடி நீர் பரிந்துரைக்கப்பட்ட தரத்தைக் கொண்டும், அடுத்த 30 ஆண்டுகளுக்கான தேவையை பூர்த்தி செய்யவும் இயலுமாயின், SVS/மறுசீரமைப்பு திட்டங்கள் முன்மொழியப்பட வேண்டும். மேலும் போதுமான நிலத்தடி நீர் கிடைக்காத இடங்களில், MVS முன்மொழியப்பட வேண்டும். திட்டமிடல் குறித்த தணிக்கை குறிப்புகள் பின்வரும் பத்திகளில் கூறப்பட்டுள்ளன.

### 2.5.1 RD&PR துறையால் செயல்படுத்தப்படும் பணிகளுக்கான திட்டம்

VAP என்பது அனைத்து கிராமப்புற வீடுகளுக்கும் FHTCகளை வழங்குவதுடன் ஒரு கிராமத்தின் தேவைகளை நிவர்த்தி செய்யும் ஒரு விரிவான ஆவணமாகும். கிராமத்தில் உள்ள அனைத்து குடிநீர் தொடர்பான பணிகளும் ஒருங்கிணைப்பு மற்றும் செயல்திறனுக்காக VAPஐப் பின்பற்ற வேண்டும். VPகளில் JJM பணிகளைத் திட்டமிடுவதில் பின்வரும் குறைபாடுகள் கவனிக்கப்பட்டன.

#### *2.5.1.1 தேவை மதிப்பீடு இல்லாமல் மேற்கொள்ளப்பட்ட பணிகள் - இராமநாதபுரம்*

சோதனை சரிபார்க்கப்பட்ட VPகளில், மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு 2023ஆம் ஆண்டில் மட்டுமே VWSC உருவாக்கப்பட்டது என்பதை தணிக்கை கவனித்தது. மேலும், குழுவின் வழக்கமான கூட்டங்களோ அல்லது கிராம அளவிலான தேவைகளை மதிப்பிடுவதற்கான கணக்கெடுப்போ நடத்தப்படவில்லை. இதன் விளைவாக, கீழே கூறப்பட்டுள்ளபடி சமூகத்தின் தேவைகளுடன் ஒருங்கிணைப்பு இல்லாதிருந்தது:

- திருப்புல்லாணி வட்டாரத்தில் உள்ள பெரியபட்டினம் VPல் 12 பணிகள் மேற்கொள்ளப்பட, ₹3.51 கோடியை இராமநாதபுரம் DRDA ஜூலை 2020ல் அனுமதித்திருந்தது. மேலும் செப்டம்பர் 2021ல் பணி ஆணைகள் வழங்கப்பட்டன. இருப்பினும், ஒப்புதல் அளிக்கப்பட்ட 12 பணிகளுள் நான்கு மட்டுமே தொடங்கப்பட்டிருந்தன. மீதமுள்ள எட்டு பணிகள் அவை தொடங்கப்படுவதற்கு முன்னரே ரத்து செய்யப்பட்டன. இந்தப் பணிகளுக்கான செலவினம் **அட்டவணை 2.2ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.2: திருப்புல்லாணி வட்டாரத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரங்கள்**

**(₹ இலட்சத்தில்)**

| வ. எண் | பணி | மதிப்பீடு | செலவினம் |
|---|---|---|---|
| 1 | பெரியபட்டினம் VPல் உள்ள முத்தராயர்நகர் கிராமத்தில் FHTC வழங்குதல், பிரதான நீருந்து குழாய் வழங்குதல், 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி (OHT) கட்டுமானம் மற்றும் குழாய் நீட்டிப்பு | 18.60 | 3.88 |
| 2 | பெரியபட்டினம் VPல் உள்ள கருச்சாண்குண்டு கிராமத்தில் FHTC, பிரதான நீருந்து குழாய் மற்றும் குழாய் நீட்டிப்பு | 8.48 | 7.36 |
| 3 | பெரியபட்டினம் VPல் உள்ள மங்கமாபுரம் கிராமத்தில் FHTC வழங்குதல், பிரதான நீருந்து குழாய் வழங்குதல், 30,000 லிட்டர் கொள்ளளவில் OHT கட்டுமானம் மற்றும் குழாய் நீட்டிப்பு | 31.29 | 7.56 |
| 4 | பெரியபட்டினம் VPல் தெற்கு குடியிருப்பு கிராமத்தில் FHTC வழங்குதல், பிரதான நீருந்து குழாய் வழங்குதல், 30,000 லிட்டர் கொள்ளளவில் OHT கட்டுமானம் மற்றும் குழாய் நீட்டிப்பு | 21.50 | 6.67 |
| | **மொத்தம்** | **79.87** | **25.47** |

(ஆதாரம்: DRDA, இராமநாதபுரம்)

உள்ளூர் சமூகத்தினர், தங்கள் கிராமத்தில் ஏற்கனவே குடிநீர் வசதி இருந்ததன் காரணமாக JJM செயல்பாட்டின் மீது ஆட்சேபனை தெரிவித்ததால் நான்கு பணிகளும் நிறுத்தப்பட்டன. இவ்வாறு, VWSC இல்லாததால், தேவை மதிப்பீடு இல்லாமலேயே பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. VAPன் சரியான பகுப்பாய்விற்குப் பிறகுதான் பணிகள் மேற்கொள்ளப்பட்டன என்று அரசு பதிலளித்தது (ஜூலை 2025). இருப்பினும், செயல்படுத்தலின் போது கிராம மக்கள் இதற்கு எதிராக இருந்தது மட்டுமின்றி சமாதானக் குழு கூட்டங்களுக்குப் பிறகும் அவர்கள் ஏற்கவில்லை. இதன் விளைவாக பணிகள் ரத்து செய்யப்பட்டன. VAPல் பணிகளைத் திட்டமிடுவதில் குறைபாடுகள் இருந்ததை பதில் சுட்டிக்காட்டியது.

- ஜூலை 2020ல், திருப்புல்லாணி வட்டாரத்தில் தினைக்குளம் VPல் மூன்று திறந்தவெளி கிணறுகள் கட்டும் பணிகளுக்காக ₹95.82 இலட்சம் இராமநாதபுரம்

**விளக்கப்படம் 2.2: தினைக்குளம் VPல் இருந்த பயன்படுத்தப்படாத திறந்தவெளி கிணறு**



DRDAஆல் அனுமதிக்கப்பட்டிருந்தது. செப்டம்பர் 2024ல் திருப்புல்லாணி வட்டாரத்தில் நடத்தப்பட்ட JPVன் போது, மூன்று கிணறுகளும் கட்டுமானத்திற்குப் பிறகு பயன்படுத்தப்படாமல் இருந்ததை தணிக்கை கவனித்தது **(விளக்கப்படம் 2.2)**. பணி தொடங்கப்படும் நேரத்தில், உள்ளூர்வாசிகள், நியமிக்கப்பட்ட பகுதியில் கிணறு வெட்டப்படுவதைத் தொடர வேண்டாம் என்று துறையிடம் கோரிக்கை விடுத்தனர். ஏனெனில், அந்தப் பகுதியில் நிலத்தடி நீர் உப்புத்தன்மை கொண்டது மற்றும் குடிக்கத் தகுதியற்றது எனவும், திட்டம் அவர்களின் தேவைகளுக்குப் பொருந்தாத ஒன்று எனவும் கூறினர். இருப்பினும், கிணறு கட்டப்பட்டு, தண்ணீரின் பயன்பட்டிற்குத் தகுதியற்ற தன்மை காரணமாக VPகளால் அது பயன்படுத்தப்படாமல் இருந்தது. குடிநீர் விநியோகத்திற்கான பொருத்தமான நீர் ஆதாரத்தைக் காணத்தவறியதற்காக தொடர்புடைய அதிகாரிகள் மீது திட்ட இயக்குநர் நடவடிக்கை எடுப்பார் என்றும் அரசு கூறியது (ஜூலை 2025).

இவ்வாறு, JJM ஒரு சமூக மேலாண்மை இயக்கமாக இருப்பதால், பங்கேற்புத் திட்டமிடலை உறுதி செய்வதில் காணப்பட்ட தோல்வி மற்றும் சமூகத் தேவைகளை அடைவதில் காணப்பட்ட இசைவின்மை ஆகிய காரணங்களால் திட்டத்தின் குறிக்கோளை அடைய இயலவில்லை. மேலும், ஆழ்துளைக் கிணறுகளின் கட்டுமானத்தால் பயனற்ற செலவினமும் நிறுத்தப்பட்ட பணிகளால் வீணான செலவினமும் ஏற்பட நேரிட்டது.

### *2.5.1.2 FHTC தேவையின் முறையற்ற மதிப்பீடு - தேனி*

தமிழ்நாட்டில் ‘வீடுதோறும் குடிநீர்’ (ஹர் கர் ஜல்) என அறிவிக்கப்பட்ட மாவட்டங்களுள் தேனி மாவட்டமும் ஒன்றாகும். JJMன் கீழ், 2020-21ஆம் ஆண்டில், தேனி DRDA ஆல் அனுமதிக்கப்பட்ட 18 பணிகள் தொடர்பான பதிவுகளை தணிக்கை சோதனை சரிபார்த்தது. இரண்டு[3] வட்டாரங்களில் உள்ள வீடுகளுக்கு FHTCகளை வழங்குவதும் இப்பணிகளில் அடங்கும். இந்த பணிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளில், 4,339 FHTCகளை வழங்க முன்மொழியப்பட்டிருந்த போதிலும், அடையப்பட வேண்டிய இலக்கில் 40 விழுக்காடாகிய 1,723 இணைப்புகள் மட்டுமே வழங்கப்பட்டிருந்தன. மதிப்பீடுகளில் முன்மொழியப்பட்ட மற்றும் வழங்கப்பட்டிருந்த FHTCகளின் விவரங்கள் **இணைப்பு 2.1ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

இக்குடியிருப்புகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கான JJM டேஷ்போர்டு தரவை தணிக்கை குறுக்கு சரிபார்த்ததில், இரண்டு வட்டாரங்களின் குடியிருப்புகளிலும் 100 விழுக்காடு பணி மேற்கொள்ளப்பட்டிருந்தது கவனிக்கப்பட்டது. மேலும், டேஷ்போர்டு தரவுகளின்படி, இந்த குடியிருப்புகளில் வேறு எந்தப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை, என்பதால் 4,339 FHTCக்கள் முன்மொழியப்பட்டிருந்த இவ்வட்டாரங்களின் தேவை 1,723 FHTCகள் மட்டுமே. VAP தயாரிக்கப்படும் போது முழுமையான அடிப்படை கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தால் ஏற்கனவே உள்ள

[3] பெரியகுளம் மற்றும் உத்தமபாளையம் வட்டாரங்கள்.

குழாய் இணைப்புகளை அடையாளம் காண உதவியிருக்கக்கூடும். கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படாத நிலையில், கிராமத்தில் தேவைப்படும் FHTCகளின் உள்ளபடியான எண்ணிக்கை மிகைப்படுத்தப்பட்டு, அதன் விளைவாக, மதிப்பீடுகளின் துல்லியமும் JJMன் கீழ் பணிகள் செயல்படுத்தப்படுவதும் பாதிக்கப்பட்டது.

பல பயனாளிகள் தங்கள் சொந்த நீர் ஆதாரத்தைப் பயன்படுத்த ஆர்வம் காட்டியதாகவும், அதன் விளைவாக மீதமுள்ள வீடுகளுக்கு FHTC வழங்கப்பட்டதாகவும் அரசு பதிலளித்தது (ஏப்ரல் 2025). மேலும், FHTC பணிகளின் போது அதிக எண்ணிக்கையிலான சட்டவிரோத இணைப்புகள் சரிசெய்யப்பட வேண்டி இருந்ததாகவும் கூறப்பட்டது. FHTCகளின் தேவையான எண்ணிக்கை மற்றும் ஏற்கனவே இருக்கும் இணைப்புகளின் எண்ணிக்கை பணிகளின் முன்மொழிவிற்கு முன்பு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதை பதில் சுட்டிக்காட்டியது.

### *2.5.1.3 கணக்கெடுப்பு இல்லாமல் மேற்கொள்ளப்பட்ட பணிகள் - கோயம்புத்தூர்*

கோயம்புத்தூர் DRDA வழங்கிய விவரங்களின்படி, 2020-24 ஆண்டுகளில் மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்ட 1,074 உள்ளூர் பணிகளுள், 945 பணிகள் முடிக்கப்பட்டு, ஜனவரி 2025 நிலவரப்படி 129 பணிகள் நிலுவையில் இருந்தன. பதிவேடுகளின் மீதான ஆய்வு, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரின் நடவடிக்கைகளின்படி, நிலுவையில் இருந்த 129 பணிகளும் ரத்து செய்யப்பட்டதை வெளிப்படுத்தியது. இந்தப் பணிகளுள் ஆறு பணிகள், BDO (VP)ன் வேண்டுகோளின் பேரிலும், இந்தப் பணிகளின் கீழ் முன்மொழியப்பட்ட வீடுகளில் ஏற்கனவே இருந்த FHTCகளின் அடிப்படையிலும் ரத்து செய்யப்பட்டிருந்ததை தணிக்கை கவனித்தது. இது பணிகள் முன்மொழியப்படுவதற்கு முன்பதாக எவ்வித கணக்கெடுப்பு அல்லது திட்டமிடல் மேற்கொள்ளப்படவில்லை என்பதைக் குறிப்பதாக இருந்தது.

### *2.5.1.4 தேவையின் தவறான மதிப்பீடு - நாகப்பட்டினம்*

நாகப்பட்டினம் மாவட்டத்தில் மூன்று பணிகளின் மதிப்பீடுகள் மற்றும் பணி நிறைவு அறிக்கைகளை தணிக்கை சோதனை சரிபார்த்தது. மதிப்பீடு மற்றும் செயல்பாட்டிற்கு இடையே காணப்பட்ட வேறுபாடுகள் **அட்டவணை 2.3ல்** வழங்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.3: நாகப்பட்டினம் மாவட்டத்தில் முன்மொழியப்பட்ட மற்றும் நிறுவப்பட்ட FHTCகளின் எண்ணிக்கையில் இருந்த வேறுபாடுகள்**

| குடியிருப்பு | குழாய்களின் நீட்டிப்பு (EPL) (மீட்டரில்) | | FHTCகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | முன்மொழியப்–பட்டது | நிறைவேற்றப் பட்டது (அதிகம் - விழுக்காட்டில்) | முன்மொழியப்–பட்டது | நிறுவப்–பட்டது | நிறுவப்படாதது (விழுக்காட்டில்) |
| மேல புதுப்பள்ளி தெற்கு, புதுப்பள்ளி VP | 3,900 | 4,704 (*20.62*) | 218 | 181 | 37 (*16.97*) |
| கீழ புதுப்பள்ளி வடக்கு, புதுப்பள்ளி VP | 4,700 | 5,311 (*13.00*) | 192 | 155 | 37 (*19.27*) |
| பூச்சி தெரு, பிரதாபராமபுரம் VP | 4,050 | 5,005 (*23.58*) | 259 | 189 | 70 (*27.00*) |

(ஆதாரம்: தணிக்கையால் தொகுக்கப்பட்டது)

குழாயின் நீளம் மதிப்பீட்டிலிருந்து 13 முதல் 24 விழுக்காடு வரை அதிகரிக்கப்பட்டிருந்ததை தணிக்கை கவனித்தது. இருப்பினும், செலவினத்தை மதிப்பீட்டிற்குள் வைத்திருக்க, FHTCகளின் ஒதுக்கீடு குறைக்கப்பட்டது. தலைஞாயிறு மற்றும் கீழையூர் வட்டாரங்களில், 2023-24 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட பதின்மூன்று பணிகளுக்கான நிறைவு அறிக்கைகளை மதிப்பாய்வு செய்தபோது, அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டு நீளத்தை விட குழாயானது 6.35 முதல் 32.49 விழுக்காடு வரை அதிகமாக நீட்டிக்கப்பட்டிருந்ததை தணிக்கை கவனித்தது.

வீடுகள் பரவலாக அமைந்திருப்பதால், மதிப்பீடுகள் தோராயமாக தயாரிக்கப்பட்டு, மதிப்பீடுகளுக்குள் பணிகள் முடிக்கப்பட்டதாக அரசு பதிலளித்தது (ஏப்ரல் 2025). VP ஒரு சிறிய பகுதி என்பதால், உள்ளூர் நிலப்பரப்பு முறையாக பகுப்பாய்வு செய்யப்பட்டு, குழாய் பாதையின் நீளம் மதிப்பிடப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு மதிப்பிடப்படாததால் பதில் ஏற்புடையதாக இல்லை. பகுப்பாய்வு மேற்கொள்ளப்படாததால் வீடுகளுக்கு FHTCகள் வழங்கப்படவில்லை.

**பரிந்துரை 1: தேவை மதிப்பீடுகளுக்குப் பின்னரே பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று செயல்படுத்தும் நிறுவனங்களுக்கு அரசு உத்தரவு வழங்க வேண்டும். மேலும் உள்ளபடியான தேவைகள் கணக்கிடப்பட்ட பின்னரே மதிப்பீடுகள் தயாரிக்கப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.**

### 2.5.2 TWAD வாரியத்தால் செயல்படுத்தப்படும் பணிகளுக்கான திட்டம்

தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்ட பணிகளின் மீதான சோதனைச் சரிபார்ப்பில் காணப்பட்ட குறைபாடுகள் பின்வரும் பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளன.

#### *2.5.2.1 திட்டமிடலில் ஒத்திசைவு இல்லாமை - இராமநாதபுரம் மாவட்டம்*

JJM தொடங்கப்பட்டதன் விளைவாக, கிராமப்புற குடியிருப்புகளின் 2050 ஆம் ஆண்டிற்கான திட்டமிடப்பட்ட தேவையை, நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு 55 லிட்டர் என்ற வீதத்தில் பூர்த்தி செய்ய இராமநாதபுரம்

மாவட்டத்திற்கு பின்வரும் திட்டங்கள்/பணிகள் JJMன் கீழ் அனுமதிக்கப்பட்டன:

- **உள்ளூர் பணிகள்**: AAP 2020-21ன் கீழ், ₹32.93 கோடி மதிப்பீட்டில் 165 உள்ளூர் பணிகள் மூலம் FHTCகள் வழங்கப்படுதல் (ஜூன் 2020).
- **இராமநாதபுரத்தில் ஏற்கனவே இருந்த CWSSஐ மறுசீரமைத்தல்**: AAP 2022-23ன் கீழ், ஏற்கனவே இருந்த CWSSஐ மறுசீரமைக்கும் பணியானது ₹574.42 கோடி செலவில், அக்டோபர் 2024க்குள் நிறைவேற்றப்படும் நோக்குடன் எடுத்துக் கொள்ளப்பட்டது (ஜூலை 2022).

பணிகளை நிறைவேற்றுவதில் TWAD வாரியம் மற்றும் RD&PR துறை ஈடுபடுகின்றன. இதனால், இத்துறைகள் JJMன் திட்டமிடப்பட்ட நோக்கங்களை அடைவதற்கு முறையான திட்டமிடலும் திட்டக் கூறுகளின் ஒருங்கியக்கலும் உறுதி செய்யப்பட வேண்டும். இருப்பினும், பின்வருவன தணிக்கையால் கவனிக்கப்பட்டன:

- போதுமான நிலத்தடி நீர் கிடைக்காத நிலையில் MVSக்கான திட்டத்திற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசின் செயல்பாட்டு வழிகாட்டுதல்களில் வலியுறுத்தப்பட்ட போதிலும், நீர் ஆதாரத்தைப் பெருக்கும் பணிகள் (CWSS/MVS) இறுதி செய்யப்படுவதற்கு முன்பே, AAP 2020-21ல் உள்ளூர் பணிகள் முன்மொழியப்பட்டு மேற்கொள்ளப்பட்டன, மூலாதார பெருக்கப் பணியானது AAP 2022-23ல் மட்டுமே மேற்கொள்ளப்பட்டது.
- உள்ளூர் கூறுகளின் கீழ் இணைப்புகள் வழங்கப்படும் பணி பிப்ரவரி 2023லேயே நிறைவடைந்திருந்த நிலையில் மே 2025 நிலவரப்படி, ஏற்கனவே இருந்த CWSSன் மறுசீரமைப்பு பணி தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வந்தது. இதனால், 165 உள்ளூர் பணிகளின் கீழ் உருவாக்கப்பட்ட உள்கட்டமைப்பு பெரும்பாலும் பயன்படுத்தப்படாமல் இருந்தது.
- JPVன் போது, திருவாடானை வட்டாரத்தில் கட்டப்பட்டிருந்த மூன்று மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் (OHTகள்) மற்றும் 12 தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகளின் மீதான சோதனைத் தணிக்கையில், ஏழு நீர்த்தேக்கத் தொட்டிகள் தண்ணீரைப் பெற்றிருக்கவில்லை மற்றும் அவற்றிலிருந்து OHTகளுக்கு நீர் ஏற்றப்படவில்லை என்றும் தெரியவந்தது. மீதமுள்ள ஐந்து தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகளில் வாரத்திற்கு ஒரு முறை மட்டுமே உள்ளூர் நீர் ஆதாரத்திலிருந்து தண்ணீர் வழங்கப்பட்டது. TWAD வாரியப் பணிகள் முடிவடைந்தவுடன் உள்கட்டமைப்புகள் பயன்பாட்டுக்கு வரும் என்று BDO (VP) தெரிவித்தார்.

இவ்வாறு, உள்ளூர் கூறுகளுக்கான அனுமதியை வழங்கும் முன் அதற்கான அதிகாரி, மாவட்டத்திற்கான நீர் இருப்பு அல்லது அதற்கான நீர் ஆதார உருவாக்கப் பணி மேற்கொள்ளப்படுவதை மதிப்பிடத் தவறியிருந்தது,

குறைவான திட்டமிடுதலையும், தலைப்புச்சீர் பணிகள் நிலை (head-works) மற்றும் உள்ளூர் கூறுகளின் ஒருங்கிணைப்பின்மையையும் குறிப்பிட்டுக் காட்டியது.

இராமநாதபுரம் CWSSன் மறுசீரமைப்பு பணி முழுவதும் செப்டம்பர் 2025க்குள் நிறைவடையும் என்றும், பொதுமக்களுக்கான வழக்கமான விநியோகம் பாதிக்கப்படாத வண்ணம் புதிய குழாய்களை இணைப்பதால் தாமதம் ஏற்பட்டதாகவும் அரசு பதிலளித்தது (ஏப்ரல் 2025). மேலும், CWSS மூலம் வழங்கப்படும் தண்ணீரின் அளவைக் கொண்டு உள்ளூர் கூறுகள் பயன்படுத்தப்படுகின்றன என்றும் கூறப்பட்டது.

**பரிந்துரை 2: உள்ளூர் கூறுகளில் உருவாக்கப்பட்ட உடைமைகளை பயன்படுத்துவதில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்க்க, செயல்படுத்தும் நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் பணிகளில் ஒருங்கிணைப்பை அரசு உறுதி செய்ய வேண்டும்.**

### *2.5.2.2 பணிகளின் தவறான திட்டமிடல் - கோயம்புத்தூர் மாவட்டம்*

கோயம்புத்தூர் மாவட்டத்தில், கிராமப்புற குடியிருப்புகளுக்கு நீர் விநியோகம் செய்ய ‘295 குடியிருப்புகளுக்கு CWSS’ திட்டம் 2005ல் தொடங்கப்பட்டு, பிப்ரவரி 2006 முதல் TWAD வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த CWSSன் கீழ், ஆழியார் ஆற்றில் இருந்து பெறப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட மேற்பரப்பு நீர் இரண்டு சீரமைப்புகள் மூலம் நீருந்து செய்யப்பட்டது - 165 குடியிருப்புகளுக்கு நீர் விநியோகிக்கும் சீரமைப்பு I மற்றும் 130 குடியிருப்புகளுக்கு நீர் விநியோகிக்கும் சீரமைப்பு II. குழாயின் மொத்த நீளம் 426.36 கி.மீ.

தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் சாலை விரிவாக்கப் பணியின் காரணமாக, 15.5 கிலோமீட்டர் நீளமுள்ள பிரதான நீருந்து குழாய்கள் மற்றும் அதன் கிளைகள் சேதமடைந்தன. இதனால் சீரமைப்பு IIஆல் நீர் விநியோகிக்கப்பட்டு வந்த 130 குடியிருப்புகளுக்கு நீர் விநியோகம் தடைபட்டது. தடையற்ற நீர் விநியோகத்தை உறுதி செய்யும் பொருட்டு, சேதமடைந்த குழாய்களை மாற்றும் நோக்குடன், 2021-22ஆம் ஆண்டில் JJMன் கீழ் மறுசீரமைப்பு பணிகளை மேற்கொள்ள, தமிழ்நாடு அரசு, ₹47.37 கோடிக்கு[4] நிர்வாக ஒப்புதலை வழங்கியது (ஏப்ரல் 2022). இப்பணி மார்ச் 2024ல் நிறைவடைந்ததைத் தொடர்ந்து நீர் விநியோகம் செய்யப்பட்டதாக TWAD வாரியம் தெரிவித்தது (செப்டம்பர் 2024).

கிணத்துக்கடவு வட்டார குடியிருப்புகள் 2024ஆம் ஆண்டில், குறிக்கப்பட்ட அளவான 5.084 MLDக்குப் பதிலாக 2.969 MLD (நாள் ஒன்றுக்கு மில்லியன் லிட்டர்) நீர் மட்டுமே பெற்றதாக பதிவுகளின் மீதான ஆய்வு வெளிப்படுத்தியது. மேலும், இது 2022 ஆம் ஆண்டில், மறுசீரமைப்பு பணி மேற்கொள்ளப்படுவதற்கு முன்பு, இந்த குடியிருப்புகள் பெற்ற 4.367 MLD அளவிலிருந்து குறிப்பிடத்தக்க அளவில் குறைவுபட்டிருந்தது. JPVன் போது (செப்டம்பர் 2024 மற்றும் மார்ச் 2025) பிரதான நீருந்து குழாய்களில் கசிவுகள் மற்றும் வெடிப்புகள் இருந்தது கவனிக்கப்பட்டது

[4] TWAD கூறுக்கு ₹9.53 கோடியும், RD&PR கூறுக்கு ₹38.70 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

(**விளக்கப்படம் 2.3**). இது விநியோகிக்கப்பட்ட நீரின் அளவை பாதித்தது. மேலும், TWAD வாரியத்தி  பராமரிப்பு பதிவுகளின் மீதான ஆய்வு, குழாய் அமைப்பில் கசிவுகள் மற்றும் வெடிப்புகள் இருந்ததை வெளிப்படுத்தியது.

**விளக்கப்படம் 2.3: குழாய்களில் ஏற்பட்ட கசிவுகளால் உண்டான நீர் தேக்கம்**






நீருந்து குழாய்கள் நெடுங்காலமாக பயன்பாட்டில் இருப்பதாலும் (20 ஆண்டுகளுக்கு முன்பாக பதிக்கப்பட்டவை) அவற்றின் தேய்மானம் காரணமாகவும் அவற்றில் கசிவுகள் மற்றும் வெடிப்புகள் ஏற்பட்டதால், ₹51 கோடி செலவின மதிப்பீட்டில் 28.27 கி.மீ நீளத்திற்கு குழாய்களை உடனடியாக மாற்றும் பணிக்கான விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report - DPR) தயாரிக்கப்பட்டிருந்தது கவனிக்கப்பட்டது (நவம்பர் 2024).

இது தொடர்பாக தணிக்கை பின்வருவனவற்றைக் கவனித்தது:

- TWAD வாரியம், 2022 ஆம் ஆண்டில் மறுசீரமைப்புப் பணிகளைத் திட்டமிடும்போது, குழாய்களில் ஏற்பட்ட கசிவுகள் மற்றும் வெடிப்புகளை முழுமையாக அடையாளம் காணத் தவறிவிட்டது. சாலை விரிவாக்கப் பணிகளால் பாதிக்கப்பட்ட குழாய்களை மட்டுமே இத்திட்டம் கவனத்தில் கொண்டிருந்தது.
- சிக்கல்களைப் பகுதிகளாகப் பிரித்து கையாண்டதன் காரணமாக, குழாய்களில் தொடர்ந்து கசிவு ஏற்பட்டு, அதன் விளைவாக நீர் விநியோகமும் பாதிப்படைந்தது.
- முழுமையான திட்டமிடல் இல்லாததால், திட்டத்தின் கடைமுனைப் பகுதியில் இருந்த குடியிருப்புகள், பணிகள் முடிந்த பிறகும் குறைந்த அளவிலான நீரையே பெற்றன. மேலும், மறுசீரமைப்பு பணிகளுக்கு முன்பு இந்த குடியிருப்புகள் ஒப்பீட்டளவில் அதிக அளவிலான விநியோகத்தைப் பெற்று வந்தன.

குழாய்களில் ஏற்படும் கசிவு, விநியோகக் குழாய்களைத் தொடர்ந்து பாதித்து, கடைநிலைப் பயனாளிகளுக்குப் போதுமான அளவு நீர் விநியோகிக்கப்படாமைக்கு வழிவகுத்தது. இவ்வாறு, திட்டமிடலில் இருந்த குறைபாடு, திட்டம் பயனற்ற முறையில் செயல்படுத்தப்பட வழிவகுத்தது.

குழாய்கள் மற்றும் பம்ப் செட்களை மாற்றும் பணி முடிவடைந்ததும், கடைமுனை பகுதி குடியிருப்புகள் உட்பட அனைத்து குடியிருப்புகளுக்கும் நிர்ணயிக்கப்பட்ட அளவு நீர் விநியோகிக்கப்படும் என்று அரசு பதிலளித்தது (ஏப்ரல் 2025). இவ்வாறு, JJM தொடங்கப்பட்டு ஆறு வருடங்களாகியும், மறுசீரமைப்பு பணிகளுக்கான செலவினத்திற்குப் பிறகும், போதுமான நீர் விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்ய இயலவில்லை.

# அத்தியாயம் III

# ஜல் ஜீவன் இயக்கத்தின் செயலாக்கம்

# அத்தியாயம் III

## ஜல் ஜீவன் இயக்கத்தின் செயலாக்கம்

**JJM டேஷ்போர்டு மற்றும் சொத்து வரி மதிப்பீட்டிற்கான துறையின் 'VP வரி போர்ட்டலின்' படி வீடுகளின் எண்ணிக்கையில் வேறுபாடுகள் காணப்பட்டன. இதன் விளைவாக, JJM டேஷ்போர்டில் காட்டப்பட்டுள்ள FHTC வழங்கலின் விழுக்காட்டின் உண்மைத்தன்மையை நிலைநிறுத்த இயலவில்லை. தளத்தை அடையாளம் காண்பதில் இருந்த தாமதம், தொடர்புடைய துறைகளிடமிருந்து அனுமதிகளைப் பெறாதது, ஒப்பந்த நடைமுறையில் இருந்த குறைபாடுகள் மற்றும் தாமதமான செயல்படுத்தல் ஆகியவற்றால் TWAD வாரியத்தின் பணிகள் பாதிக்கப்பட்டது. மேலும், TWAD வாரியப் பணிகள் முடிக்கப்படாதது, நீர் ஆதாரங்கள் கிடைக்காதது போன்ற காரணங்களால் குடிநீர் விநியோகத்தின் பொருட்டு VPகளில் வழங்கப்பட்ட இணைப்புகள் பயன்படுத்தப்படவில்லை. RD&PR துறையால் செயல்படுத்தப்பட்ட பணிகளைப் பொறுத்தவரை, அவற்றின் தாமதமான செயல்பாட்டிற்காக எவ்வித அபராதமும் விதிக்கப்படவில்லை.**

## 3.1 முன்னுரை

ஊரகப் பகுதிகளில் குழாய் மூலம் மட்டுமே குடிநீர் விநியோகிப்பதில் கவனம் செலுத்திய ஜல் ஜீவன் இயக்கம், குடிநீர் வழங்கலில் முந்தைய திட்டங்களுக்களின் அணுகுமுறையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது. இத்திட்டம், 2028 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. ஜல் ஜீவன் இயக்கத்தின் செயல்பாட்டு வழிகாட்டுதல்கள், குழாய் இணைப்பானது பின்வரும் மூன்று அளவுகோல்களை பூர்த்தி செய்யும் போது அதனை 'FHTC' என்று குறிப்பிடுகிறது:

| | | |
|---|---|---|
| போதுமான அளவு | : | குறைந்தபட்சம் நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு 55 லிட்டர் குடிநீர் வழங்கப்படுவதை உறுதி செய்தல் |
| சீரான குடிநீர் விநியோகம் | : | குடிநீர் விநியோகம் நீண்ட காலத்திற்கு தொடர்ச்சியாகவும் நிலையானதாகவும் இருத்தல் |
| நிர்ணயிக்கப்பட்ட தரம் | : | விநியோகிக்கப்படும் குடிநீர் அதன் தரநிலைகளைப்[1] பூர்த்தி செய்தல் |

கிராமப்புற வீடுகளைத் தவிர, பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், கிராம ஊராட்சி கட்டிடம், சுகாதார மையங்கள், நல்வாழ்வு மையங்கள் மற்றும் சமூக கட்டிடங்களுக்கும் FHTCகள் வழங்கிட JJMல் திட்டமிடப்பட்டது.

[1] BIS: 10500:2012.

ஒரு குறிப்பிட்ட நிர்வாக அலகு, அதாவது VP/வட்டாரம்/மாவட்டம், FHTCகள் வழங்கப்படுவதற்கான நிலைகளை நிறைவு செய்யும் போது **(விளக்கப்படம் 3.1)**, அந்த அலகு ‘வீடு தோறும் குடிநீர்’ (‘ஹர் கர் ஜல்’ - HGJ) நிலையை அடைந்ததாகக் கூறப்படுகிறது.

**விளக்கப்படம் 3.1: ‘ஹர் கர் ஜல்’ அறிவிப்புக்கான செயல்முறையின் மூன்று நிலைகள்**

**குழாய் நீர் இணைப்பு வழங்கப்பட்ட குடும்பத் தலைவரின் பெயர் மற்றும் ஆதார் எண்ணைச் சரிபார்த்த பிறகு, இக்குடும்பங்கள் JJM IMISல் குறிக்கப்படுகின்றன. இவ்வாறு கிராமத்தின் அனைத்து வீடுகளும் JJM IMISல் குறிக்கப்பட்டவுடன், இக்கிராமங்கள் 100 விழுக்காடு குழாய் நீர் இணைப்புகளைக் கொண்ட அந்தஸ்தைப் பெறுகின்றன.**

↓

**‘அறிவிக்கப்பட்டது’ என்ற நிலை மாநில/யூனியன் பிரதேச குடிநீர் வழங்கல் துறை, அந்த நிர்வாக அலகில் உள்ள அனைத்து வீடுகள், பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களுக்கு குழாய்கள் மூலம் தண்ணீர் வழங்கப்பட்டுவருவதை உறுதிப்படுத்துவதைக் குறிக்கும்.**

↓

**'சான்றளிக்கப்பட்டது' என்ற நிலை, கிராமத்தில் உள்ள அனைத்து வீடுகள், பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களுக்கு குழாய் நீர் விநியோகம் வழங்கப்படுகிறது என்ற குடிநீர் வழங்கல் துறையின் கூற்றை உறுதிசெய்த பிறகு, கிராம சபை தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது என்பதைக் குறிக்கிறது. அனைத்து வீடுகளுக்கும் குழாய் நீர் விநியோகம் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கும் சான்றிதழை நீர் வழங்கல் துறை கிராம ஊராட்சிக்கு வழங்கிய பிறகு இது மேற்கொள்ளப்படுகிறது.**

(**ஆதாரம்**: JJM **டேஷ்போர்டு**)

## 3.2 FHTCகள் வழங்கலில் அடையப்பட்ட நிலை

JJM தொடங்கப்பட்டபோது, அதாவது ஆகஸ்ட் 15, 2019ல், தமிழ்நாட்டில் 21.76 இலட்சம் கிராமப்புற வீடுகள் குழாய் இணைப்புகளைக் கொண்டிருந்தன. இது மாநிலத்தின் மொத்த கிராமப்புற வீடுகளில் 17.37 விழுக்காடு (1.25 கோடி) மட்டுமே. 2024ஆம் ஆண்டு நிலவரப்படி, JJMன் ஒருங்கிணைந்த மேலாண்மை தகவல் அமைப்பு (IMIS) டேஷ்போர்டில் வழங்கப்பட்ட தரவுகளின்படி, மாநிலத்தில் 83.94 விழுக்காடு (1.25 கோடியில் 1.05 கோடி) கிராமப்புற வீடுகளுக்கு FHTCகள் வழங்கப்பட்டிருந்தன (**விளக்கப்படம் 3.2**). மேலும், 10 மாவட்டங்களில்[2] 100 விழுக்காடு இணைப்பு அடையப்பட்டிருந்தது.

---

[2] அரியலூர், கோயம்புத்தூர், கடலூர், காஞ்சிபுரம், கன்னியாகுமரி, இராணிப்பேட்டை, நீலகிரி, தேனி, திருவள்ளூர் மற்றும் வேலூர்.

**விளக்கப்படம் 3.2: 2019-24 ஆண்டுகளில் JJMன் கீழ் வழுங்கப்பட்ட FHTCகள்**




(ஆதாரம்: JJM டேஷ்போர்டு)

- 2019-24 ஆண்டுகளில் மாநிலத்தில் FHTCகளின் வழுங்கல் 17.37 விழுக்காட்டிலிருந்து 83.94 விழுக்காடாக மேம்பட்டிருந்தது.
- தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களுள் விழுப்புரம் மாவட்டம் தொடக்க நிலையில் 1.19 விழுக்காடு வீடுகள் மட்டுமே FHTCயைக் கொண்டிருந்தன. ஜூன் 2024ல் FHTCகளைப் பெறுவதில் இம்மாவட்டம் 82.86 விழுக்காட்டை எட்டியிருந்தது.

FHTC அளவுகோல்களான விநியோகிக்கப்படும் நீரின் போதுமான அளவு, அதன் சீரான விநியோகம் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட தரம் ஆகியவற்றுக்கு எதிராக JJM போர்ட்டலின்படி தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களால் அடையப்பட்ட சாதனையை தணிக்கை பகுப்பாய்வு செய்தது. இதில் கவனிக்கப்பட்ட முரண்பாடுகள் பின்வரும் பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளன.

## 3.3 வீடுகள் குறித்த தரவுகளில் இருந்த வேறுபாடுகள்

ஒவ்வொரு கிராமப்புற வீட்டிற்கும் FHTCகளை வழங்குவது ஜல் ஜீவன் இயக்கத்தின் முக்கிய நோக்கமாகும். ஏப்ரல் 2025ல், JJM டேஷ்போர்டின் படி, 13 மற்றும் ஆறு மாவட்டங்களில் உள்ள அனைத்து VPகளும் முறையே 'ஹர் கர் ஜல்' அறிவிக்கப்பட்ட மற்றும் சான்றளிக்கப்பட்ட நிலையை அடைந்திருந்தன.

சொத்து வரி, தண்ணீர் கட்டணம் போன்றவற்றை மதிப்பீடு செய்வதற்கும் வசூலிப்பதற்கும் VPகள் சார்ந்திருக்கும் 'VP வரி போர்ட்டலி'ன் படியான மதிப்பீட்டு எண்ணிக்கையுடன் JJM டேஷ்போர்டின் தரவை தணிக்கை ஒப்பிட்டு சரிபார்த்தது. இரண்டு தரவுத் தொகுப்புகளின்படி தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் இருந்த வீடுகளின் எண்ணிக்கையின் விவரங்கள் **அட்டவணை 3.1ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.1: JJM மற்றும் VP வரி போர்ட்டலின் படி வீடுகளின் எண்ணிக்கை**

| மாவட்டம் | JJM போர்ட்டலின்படி மொத்த குடும்பங்கள் | குழாய் இணைப்பு உள்ள வீடுகள் (நவம்பர் 2024 நிலவரப்படி) | 2024-25 ஆம் ஆண்டிற்கான VP வரி போர்ட்டலின்படி குடும்பங்களின் எண்ணிக்கை | FHTCன் விழுக்காடு | |
|---|---|---|---|---|---|
| | | | | JJM போர்ட்டல் | VP போர்ட்டல் |
| கோயம்புத்தூர் | 3,72,578 | 3,72,578 | 5,13,985 | *100.00* | *72.49* |
| நாகப்பட்டினம் | 1,57,116 | 89,438 | 2,03,446 | *56.92* | *43.96* |
| இராமநாதபுரம் | 3,33,279 | 1,11,024 | 4,24,073 | *33.31* | *26.18* |
| சேலம் | 6,46,114 | 5,65,111 | 7,46,427 | *87.46* | *75.71* |
| தேனி | 1,85,013 | 1,85,013 | 2,36,911 | *100.00* | *78.09* |
| விழுப்புரம் | 4,38,570 | 4,11,750 | 4,34,960 | *93.88* | *94.66* |

(ஆதாரம்: DRD ஆல் வழங்கப்பட்ட JJM டேஷ்போர்டு மற்றும் VP வரி போர்ட்டல் தரவு)

வீடுகளின் எண்ணிக்கை தொடர்பான இரண்டு தரவுத் தொகுப்புகளுக்கும் இடையே இருந்த வேறுபாடு **அட்டவணை 3.1**லிருந்து தெளிவாகிறது. மேலும், தெரிவு செய்யப்பட்ட 60 VPகளுள், 28 VPகள் தணிக்கை காலத்தில் ‘ஹர் கர் ஜல்’ நிலையை அடைந்திருந்தன. மேற்கொள்ளப்பட்ட ஆய்வு, ‘VP வரி போர்ட்டல்’ படியான குடும்பங்களின் எண்ணிக்கையை விட, VPகளில் வழங்கப்பட்ட FHTCகளின் எண்ணிக்கை குறைவாக இருந்ததை வெளிப்படுத்தியது. இது இரண்டு போர்ட்டல்களிலும் தரவுகளில் இருந்த முரண்பாடுகளைக் குறிப்பதாக இருந்தது. இதன் விளைவாக, JJM டேஷ்போர்டு தரவில் வழங்கப்பட்டுள்ள FHTC விழுக்காட்டின் உண்மைத்தன்மையை தணிக்கையால் நிலைநிறுத்த இயலவில்லை **(இணைப்பு 3.1)**.

கிராமப்புறங்களில் உள்ள வீடுகளின் எண்ணிக்கை காலப்போக்கில் மாறுபடும் என்றும், IMIS தரவுகளின்படி வீடுகளுக்கு (ஜூன் 2022 வரை புதுப்பிக்கப்பட்டது) FHTCகள் வழங்கப்பட்டிருந்ததால், அது ‘ஹர் கர் ஜல்’ என்று அறிவிக்கப்பட்டிருந்ததாகவும் அரசு பதிலளித்தது (ஏப்ரல் 2025). IMIS போர்ட்டலின் புதுப்பிப்பு நிகழ்நேரத்தில் இல்லை என்பதை பதில் சுட்டிக்காட்டுவதாக இருந்தது. மேலும், சான்றளிக்கப்படும் நேரத்தில் இருந்த குடும்பங்களின் எண்ணிக்கையின்படி, VPகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் FHTCகள் வழங்கப்படுவதன் அடிப்படையில் VPகள் ‘ஹர் கர் ஜல்’ சான்றினைப் பெற வேண்டும்.

**பரிந்துரை 3: அனைத்து மாவட்டங்களும் இத்திட்டத்தில் உட்படுத்தப்படுவதை உறுதி செய்யும் வகையில், IMIS போர்ட்டலில் உள்ள வீட்டுத் தரவை கால முறையில் புதுப்பிக்குமாறு அரசு, துறையை அறிவுறுத்த வேண்டும்.**

## 3.4 திட்டங்களை செயல்படுத்துதல்

தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள JJM செயல்பாட்டு வழிகாட்டுதல்களின்படி, RD&PR துறை தனிப்பட்ட VPகளுக்குள் திட்டங்களை நிறைவேற்றுகிறது.

வட்டாரங்கள்/மாவட்டங்களை உள்ளடக்கிய பெரிய அளவிலான திட்டங்களுக்கு TWAD வாரியம் பொறுப்பேற்கின்றது. **அட்டவணை 3.2**, தெரிவு செய்யப்பட்ட ஆறு மாவட்டங்களில், 2020-24 ஆண்டுகளில், RD&PR துறை மற்றும் TWAD வாரியத்தால் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் எண்ணிக்கையையும், பணிகளின் நிலை மற்றும் அவற்றுடன் தொடர்புடைய நிதி தாக்கங்களையும் வெளிப்படுத்துகிறது.

**அட்டவணை 3.2: RD&PR துறையால் ஆண்டுவாரியாக மேற்கொள்ளப்பட்ட பணிகள்**

| ஆண்டு | பணிகளின் எண்ணிக்கை | | | தொகை (₹ கோடியில்) | |
|---|---|---|---|---|---|
| | அனுமதிக்கப்பட்டது | நிறைவு பெற்றது | நிலுவையில் உள்ளது | அனுமதிக்–கப்பட்டது | செலவினம் |
| **SVS பணிகள்** | | | | | |
| 2020-21 | 2,913 | 2,913 | 0 | 356.91 | 314.98 |
| 2022-23 | 369 | 369 | 0 | 106.04 | 85.16 |
| 2023-24 | 129 | 112 | 17 | 31.73 | 8.75 |
| **TWAD வாரியப் பணிகளுடன் தொடர்புடைய உள்ளூர் கூறுகள்** | | | | | |
| புதிய MVS | 1,864 | 516 | 1,348 | 190.91 | 48.99 |
| MVS மறுசீரமைப்பு | 1,482 | 1,482 | 0 | 139.00 | 106.17 |
| **மொத்தம்** | **6,757** | **5,392** | **1,365** | **824.59** | **564.05** |

(ஆதாரம்: RD&PR துறையால் வழங்கப்பட்ட விவரங்கள்)

- **2020-21 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் துறை மேற்கொண்ட அனைத்து SVS பணிகளும் நிறைவடைந்தன. மேலும் பணி ஏதும் நிலுவையில் இல்லை.**

மேலும், MVS-ஐப் பொறுத்தவரை, தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் 2020-21 முதல் 2023-24 வரை TWAD வாரியம் மேற்கொண்ட ₹5,595.47 கோடி மதிப்பிலான 10 பணிகளுள், 2022-23 தொடர்பான ஐந்து பணிகள் இன்னும் நிலுவையில் இருந்தன.

RD&PR துறை மற்றும் TWAD வாரியத்தால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் செயல்படுத்தும் நிறுவனங்களால் பராமரிக்கப்படும் பதிவேடுகளின் மீதான ஆய்வில் கவனிக்கப்பட்ட தணிக்கை குறிப்புகள் பின்வரும் பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளன.

## 3.5 ஒப்பந்த மேலாண்மையில் காணப்பட்ட முரண்பாடுகள்

### 3.5.1 ஒப்பந்த வெளிப்படைத்தன்மை நிபந்தனைகளைத் தவிர்ப்பதற்காக வேலையைப் பிரித்தல்

வெளிப்படைத்தன்மை, போட்டி அடிப்படையிலான விலை நிர்ணயம் மற்றும் பொறுப்புணர்வு ஆகியவற்றை உறுதி செய்வதற்காக, **அட்டவணை 3.3ல்** விவரிக்கப்பட்டுள்ளபடி, செய்தித்தாள்களில்

டெண்டர்களுக்கான விளம்பர அறிவிப்பு நிதி விதிமுறைகளை தமிழ்நாடு அரசு திருத்தியமைத்தது (ஆகஸ்ட் 2017).

**அட்டவணை 3.3: விளம்பரத்திற்கான நிதி விதிமுறைகள்**

| கொள்முதலின் மதிப்பு | வெளியிடப்பட வேண்டிய செய்தித்தாள்கள் |
|---|---|
| ₹10 இலட்சத்திற் மேல் மற்றும் ₹25 இலட்சம் வரை | ஒரு தமிழ் நாளிதழ் - மாவட்ட பதிப்பு |
| ₹25 இலட்சத்திற்கு மேல் மற்றும் ₹3 கோடி வரை | ஒரு ஆங்கில நாளிதழ் மற்றும் ஒரு தமிழ் நாளிதழ் - மாநிலத்தில் உள்ள அனைத்து பதிப்புகளும் |

(ஆதாரம்: அரசு ஆணைகள்)

JJM பணிகளின் கீழ், இராமநாதபுரம் மாவட்டத்தில் புதிய MVS[3] வழங்கும் பணியை, 2021-22 ஆம் ஆண்டில், TWAD வாரியம் மேற்கொண்டது. புதிய MVSக்கான விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரிப்பதற்கு உதவும் வகையில், ₹1.74 கோடி மதிப்பீட்டில், நில அளவை மற்றும் மட்ட அளவை (Survey and levelling) பணிகளுக்கான டெண்டர்கள் ஜனவரி 2022ல் தொடங்கப்பட்டன. இதில், பணிகள் பத்து தொகுப்புகளாக (₹12.70 இலட்சம் முதல் ₹24.33 இலட்சம் வரை) பிரிக்கப்பட்டு, பிப்ரவரி 2022ல் இறுதி செய்யப்பட்டன (**இணைப்பு 3.2**).

இது தொடர்பாக, பணியின் நோக்கம் ஒத்ததாக இருந்தபோதிலும் டெண்டர் வெளிப்படைத்தன்மை வரம்புகளைத் தவிர்ப்பதற்காக பணிகள் சிறிய ஒப்பந்தங்களாகப் பிரிக்கப்பட்டதையும், விதிமுறைகளின்படி அது செய்தித்தாளில் வெளியிடப்படவில்லை என்பதையும் தணிக்கை கவனித்தsது.

மேலும், நில அளவை மற்றும் மட்ட அளவை பணிகளில் மண்ணை ‘சாதாரண மண்’ என வகைப்படுத்தியதன் அடிப்படையில், விரிவான திட்ட அறிக்கை இறுதி செய்யப்பட்டது. இருப்பினும், செயல்படுத்தலின் போது மண் வகைப்பாடு ‘சாதாரண மண், சிதைவடைந்த மென்மையான பாறை, வெடிப்பு தேவையில்லாத அடர்த்தியான நடுத்தர பாறை மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட வெடிப்பு தேவைப்படும் அடர்த்தியான நடுத்தர பாறை’ என மறு மதிப்பீடு செய்யப்பட்டதன் விளைவாக, அதிகப்படியான செலவினம் ஏற்பட்டது. இது குறித்து **பத்தி 3.6.1 (ஆ)ல்** மேலும் கூறப்பட்டுள்ளது.

கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக ஒப்பந்ததாரர்கள் கிடைக்காதது மற்றும் வேலையின் அவசரநிலை ஆகியவை டெண்டரைப் பிரிப்பதற்கான காரணங்கள் என்று அரசு கூறியது (ஏப்ரல் 2025). ஒப்பந்தத்தின்படி அறிக்கை முடிக்கப்பட்டதாக மேலும் கூறப்பட்டது. டெண்டர் நிபந்தனைகளைப் பின்பற்றுவது கட்டாயம் என்பதாலும், கோவிட்-19 தொற்றுநோய்க்குப் பிறகு டெண்டர் இறுதி செய்யப்பட்டதாலும் பதில் ஏற்புடையதாக இல்லை.

[3] 4 நகராட்சிகள், 7 பேரூராட்சிகள் மற்றும் 2,189 ஊரக குடியிருப்புகள்.

### 3.5.2 டெண்டர் நடைமுறையில் வெளிப்படைத்தன்மை இல்லாதது

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் மற்றும் DRDAன் தலைவரின் நடவடிக்கைகளின்படி (நவம்பர் 2023), மாவட்டத்தின் 11 வட்டாரங்களுக்கு IEC நடவடிக்கை தொடர்பான விளம்பரப் பலகைகள், சுவரொட்டிகள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் அச்சிடப்பட ₹45.68 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட இரண்டு வட்டாரங்களின்[4] பதிவேடுகள் மீதான ஆய்வு, விற்பனையாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட விலைப்புள்ளிகளில் தேதிகள் இல்லை என்பதையும், ஒப்பந்த அழைப்பு அதிகாரியால் (TIA) மேல் கையொப்பமிடப்படவில்லை என்பதையும் வெளிப்படுத்தியது. மேலும், BDOக்கள் வழங்குநர்களிடமிருந்து விலைப்புள்ளிகளைக்[5] கோரியதை உறுதிப்படுத்த எந்தப் பதிவுகளும் தணிக்கைக்கு வழங்கப்படவில்லை. இக்குறைபாடுகள், டெண்டர் செயல்முறையின் சரித்தன்மை மற்றும் நம்பகத்தன்மை குறித்த கேள்விகளை எழுப்புவதோடு தமிழ்நாடு ஒப்பந்த வெளிப்படைத்தன்மை சட்டம்/விதிகளை மீறுவதையும் சுட்டிக்காட்டின.

முறையான டெண்டர் நிபந்தனைகள் இனிமேல் பின்பற்றப்படும் என BDO (VP) பதிலளித்தார் (செப்டம்பர் 2024). இரண்டு வட்டாரங்களிலும், தெரிவு செய்யப்பட்ட மூன்று விற்பனையாளர்களுக்கு ஒப்பந்தபுள்ளிக்கான அழைப்பு அனுப்பப்பட்டதாகவும், சில பணிகளில் ஆவண குறைபாடுகள் காரணமாக ஒப்பந்த அழைப்பு அதிகாரியின் கையொப்பம் விடுபட்டிருக்கலாம் என்றும் அரசு பதிலளித்தது (ஜூலை 2025). இந்தப் பதில் BDOவின் முந்தைய பதிலுக்கு முரணானது மற்றும் அதற்கு ஆதரவான ஆவண ஆதாரங்கள் வழங்கப்படவில்லை.

### 3.5.3 ஒப்பந்த நடைமுறைகள் பின்பற்றப்படாமை

அரசு நிர்வாக வழிகாட்டுதல்களின்படி, பணி தொடங்கப்படுவதற்கு முன் VP, DWSM மற்றும் செயல்படுத்தும் நிறுவனம் இடையே முத்தரப்பு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட வேண்டும்.

- நாகப்பட்டினத்தில் 2019-24 ஆண்டுகள் தொடர்பான பதிவேடுகள் மீதான ஆய்வு, 104 பணிகளுள் 39 பணிகளில், அந்தந்த ஒப்பந்ததாரர்களுடன் எந்த ஒப்பந்த உடன்படிக்கையும் நிறைவேற்றப்படவில்லை என்பதையும், நான்கு ஒப்பந்ததாரர்களால் மேற்கொள்ளப்பட்ட 47 பணிகளின் ஒப்பந்தங்களில் VP அதிகாரிகளின் கையொப்பங்கள் இல்லை என்பதையும் வெளிப்படுத்தியது.

  திருமருகல் வட்டாரத்தின் அனைத்து JJM பணிகளுக்கும் முத்தரப்பு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருப்பதாக அரசு பதிலளித்தது (ஜூலை 2025). தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட நேர்வுகளில் திருமருகல் வட்டாரத்தில் செயல்படுத்தப்பட்ட

[4] திருப்புல்லாணி மற்றும் திருவாடானை வட்டாரங்கள்.

[5] தமிழ்நாடு ஒப்பந்த வெளிப்படைத்தன்மை விதிகள், 2000ன் விதி 8ன் படி, கொள்முதல் மதிப்பு ₹10 இலட்சத்தை தாண்டி ₹25 இலட்சத்திற்குக் குறைவாக உள்ள அனைத்து நேர்வுகளிலும் ஒப்பந்த அழைப்பு அறிவிப்புகள் மற்றும் ஒப்பந்தம் தொடர்பான முடிவுகள் வெளியிடப்பட வேண்டும்.

பணிகளும் அடங்கும் என்பதாலும், மேற்கண்ட பதிலுக்கு ஆதாரமாக அரசு எந்த ஆவணமும் வழங்கவில்லை என்பதாலும் பதில் ஏற்புடையதாக இல்லை. மேலும், ஏப்ரல் 2025ல் வழங்கப்பட்ட முந்தைய பதிலில் வருங்காலத்தில் அனைத்து டெண்டர் நிபந்தனைகளும் கட்டாயமாகப் பின்பற்றப்படும் என்றும் அதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இது தற்போதைய பதிலுக்கு முரணாகக் காணப்பட்டது.

- மேலும், 2023-24ஆம் ஆண்டில் இராமநாதபுரத்தில் மேற்கொள்ளப்பட்ட 340 உள்ளூர் பணிகளில், தணிக்கை சோதனையில் சரிபார்க்கப்பட்ட 44 பணிகளுள் 16 பணிகளில் ஒப்பந்த உடன்படிக்கை நிறைவேற்றப்படவில்லை என்பதும் மீதமுள்ள 28 பணிகளில், அவை நிறைவேற்றப்பட்ட பின்னரே ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததும் கவனிக்கப்பட்டது. சில பணிகளில் காணப்பட்ட ஆவண குறைபாடுகள் காரணமாக ஒப்பந்த அழைப்பு அதிகாரியின் கையொப்பம் விடுபட்டிருந்தது எனவும் நிதி மற்றும் சட்டரீதியாக எவ்வித சிக்கலும் இல்லாமல் அனைத்து பணிகளும் நிறைவேற்றப்பட்டன என்றும் குறிப்பிடப்பட்டிருந்த JJM திட்ட இயக்குநரின் பதிலுக்கு (ஜூன் 2025) அரசு ஒப்புதல் அளித்தது (ஜூலை 2025). ஒப்பந்த நடைமுறைகளைப் பின்பற்றாத அதிகாரிகள் மீது திட்ட இயக்குநர் நடவடிக்கை மேற்கொள்வார் என்றும் அரசு தெரிவித்தது (ஜூலை 2025).

- JJM செயல்பாட்டு வழிகாட்டுதல்களின்படி ஒதுக்கப்பட்ட மூன்றாம் தரப்பு ஆய்வு நிறுவனங்களுடன், TWAD வாரியத்தின் இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை பிரிவுகள், ஒப்பந்தத்தை நிறைவேற்றவில்லை என்பதையும் தணிக்கை கவனித்தது. இதன் விளைவாக, சேவை விதிமுறைகள், கடமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து தொடர்புடைய அதிகாரிகளுக்கு இடையேயான ஒப்பந்த உடன்படிக்கை இல்லாமல் TPIA செயல்பட்டது. ஒப்பந்த உடன்படிக்கை பிப்ரவரி 2025ல் முடிவடைந்ததாகவும், மூன்றாம் தரப்பு ஆய்வு நிறுவனம் தேவையான பாதுகாப்பு வைப்புத்தொகையை உரிய நேரத்தில் வழங்காததால் ஒப்பந்தம் முடிக்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டதாகவும் அரசு பதிலளித்தது (ஜூலை 2025).

இந்த ஒப்பந்த உடன்படிக்கை சட்டபடியான ஆவணமாகச் செயல்படும் என்பதால், நடைமுறையில் காணப்படும் குறைபாடுகள், ஒப்பந்த மேலாண்மை செயல்முறையை குறைவாக மதிப்பிடுவதோடு சட்டரீதியான மற்றும் நிதி சார்ந்த இடர்களை துறைக்கு ஏற்படுத்தக்கூடும்.

**பரிந்துரை 4: ஒப்பந்த நடைமுறைகளில் ஏற்படும் குறைபாடுகளுக்கான பொறுப்பை அரசு நிர்ணயித்து, தொடர்புடைய சட்டம் மற்றும் விதிகள் பின்பற்றப்படுவதை உறுதி செய்ய செயல்படுத்தும் நிறுவனங்களை அறிவுறுத்த வேண்டும்.**

## 3.6 ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் TWAD வாரியத்தின் பணிகள்

### 3.6.1 இராமநாதபுரம் புதிய பல-கிராமத் திட்டம்

இராமநாதபுரம் மாவட்டத்தில் நாளொன்றுக்கு ஒரு நபருக்கு குறைந்தபட்சம் 55 லிட்டர் தண்ணீர் விநியோகிக்கப்பட, ₹4,187.84 கோடி செலவில் JJMன் கீழ் தமிழ்நாடு அரசு புதிய MVSக்கான நிர்வாக ஒப்புதலை வழங்கியது (டிசம்பர் 2022). திட்டத்தின் செயற்பரப்பானது, காவிரி ஆற்றினை மூல ஆதாரமாகக் கொண்டு அமைப்பு I மற்றும் அமைப்பு II என இரண்டு அமைப்புகளாக முறையே இராமநாதபுரம் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் அமைக்கப்பட்டது. தலைப்புசீர் பணிகள்[6], மண்டல சமநிலை நீர்த்தேக்கம்[7] (Zonal Balancing Reservoir - ZBR), சேவை நீர்த்தேக்கங்கள் (Service Reservoirs - OHT), பிரதான சமநிலை நீர்த்தேக்கம் (Master Balancing Reservoir), ஈர்ப்பு விசை குழாய் (Gravity Main), நீரேற்று குழாய் (Feeder main) போன்ற கூறுகளைக் கொண்ட நான்கு தொகுப்புகளாக அமைப்பு I பிரிக்கப்பட்டு, 18 மாதங்களில் பணி நிறைவேற்றப்படத் திட்டமிடப்பட்டு அதற்கான பணி ஆணைகள், மார்ச்/ஏப்ரல் 2023ல் வழங்கப்பட்டன. மே 2025 நிலவரப்படி, இலக்கை விட ஆறு/ஏழு மாதங்கள் கடந்திருந்தும், பணிகள் 81 முதல் 90 விழுக்காடு வரை மட்டுமே நிறைவடைந்து இருந்தன. இத்தாமதத்திற்கான காரணக் கூறுகள் பின்வரும் பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளன.

#### *(அ) நடைமுறை தாமதங்கள்*



விளக்கப்படம் 3.3: *இன்டேக்* கிணறு இராமநாதபுரம் MVS

தொகுப்பு-Iன் தலைப்புசீர் பணி கூறுகளின் கீழ் '*இன்டேக்*' கிணறு **(விளக்கப்படம் 3.3)** கட்டுவதற்கான பணி ஆணை, தளம் உடைமையாக்கப்படும் முன்பே, ஏப்ரல் 2023ல் வழங்கப்பட்டது. இது TWAD வாரிய அறிவுறுத்தல்களை (பிப்ரவரி 2011) மீறுவதாக இருந்தது. அவ்விடம், ஒப்பந்ததாரரிடம் ஜூன் 2023ல் ஒப்படைக்கப்பட்டு, ஜூலை 2023ல் பணி தொடங்கப்பட்டது.



விளக்கப்படம் 3.4: தும்பைப்பட்டி VPல் உள்ள முதன்மை சமநிலை நீர்த்தேக்கம்

இதேபோன்று, தொகுப்பு IIIல் பிரதான சமநிலை நீர்த்தேக்கம் **(விளக்கப்படம் 3.4)** ஏப்ரல் 2023 முதல் அக்டோபர் 2023 வரை நான்கு[8] முறை

---

[6] ஒரு நீர்வழிப்பாதையின் தலைப்பகுதியிலோ அல்லது திசைதிருப்பும் இடத்திலோ உள்ள எந்தவொரு கட்டமைப்பையும் குறிக்கும் ஒரு சிவில் பொறியியல் சொல்.

[7] இவை பொதுவாக பிரதான சமநிலை நீர்த்தேக்கங்களை விட சிறியவை மற்றும் நீர் விநியோக அமைப்பின் ஒரு குறிப்பிட்ட மண்டலத்திற்குள் அமைந்துள்ளன. அவை அந்த மண்டலத்திற்குள் நீர் அழுத்தம் மற்றும் விநியோகத்தை ஒழுங்குபடுத்தப் பயன்படுகின்றன.

[8] முதலில் கணபதிபாளையத்தில் முன்மொழியப்பட்டது, ஆனால் பின்னர் (ஜூலை 2023) ஆடுகுளம் என்றும், பின்னர் நாவினிபட்டி (ஆகஸ்ட் 2023) என்றும், இறுதியாக அக்டோபர் 2023 முதல் வாரத்தில் தும்பைப்பட்டி என்றும் மாற்றப்பட்டது.

இடம் மாற்றப்பட்டது. மேலும், பொதுமக்களின் ஆட்சேபனை காரணமாக, கட்டுமானம் தாமதமாகி மே 2024ல் மட்டுமே தொடங்கப்பட்டது. பணியை விரைவுபடுத்த ஒப்பந்ததாரருக்கு தேவையான அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், செப்டம்பர் 2025க்கு முன் பணிகள் முடிக்கப்படும் என்றும் அரசு பதிலளித்தது (ஏப்ரல் 2025). அறிவுறுத்தல்களை மீறி தளம் இறுதி செய்யப்படுவதற்கு முன்பே பணி உத்தரவு வழங்கப்பட்டதால் பதில் ஏற்புடையதாக இல்லை.

கூடுதலாக, தலைப்புசீர் பணிகள், நீர் சுத்திகரிப்பு ஆலை போன்றவற்றுக்கான வரைபடங்கள் ஒப்பந்ததாரருக்கு TWAD வாரியத்தால் தாமதமாக வழங்கப்பட்டது (ஒப்பந்தம் செய்யப்பட்ட தேதியிலிருந்து (ஏப்ரல் 2023) 93 நாட்கள் முதல் 411 நாட்கள் வரை). இவை ஜூலை 2023 மற்றும் ஜூன் 2024க்கு இடையே ஒப்படைக்கப்பட்டன. தலைப்புசீர் பணிகள் மற்றும் நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கான வடிவமைப்பு மற்றும் வரைபடங்கள் ஒப்பந்த கட்டத்திலேயே ஒப்பந்ததாரரிடம் ஒப்படைக்கப்பட்டன என்றும், ZBRகள் மற்றும் OHTகளுக்கு டிசம்பர் 2023க்குள்ளாகவும், பிற வரைபடங்கள் ஏப்ரல் 2024க்குப் பிறகும் வழங்கப்பட்டன என்றும் அரசு பதிலளித்தது (ஏப்ரல் 2025). வரைபடங்களை இறுதி செய்வதில் ஏற்பட்ட தாமதம் பணிகள் நிறைவடைவதைப் பாதித்தது.

### *(ஆ) மண்ணின் தவறான வகைப்பாடு மற்றும் வாரியத்தின் ஒப்புதல் இல்லாமல் கூடுதல் பணிகளை செயல்படுத்துதல்*

நீர் வழங்கல் திட்டங்களுக்கான உள்கட்டமைப்பின் வடிவமைப்பு மற்றும் கட்டுமானத்திற்கு சரியான மண் வகைப்பாடு அவசியம். தவறான மண் வகைப்பாடானது நில அகழ்வு முறைகள், அடித்தள வடிவமைப்பு மற்றும் குழாய் அமைக்கும் முறைகளைப் பாதிக்கிறது.

**பத்தி 3.5.1ல்** கூறப்பட்டுள்ளபடி, இராமநாதபுரத்தில் புதிய MVS பணிகளுக்கான மண் வகைப்பாட்டை அடையாளம் காண்பதற்கான நில அளவை மற்றும் மட்ட அளவைப் பணிகளுக்கான டெண்டர் பிப்ரவரி 2022ல் மேற்கொள்ளப்பட்டது. பதிவேடுகளின் மீதான ஆய்வு, அனுமதிக்கப்பட்ட DPRல் மண் வேலைக்கான மண் வகைப்பாடு ‘சாதாரண மண்’ என வகைப்படுத்தபட்டது தெரியவந்தது. செயல்பாட்டின் போது சில பகுதிகளில் கடினமான பாறை இருப்பது கவனிக்கப்பட்டதாகவும், இவை நீக்கப்படுவதற்கு கட்டுப்படுத்தப்பட்ட வெடித்தல் தேவை என்றும் ஒப்பந்ததாரரால் கூறப்பட்டது (ஜூலை 2023). இதைக் கருத்தில் கொண்டு, கடினமான பாறையை அகழ்வதற்கான ஒரு கூடுதல் இணைப்பு ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட ஒப்பந்ததாரரால் கோரப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, சாதாரண மண், மென்மையான சிதைந்த பாறை, வெடிக்கத் தேவையில்லாத அடர்த்தியான நடுத்தர பாறை மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட வெடித்தல் தேவைப்படும் அடர்த்தியான நடுத்தர பாறை என மண் மறுவகைப்படுத்தப்பட்டது (TWAD வாரிய அறிவுறுத்தல்களின்படி). அதன்படி, ₹36.70 கோடி கூடுதல் தொகைக்கு மதுரை தலைமைப் பொறியாளர் (CE) ஒப்புதல் அளித்தார் (ஜூலை 2023/ மார்ச் 2024).

கூடுதல் பணிகளுக்கான மதிப்பு ₹50 இலட்சத்திற்கும் மேற்பட்டதால், பணிகளை செயல்படுத்துவதற்கு தொழில்நுட்பக் குழுவின் முன் ஒப்புதல் தேவைப்பட்டது. கூடுதல் பணிகள் ஒப்புதல் பெறப்படாமல் மேற்கொள்ளப்பட்டதாகவும் இது நிதி பகிர்வு அதிகாரங்களை மீறியிருந்ததையும் தணிக்கை கண்டது. மேலும், பாறை வெடிக்கும் நடவடிக்கைகளுக்கு மாவட்ட ஆட்சியரிடம் ஒப்புதல் பெற வேண்டியதால் பணி நிறைவேறுதலில் இருந்த தாமதம் அதிகரித்தது.

அனைத்து தொகுப்புகளும் நிறைவேற்றப்பட்ட பிறகு, செயல்படுத்தப்பட்ட கூடுதல்/மாற்று வகைப் பணிகள், TWAD வாரிய தலைமை அலுவலகத்திற்கு தொடர்புடைய செயல்படுத்தும் பிரிவால் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படும் என்று அரசு பதிலளித்தது (ஏப்ரல் 2025). மாற்றப் பணிகள் நிதி அதிகாரப் பகிர்விற்கு மேற்பட்டதால் (₹50 இலட்சத்திற்கு மேல்) டெண்டர் குழுவின் ஒப்புதல் அவசியம். இருப்பினும், அது பெறப்படவில்லை என்பதால் பதில் ஏற்புடையதாக இல்லை. மேலும், DPRல் தவறான மண் வகைப்பாட்டை சமர்ப்பித்ததற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து பதிலில் குறிப்பிடப்படவில்லை.

### *(இ) தொடர்புடைய துறையிடமிருந்து ஒப்புதல் பெறுவதில் தாமதம்*

TWAD வாரியத்தின் அறிவுறுத்தல்களின்படி (பிப்ரவரி 2011), ஒரு திட்டம் தொடங்கப்படுவதற்கு முன் தொடர்புடைய துறைகளிடமிருந்து (line departments) முன் ஒப்புதல் பெறப்பட வேண்டும். புதிய MVSல், தேசிய நெடுஞ்சாலைகளில்[9] (NH) சாலையோரத்தில் குழாய்களை அமைப்பது தொடர்பான பணிகளும் அடங்கும். இதற்கு, தொடர்புடைய துறையின், அதாவது, மத்திய அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்தின் முன் ஒப்புதல் அவசியம். இது தொடர்பாக, புதிய MVSக்கான ஒப்பந்தம் ஏப்ரல் 2023ல் இறுதி செய்யப்பட்டாலும், குழாய்களை அமைக்கும் அனுமதிக்கான கோரிக்கை சென்னை தேசிய நெடுஞ்சாலைகளின் பிராந்திய அலுவலகத்திற்கு ஜூலை 2023ல் மட்டுமே சமர்ப்பிக்கப்பட்டது. இது TWAD வாரியத்தின் அறிவுறுத்தல்களை (பிப்ரவரி 2011) மீறுவதாக இருந்தது. பல ஆலோசனைகள் மற்றும் நெடுஞ்சாலையை அகலப்படுத்த (நான்கு வழிச்சாலை) தேசிய நெடுஞ்சாலைத்துறையால் எடுக்கப்பட்ட முடிவு ஆகியவற்றிற்குப்பின், தற்போதுள்ள சாலையின் அகலம், குழாய் அமைக்கவும் மற்றும் முன்மொழியப்பட்ட சாலை அகலப்படுத்துதலுக்கும் போதுமானதாக இல்லாததால், மாற்றுப் பாதையில் நீர் குழாய் அமைக்க TWAD வாரியம் அறிவுறுத்தப்பட்டது (செப்டம்பர் 2024).

---

9 தொகுப்பு II - NH 32, 85 மற்றும் 87ல் 100.134 கி.மீ.க்கு அனுமதி கோரப்பட்டது; தொகுப்பு IV - பரமக்குடி - இராமநாதபுரம் மற்றும் இராமநாதபுரம் - மண்டபம் NHல் 64.187 கி.மீ.க்கு அனுமதி கோரப்பட்டது.

இதன் விளைவாக, அக்டோபர் 2024 நிலவரப்படி, 82 விழுக்காடு குழாய்கள் கொள்முதல் செய்யப்பட்டிருந்தும், குழாய் பதிக்கும் பணிகளில் 62 விழுக்காடு மட்டுமே நிறைவடைந்திருந்தது.

விளக்கப்படம் 3.5: JJM பணிகளுக்கான குழாய்கள் சாலையோரத்தில் கிடக்கும் காட்சி



சாலையோரங்களில் பல இடங்களில் பதிக்கப்படாத குழாய்கள் வைக்கப்பட்டிருந்தது JPVன் போது கவனிக்கப்பட்டது (**விளக்கப்படம் 3.5**).

NHAIன் ஒப்புதல் பெறவேண்டியிருந்ததால், சாத்தியமான இடங்களில் குழாய்களைப் பதிக்க ஒப்பந்ததாரர் அறிவுறுத்தப்பட்டதாக அரசு பதிலளித்தது (ஏப்ரல் 2025). தளத்தை உறுதிப்படுத்தாமல் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாலும், இதுவரை மேற்கொள்ளப்பட்ட செலவினம் பயனற்றதானதாலும் பதில் ஏற்புடையதாக இல்லை.

### *(ஈ) ZBR மற்றும் சேவை நீர்த்தேக்கங்களின் கட்டுமானம்*

தொகுப்பு வாரியான ZBR மற்றும் சேவை நீர்த்தேக்கங்களின் எண்ணிக்கை மற்றும் மே 2025 நிலவரப்படி மேற்கொள்ளப்பட்ட பணிகளின் நிலை **அட்டவணை 3.4ல்** விவரிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.4: கட்டுமானப் பணி நிலை**

| விவரங்கள் | ZBR | சேவை நீர்த்தேக்கங்கள் |
|---|---|---|
| | (எண்களில்) | |
| நிறைவடைந்த பணிகள் | 35 | 596 |
| கட்டுமானத்தில் இருந்த பணிகள் | 62 | 164 |
| தொடங்கப்படாத பணிகள் | 0 | 64 |
| **மொத்தம்** | **97** | **824** |

(ஆதாரம்: TWAD ஆல் வழங்கப்பட்ட விவரங்கள்)

புதிய MVS பணியை நிறைவேற்றுவதற்கான இலக்கு அக்டோபர் 2024 ஆக இருந்தபோதிலும், மே 2025 நிலவரப்படி, 36 விழுக்காடு ZBRகள் மட்டுமே நிறைவடைந்திருந்தது கவனிக்கப்பட்டது. மேலும், பணிகளின் மீது நடத்தப்பட்ட JPVன் போது, தலைப்புசீர் பணிகள் (‘ஹெட்வொர்க்ஸ்’) கட்டுமானம், நீர் சுத்திகரிப்பு ஆலையை நிறுவுதல், குழாய்கள் பதித்தல் மற்றும் உயர் நீர் தேக்கத் தொட்டிகள் அமைக்கும் பணிகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட காலத்திற்குள் நிறைவேற்றப்படவில்லை என்பதும் கவனிக்கப்பட்டது.

திறமையான தொழிலாளர்கள் போதுமான எண்ணிக்கையில் இருக்கவில்லை என்று அரசு பதிலளித்தது (ஏப்ரல் 2025). மீதமுள்ள பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க ஒப்பந்ததாரருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. நீர்த்தேக்கங்களை முடிப்பதில் ஏற்பட்ட தாமதம், பயனுள்ள வகையில் தண்ணீர் விநியோகிக்கப்படுவதற்குத் தேவையான நீர் சேமிப்புத் திறனைப் பாதித்ததாக தணிக்கை கண்டது. ஜூன் 2024 நிலவரப்படி, 31 விழுக்காடு வீடுகள் மட்டுமே இத்திட்டத்தில் பயன் பெற்றதால் JJMன் அடையப்படவேண்டிய மொத்த சாதனையையும் இது பாதித்தது.

### 3.6.2 சேலம் மாவட்டத்தில் CWSSன் மறுசீரமைப்பு பணிகளை நிறைவேற்றுவதில் இருந்த தாமதம்

சேலம் மாவட்டத்தில், குடிநீர் விநியோகத்தை நாளொன்றுக்கு ஒரு நபருக்கு 40 லிட்டரிலிருந்து 55 லிட்டராக உயர்த்த ஏற்கனவே இருந்து வரும் திட்டத்தின்[10] (ஜூன் 2003 முதல்) மறுசீரமைப்புப் பணிகளுக்காக தமிழ்நாடு அரசு ₹85.63 கோடிக்கான[11] நிர்வாக அனுமதி வழங்கியிருந்தது (ஜூலை 2022). இதை அடைய, இறுதி கட்ட இலக்கான 2054 ஆம் ஆண்டிற்கான கூடுதல் தேவை, 5.166 மில்லியன் லிட்டர் (MLD) என மதிப்பிடப்பட்டது.

பணி நிறைவேற்றப்படுவதற்கான இலக்காக 12 மாதங்கள் நிர்ணயிக்கப்பட்டு (ஆகஸ்ட் 2024), அதற்கான ஆணை ஆகஸ்ட் 2023ல் வழங்கப்பட்டது. இருப்பினும், மார்ச் 2025 நிலவரப்படி, பணி முடிவடையவில்லை. JPV மற்றும் தணிக்கைக்கு வழங்கப்பட்ட பதிவேடுகளின் அடிப்படையில், தாமதத்திற்கான காரணக்கூறுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

#### *(அ) தொடர்புடைய துறைகளிடமிருந்து ஒப்புதல்களைப் பெறுவதில் தாமதம்*

விளக்கப்படம் 3.6: அனுமதி கிடைக்கும் வரை குழாய்கள் பதிக்கப்படவில்லை



நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து ஒப்புதல் பெறுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, 1.4 கி.மீக்கு குழாய் பதிக்கப்பட வேண்டிய பணி ஒன்று[12], முழுமையடையாமல் இருந்தது. குழாய்களைப் பதிக்க, TWAD, நவம்பர் 2022ல் அனுமதி கோரியிருந்த போதிலும், குழாய்களைப் பதிப்பது வலப்பக்கமா அல்லது இடப்பக்கமா என்பது நெடுஞ்சாலைத் துறையால் முடிவு செய்யப்படவில்லையாதலால் ஒப்புதல் பெறுவது நிலுவையில் இருந்தது. இதன் விளைவாக, இந்தப் பகுதிக்கான குழாய்ப் பாதை இன்றுவரை அமைக்கப்படாமல், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் அனுமதியை எதிர்பார்த்து, குழாய்கள் பல இடங்களில் சாலையோரங்களில் வைக்கப்பட்டிருந்தன (**விளக்கப்படம் 3.6**).

#### *(ஆ) முழுமையடையாத குழாய் நிறுவல்*

மார்ச் 2025 நிலவரப்படி, 5.6 கி.மீக்கு MS குழாய் பதித்தல் முக்கிய கூறுகளில் ஒன்றாக இருந்தும், 4.2 கி.மீக்கான குழாய்கள் மட்டுமே வழங்கப்பட்டு நிறுவப்பட்டிருந்தன. மீதமிருந்த 1.4 கி.மீக்கான MS குழாய்கள் கிடைக்காததால் இன்னும் பதிக்கப்படவில்லை. திட்டம் தொடங்கப்படுவதற்கு முன்னரே MS குழாய்களை பெறாதது திட்டத்தை முடிப்பதில் தாமதத்தை ஏற்படுத்தியது. இவ்வாறு, மேற்கூறப்பட்ட தாமதம்

---

10 சேலம் மாவட்டத்தில் உள்ள கடையம்பட்டி மற்றும் மூன்று ஒன்றியங்களில் உள்ள 136 ஃப்ளோரைடு பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் மற்றும் 512 வழியோர குடியிருப்புகளுக்கான ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம் (CWSS)

11 TWAD வாரியம் - ₹43.53 கோடி செலவில் மூலத்திலிருந்து மேல்நிலை தொட்டி கூறுகளை செயல்படுத்துதல்; RD&PR துறை - ₹42.10 கோடி செலவில் விநியோக அமைப்பு மற்றும் FHTCகள் உட்பட கிராமத்திற்குள் கூறுகளை செயல்படுத்துதல்

12 ஓமலூர் ஒன்றியத்தில் திண்டமங்கலம் BPT மற்றும் திமிரிக்கோட்டை பிரிவிற்கு இடையே குழாய்.

இக்குடியிரு களுக்கு நாளொன்றுக்கு ஒரு நபருக்கு 55 லிட்டர் தண்ணீர் வழங்கப்பட வேண்டும் என்னும் இத்திட்டத்தின் நோக்கம் அடையப்படுவதை பாதித்தது.

**பரிந்துரை 5: JJMன் கீழ் நீர் வழங்கல் பணிகள் அனைத்தும் தாமதமின்றி நிறைவேற்றப்பட, அவை தொடங்கப்படும் முன்னரே தேவையான அனைத்து ஒப்புதல்களும் பெறப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்ய TWAD வாரியத்தை அரசு அறிவுறுத்த வேண்டும்.**

## 3.7 RD&PR துறையில் உள்ளூர் கூறுகளுக்கான பணிகள்

தெரிவு செய்யப்பட்ட ஆறு மாவட்டங்களில், 2020-24 ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்ட உள்ளூர் பணிகளின் மாவட்ட வாரியான எண்ணிக்கை **இணைப்பு 3.3ல்** வழங்கப்பட்டுள்ளது.

### 3.7.1 பணியை முடிப்பதில் தாமதம்

ஒப்பந்தத்தின் பொதுவான நிபந்தனைகளின்படி, பணி முடிப்பதில் தாமதம் ஏற்படின், அத்தாமதத்திற்கான அபராதம் விதிக்கப்பட்டு ஒப்பந்ததாரரிடமிருந்து வசூலிக்கப்படும். 60 நாட்களுக்கு மேல் தாமதம் ஏற்பட்டால், வழங்கப்பட்ட பணி உத்தரவு ரத்து செய்யப்பட்டு பாதுகாப்பு வைப்புத்தொகை பறிமுதல் செய்யப்பட வேண்டும். மேலும் ஒப்பந்ததாரர் கருப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

நான்கு மாவட்டங்களில்[13], 4,261 பணிகளுள், 4,010ல் பணி முடிவடைவதில் 30 நாட்கள் முதல் 1,380 நாட்கள் வரை தாமதம் இருந்ததை தணிக்கை கவனித்தது. தாமதத்திற்கு அபராதம் விதித்தலுக்குக் கூடுதலாக, ரத்து செய்தல், கருப்புப் பட்டியலில் சேர்த்தல் போன்றவை பரிந்துரைக்கப்பட்டாலும், இது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேலும், உள்ளூர் பணிகளை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட தாமதம், கடை முனை பகுதியில் குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்படுவதை பாதித்ததோடு JJMன் நோக்கம் அடையப்படுவதையும் பாதித்தது.

கோயம்புத்தூர் மாவட்டத்துடன் தொடர்புடைய 786 பணிகளில் ₹16.47 இலட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக அரசு பதிலளித்தது (ஏப்ரல் 2025). மீதமுள்ள மூன்று மாவட்டங்களைப் பொறுத்தவரை குறிப்பிட்ட பதில் எதுவும் அளிக்கப்படவில்லை. மீதமுள்ள மூன்று மாவட்டங்களுக்கும், கோயம்புத்தூரில் தாமதமான அனைத்துப் பணிகளுக்கும் அபராதம் விதிப்பது குறித்து பதிலில் குறிப்பிடப்படவில்லை. மேலும், தவறு செய்த ஒப்பந்ததாரர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்தும் பதிலில் குறிப்பிடப்படவில்லை.

13 கோயம்புத்தூர், சேலம், தேனி மற்றும் விழுப்புரம்.

### 3.7.2 OHTகளின் கட்டுமானத்தில் TWAD வாரியத்தின் விதிமுறைகள் பின்பற்றப்படாதது

OHTகளின் கட்டுமானத்தைப் பொறுத்தவரை, நீர் விநியோகத்திற்கான குறைந்தபட்ச அழுத்தம் உறுதி செய்யப்படுவதில் OHTன் நிலைப்படுத்தல் உயரம்[14] இன்றியமையாத ஒன்றாகும். TWAD வாரியம் பின்பற்றும் விதிமுறைகளின்படி, 30,000 லிட்டர் மற்றும் அதற்கு மேற்பட்ட கொள்ளளவு கொண்ட OHTகளுக்கு 12 மீட்டர் நிலைப்படுத்தல் உயரம் தேவை.

கோயம்புத்தூர் மாவட்டத்தின் மூன்று[15] VPகளில் RD&PR துறையால் கட்டப்பட்ட நான்கு OHTகளின் மீதான சோதனையில் (மே/ஜூலை 2022), அவற்றின் கொள்ளளவு 30,000/60,000 லிட்டராக இருந்த போதிலும், TPIA அறிக்கையின்படி நிலைப்படுத்தல் உயரம் 6 மீ முதல் 9.1 மீ வரை மட்டுமே இருந்தது தெரியவந்தது. இது மேற்கூறப்பட்ட விதிமுறைகளை மீறுவதாகும். இந்த OHTகளின் நிலைப்படுத்தல் உயரம் போதுமானதாக இல்லாத நிலையில், கடைமுனை குடியிருப்பு வரை நீர் நிலையாக நீடித்து விநியோகிக்கப்படுவதற்குத் தேவையான குறைந்தபட்ச அழுத்தத்தை அது பாதிக்கக் கூடியதாக இருக்கு .

## 3.8 பயன்படுத்தப்படாத கட்டமைப்புகள்

#### இராமநாதபுரம் மாவட்டம்

இராமநாதபுரம் மாவட்டத்தில், OHTகளின் கட்டுமானம் முடிவடைந்திருந்தாலும், அவை, CWSS/MVS அல்லது உள்ளூர் ஆழ்துளை கிணற்றுடன் இணைக்கப்படாததால், அவற்றில் தண்ணீர் சேமிக்கப்படவில்லை என்பதை JPVன் போது (செப்டம்பர் 2024) தணிக்கை கண்டது. மேலும், FHTCகளின் குடிநீர் விநியோக குழாய்கள் OHTகளுடன் இணைக்கப்படவில்லை.

இதற்கு பதிலளித்த இராமநாதபுரம் DRDAன் கூடுதல் ஆட்சியர்/திட்ட இயக்குநர் (செப்டம்பர் 2024) (i) சொந்த ஆதாரத்திலிருந்து (ஆழ்துளை கிணறுகள்) கிடைக்கக்கூடிய தண்ணீர் மழைக்காலத்தை சார்ந்துள்ளது (ii) CWSS/MVS பணிகள் முடிவடைந்ததும், நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு 55 லிட்டர் குடிநீர் கிடைப்பதை உறுதி செய்ய முடியும் மற்றும் (iii) மறுசீரமைப்பு மற்றும் புதிய MVS திட்டப் பணிகள் முடிவடைந்த பிறகு அனைத்து உள்கட்டமைப்புகளும் திறம்பட பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என்று கூறினார்.

இவ்வாறு, ஒவ்வொரு வீட்டிற்கும் நீடித்த நிலையான மற்றும் போதுமான அளவு நீர் விநியோகிக்கப்பட வேண்டும் என்ற நோக்கம் அடையப்படாமல், குடியிருப்பாளர்கள் மாற்று ஆதாரம் மற்றும் அதிக விலையில் குடிநீர் ஆதாரங்களைத் தேட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

---

[14] நிலைப்படுத்தலின் உயரம் என்பது தொட்டியின் தாழ்வான விநியோக நிலைக்கும் தொட்டி இருக்கும் தளத்தில் சராசரி தரை மட்டத்திற்கும் உள்ள வித்தியாசமாகும்.

[15] தேக்கம்பட்டி, ராசிசெட்டிபாளையம் மற்றும் வதம்பச்சேரி.

### விழுப்புரம் மாவட்டம்

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர், விக்கிரவாண்டி வட்டாரத்தில் ₹73.48 இலட்சம் மதிப்பீட்டில் ஐந்து[16] ஆழ்துளை கிணறுகள் கட்டப்பட நிர்வாக அனுமதி வழங்கியிருந்தார் (ஆகஸ்ட் 2020). குத்தம்பூண்டி VPல் இருந்த இரண்டு ஆழ்துளை கிணறுகளில், மோட்டார் மற்றும் பம்ப் அறை போன்ற அத்தியாவசிய வசதிகள் இல்லாததால், ஒரு ஆழ்துளை கிணறு 24 மாதங்களுக்கும் மேலாக செயல்படாமல் இருந்ததையும், JJMன் கீழ் கயத்தூர் VPல் உருவாக்கப்பட்ட மூன்று ஆழ்துளை கிணறுகளும் செயல்படாமல் இருந்ததையும் JPVன் (செப்டம்பர் 2024) போது தணிக்கை கவனித்தது. ஆழ்துளை கிணறுகள் பயன்படுத்தப்படாததால், அவை கட்டப்பட்டதற்கான நோக்கம் அடையப்படவில்லை.

ஆழ்துளை கிணறுகளில் இருந்து தண்ணீர் தர சோதனைக்காக TWAD வாரியத்தின் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும், சோதனை அறிக்கையின் அடிப்படையில் ஆழ்துளை கிணற்றைப் பயன்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அரசு பதிலளித்தது (ஏப்ரல் 2025). பணி எடுக்கப்படும் முன்பே நீரின் தர சோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என்பதால் பதில் ஏற்புடையதாக இல்லை.

### தேனி மாவட்டம்

தேனி மாவட்ட ஆட்சியர்/தேனி மாவட்ட வளர்ச்சி முகமையின் தலைவர், போடிநாயக்கனூர் வட்டாரத்தில் ₹1.30 கோடி மதிப்பீட்டில் 'சில்லமரத்துப்பட்டி கிராமத்திற்கு தற்போதுள்ள உறிஞ்சுக் கிணற்றிலிருந்து (infiltration well) தரைமட்ட நீர் சேகரிப்பு தொட்டிக்கு நீர் வழங்குதல்' பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கியிருந்தார் (ஆகஸ்ட் 2020). மேலும் இந்தப் பணி நவம்பர் 2022ல் நிறைவடைந்தது. திட்டமிட்டிருந்தபடி உறிஞ்சுக் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்காமல், உள்ளூர் போர்வெல்லில் இருந்து வழங்கப்பட்டு வந்ததை JPVன் போது தணிக்கை கண்டது. அதற்கான காரணங்கள் பதிவேட்டில் இருக்கவில்லை. இதன் விளைவாக, உறிஞ்சுக் கிணற்றிலிருந்து தரைமட்ட தொட்டிக்கு தண்ணீர் வழங்கப்படாததால், மேற்கொள்ளப்பட்ட ₹1.30 கோடி செலவினம் பயனற்றதானது.

தணிக்கை வினவலுக்கு பதிலளிக்கும் விதமாக, JJM பணியின் கீழ், 40 HP மோட்டார் வழங்கப்பட்டதாக மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை (DRDA) கூறியது (செப்டம்பர் 2024). இருப்பினும், மேற்கண்ட மோட்டார் திறனுக்கான தண்ணீர் இல்லை எனவும், அதிக திறன் கொண்ட மோட்டார் காரணமாக பிரதான நீருந்து குழாய்கள் வெடித்தன எனவும் கூறப்பட்டது. மேலும், மோட்டார் திறன் தற்போது 20 HP ஆகக் குறைக்கப்பட்டு சோதனை ஓட்டங்கள் நடைபெற்று வருவதாகவும் கூறப்பட்டது.

உறிஞ்சுக் கிணற்றிலிருந்து தண்ணீரைப் பயன்படுத்த கூடுதல் தரைமட்டத் தொட்டி அமைக்கும் பணி முடிக்கப்படும் என்று அரசு பதிலளித்தது (ஏப்ரல் 2025). குறைவான திறன் கொண்ட மோட்டாரைப் பயன்படுத்திய

[16] குத்தம்பூண்டி ஊராட்சியில் இரண்டு ஆழ்துளை கிணறுகளும், கயத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் மூன்று போர்வெல்களும்.

பிறகு, தற்போதுள்ள ஆதாரத்தில் போதுமான தண்ணீர் இல்லாது போனால், மாற்று மூலாதாரத்தைக் கருத்தில் கொள்ள வேண்டுமேயன்றி, கூடுதல் தரைமட்டத் தொட்டி கட்டப்படலாகாது என்பதால் பதில் ஏற்புடையதாக இல்லை.

**பரிந்துரை 6: அடையப்பட வேண்டிய இலக்கு எட்டப்பட, உருவாக்கப்பட்ட அனைத்து உடைமைகளும் பயன்படுத்தப்பட வேண்டும். இதனை உறுதி செய்ய, பணி நிறைவேற்றப்படுவதில் காணப்பட்ட குறைபாடுகள் விரைவில் முறையாக சரி செய்யப்பட துறையை அரசு அறிவுறுத்த வேண்டும்.**

## 3.9 அதிகப்படியான சேமிப்பு அமைப்புகளின் கட்டுமானம்

ஜல் ஜீவன் இயக்கத்தை செயல்படுத்துவதற்கான தமிழ்நாடு அரசின் செயல்பாட்டு வழிகாட்டுதல்கள், மேல்நிலை தொட்டிகள் (OHTகள்) மற்றும் தரைமட்ட நீர்த்தேக்கங்கள் (GLRகள்) போன்ற சேமிப்பு கட்டமைப்புகளை நிர்மாணிப்பதற்கான முன்மொழிவு மற்றும் அதற்கான அனுமதி தொடர்பான விரிவான வழிமுறைகளை வழங்கியுள்ளன. அதன்படி கீழ்காணும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

- கூடுதல் தேவைகளின் அடிப்படையில், தேவைப்படும்போது மட்டுமே புதிய சேமிப்பு கட்டமைப்புகள் முன்மொழியப்படலாம்.
- இறுதியாக நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு, தெரிவு செய்யப்பட்ட குடியிருப் தினசரி மொத்த நீர் தேவையை மதிப்பிடுவதன் மூலம் OHTக்கான தேவை தீர்மானிக்கப்படுகிறது.
- ஒரு நாளைக்கு இரண்டு நிரப்புதல்களுடன் விநியோகத்தை நிர்வகிக்கும்படி, OHTன் திறன் அன்றாட மொத்த தேவையில் 50 விழுக்காடு கொள்ளளவில் அமைக்கப்பட வேண்டும். இதன் மூலம் நிதியானது திறன்பட பயன்படுத்தப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும்.

பல்வேறு திட்டங்களின் கீழ் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதால், தேவையான கொள்ளளவை விட அதிகமான திறனைக் கொண்ட சேமிப்பு கட்டமைப்புகளை பல VPகள் கொண்டிருந்ததை RD&PR துறை இயக்குநர் அடையாளம் கண்டுள்ளார் (2015). இதன் விளைவாக, வீணான செலவினங்களுக்கு வழிவகுக்கும் வகையில் அதிகப்படியான கொள்ளளவு கொண்ட கூடுதல் OHTகள் கட்டப்படலாகாது என்று அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன (ஏப்ரல் 2015). மேலும், கூடுதல் OHTன் அவசியம் உள்ள இடங்களில், அவற்றின் தேவை நியாயப்படுத்தப்பட்டு, மாவட்ட ஆட்சியரிடமிருந்து முன் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

### *(அ) இராமநாதபுரம் மாவட்டம்*

ஏப்ரல் 01, 2023 நிலவரப்படி, நிர்ணயிக்கப்பட்டிருந்த 2053ஆம் ஆண்டிற்கான திட்டமிடப்பட்ட தினசரி நீர் தேவைகள் மற்றும் சேமிப்புத் தேவையுடன் ஒவ்வொரு குடியிருப்பிலும் மக்கள் தொகை மற்றும் ஏற்கனவே இருந்த சேமிப்பு கட்டமைப்புகளை விவரிக்கும் DRDA

அறிக்கையின் தரவுகளை தணிக்கை ஒப்பிட்டு பகுப்பாய்வு செய்தது. 2020-24 ஆண்டுகளில் JJM மற்றும் பிற திட்டங்களுக்கு முன்னரும், பின்னரும் மாவட்டங்களின் 2,306 குடியிருப்புகளில் இருந்த நீர் சேமிப்பு கட்டமைப்புகளின் போதுமான அளவு **அட்டவணை 3.5ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.5: இராமநாதபுரம் குடியிருப்புகளில் இருந்த நீர் சேமிப்பு கட்டமைப்புகளின் போதுமான அளவு**

| குடியிருப்புகளில் எற்கனவே இருந்த சேமிப்பு கட்டமைப்புகளின் கொள்ளளவு | JJM தொடங்குவதற்கு முன் | 2020-24 ஆம் ஆண்டில் கட்டமைப்புகள் உருவாக்கப்பட்ட பிறகு | அதிகரிப்பு (+) / குறைவு (-) விழுக்காட்டில் |
|---|---|---|---|
| அதிகப்படியான | 363 | 655 | *80.44* |
| போதுமான | 487 | 729 | *49.69* |
| சேமிப்பு அமைப்பு இல்லை/தேவைக்கு குறைவான | 1,456 | 922 | *(-) 36.68* |

(ஆதாரம்: RD&PR துறையால் வழங்கப்பட்ட சேமிப்பு கட்டமைப்புகளின் கொள்ளளவு குறித்த தணிக்கை பகுப்பாய்வு)

மேற்கூறப்பட்ட காலகட்டத்தில் மாவட்டத்தில் மொத்தம் 943 OHTகள் கட்டப்பட்டிருந்தன. JJM தொடங்கப்படுவதற்கு முன்பே சேமிப்பு வசதிகளில் பற்றாக்குறையுடன் இருந்த குடியிருப்புகள் இருந்தபோதிலும் அதிக சேமிப்பு வசதிகளைக் கொண்டிருந்த குடியிருப்புகளுக்கு, கூடுதல் OHTகள் வழங்கப்பட்டிருந்தது தெளிவாகிறது. மேலும், JJM தொடங்கப்படுவதற்கு முன்பு 1,456 குடியிருப்புகளுள் 830 குடியிருப்புகளில் எந்த சேமிப்பு அமைப்பும் இல்லை. மேலும், 430 குடியிருப்புகள் (922 குடியிருப்புகளில்) தொடர்ந்து எந்த சேமிப்பு அமைப்பும் இல்லாத நிலையில் இருந்தன. JJM மற்றும் பிற திட்டங்களின் கீழ், 2020-24 ஆண்டுகளில், குடியிருப்புகளுக்கு வழங்கப்பட்ட கூடுதல் OHTகளின் விவரங்கள் **விளக்கப்படம் 3.7ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**விளக்கப்படம் 3.7: கூடுதல் OHTகள் வழங்கப்பட்டிருந்த குடியிருப்புகள்**




(ஆதாரம்: குடியிருப்புகளுக்கு அனுமதிக்கப்பட்ட OHTகளின் மீதான தணிக்கை பகுப்பாய்வு)

போதுமான குடிநீர் சேமிப்பு கட்டமைப்புகளைக் கொண்ட 487 குடியிருப்புகளுள் 105 (21.56 விழுக்காடு) மற்றும் JJM தொடங்கப்படுவதற்கு முன்பு அதிகப்படியான நீர் சேமிப்பு கட்டமைப்புகளைக் கொண்டிருந்த 363 குடியிருப்புகளுள் 92ல்

(25.34 விழுக்காடு) கூடுதல் OHTகள் வழங்கப்பட்டிருந்தது **அட்டவணை 3.7ல்** இருந்து தெரியவருகிறது. மேலும், ஏற்கனவே அதிகப்படியான சேமிப்பு கட்டமைப்புகளைக் கொண்ட 92 குடியிருப்புகளுள் 12ல் ஒன்றுக்கும் மேற்பட்ட OHTகள் கட்டப்பட அனுமதிக்கப்பட்டிருந்தது.

### *(ஆ) சேலம் மாவட்டம்*

சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரை, நிர்ணயிக்கப்பட்டிருந்த இலக்கு ஆண்டான 2053ன் திட்டமிடப்பட்ட தினசரி நீர் தேவைகள் மற்றும் சேமிப்புத் தேவைகளுக்கு எதிராக, ஏப்ரல் 2023 நிலவரப்படி, DRDA அறிக்கையின்படியான சேமிப்பு கட்டமைப்புகளை தணிக்கை மதிப்பாய்வு செய்தது (மார்ச் 2025). சேலம் மாவட்டத்தில் இருந்த 5,109 குடியிருப்புகளுள், 530 குடியிருப்புகளில் (10.39 விழுக்காடு) சேமிப்பு கட்டமைப்புகள் முழுமையாக இல்லாத நிலையில், 2,772 குடியிருப்புகள் (54 விழுக்காடு) அவற்றின் தேவைகளை விட அதிகமான சேமிப்பு திறன்களைக் கொண்டிருந்தன **(விளக்கப்படம் 3.8)**.

விளக்கப்படம் 3.8: சேலம் மாவட்டத்தில் சேமிப்பு கட்டமைப்புகளுடன் கூடிய குடியிருப்புகளின் இருப்பு




சேலம் மாவட்ட ஆட்சியர், காவேரிபுரம் மற்றும் கொளத்தூர் ஒன்றியத்திற்கு, ₹19.98 கோடி செலவில், முறையே 26 OHTகள் மற்றும் 15,031 FHTCகள் கட்டுவதற்கான நிர்வாக அனுமதியை வழங்கியிருந்தார் (ஜூன் 2022). கட்டப்பட்ட OHTகள் மீது தணிக்கை நடத்திய JPVன் போது (மார்ச் 2025) பின்வருவன கவனிக்கப்பட்டன:

- மூன்று[17] குடியிருப்புகளில் புதிதாக கட்டப்பட்ட OHTகளுக்கு தண்ணீர் வழங்கப்படவில்லை.
- JJMன் கீழ், TWAD வாரியத்திற்கு எவ்வித முன் அறிவிப்பும் வழங்கப்படாமலேயே 26 OHTகள், RD&PR துறையால் கட்டப்பட்டிருந்தன.
- ஏற்கனவே இருந்த OHTகளுக்கு அருகிலேயே கூடுதலாக OHTகள் கட்டப்பட்டிருந்தன **(விளக்கப்படம் 3.9).**



விளக்கப்படம் 3.9: கொளத்தூர் தொகுதியில் ஏற்கனவே உள்ள OHT-க்கு அருகில் புதிதாக கட்டப்பட்ட OHT

[17] செட்டிப்பட்டி காலனி, கணவாய்க்காடு மற்றும் மேல்மொலபொறையூர் வட்டாரங்கள்.

- பழைய பம்புகள் பொருத்தமான வகை மற்றும் திறன் கொண்ட பம்ப் செட் மற்றும் பொருத்தமான விட்டம் கொண்ட குழாய்களால் மாற்றி அமைக்கப்பட்ட பின்னரே CWSSலிருந்து புதிய OHTகளுக்கு தண்ணீர் வழங்கப்பட இயலும் என்றும் TWAD அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

தணிக்கை பின்வருவனவற்றை கவனித்தது (i) OHTகளுக்கு நீர் வழங்கப்படாததற்கான காரணங்கள் மற்றும் நிலையான விவரக்குறிப்புகளுக்கு எதிராக, பல்வேறு வகையான குழாய்களைப் பயன்படுத்தியதற்கான காரணங்கள் பதிவு செய்யப்படவில்லை (ii) OHTகள் கட்டுமானம் தவிர்க்கப்பட்டு சேமிப்பு அமைப்புகள் குறைவாக இருந்த குடியிருப்புகளில் (சேவை குறைவாக உள்ள பகுதிகள்) கட்டப்பட்டிருக்கலாம். இது உருவாக்கப்பட்ட உடைமைகளின் குறைவான பயன்பாட்டைக் குறிப்பதோடு போதுமான திட்டமிடல் இல்லாமை மற்றும் வளத்தின் மீதான தவறான மேலாண்மை ஆகியவற்றையும் குறிக்கிறது.

OHTகளுக்கான தேவை அடையப்படுவதற்கு முன்பு OHTகளின் நிலைப்படுத்தல் உயரம் மற்றும் அவை கட்டி நிறைவேற்றப்பட்ட காலம் ஆகியவையும் பரிசீலிக்கப்பட்டதாக அரசு பதிலளித்தது (ஜூலை 2025). இராமநாதபுரத்தில் தற்போதுள்ள புதிய MVS மற்றும் CWSSன் மறுசீரமைப்பு பணிகள் முடிவடைந்ததும், 20 ஆண்டுகளுக்கும் மேலான OHTகள் இடிக்கப்பட்டு, மீதமுள்ள OHTகள் மாவட்டத்தில் மக்களின் தேவையை பூர்த்தி செய்யும். அத்தகைய உள்கட்டமைப்பு இல்லாத குடியிருப்புகளில் OHTகளை கட்டிய பின்னரே மேற்கூறப்பட்ட செயல்முறை பரிசீலிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதால் பதில் ஏற்புடையதாக இல்லை.

**பரிந்துரை 7: உருவாக்கப்பட்ட கட்டமைப்புகள் பயனற்றதாக இருப்பதைத் தவிர்க்கவும் வளங்களின் உகந்த பயன்பாட்டிற்கும், தேவைகளுள்ள குடியிருப்புகளில் மட்டுமே சேமிப்பு உள்கட்டமைப்பு உருவாக்கப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.**

# அத்தியாயம் IV

# நிதி மேலாண்மை

# அத்தியாயம் IV

# நிதி மேலாண்மை

**தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் குடிநீர் வழங்கல் திட்டத்தைப் பெறுவதற்கு முன்நிபந்தனையாக இருக்கும் சமூக பங்களிப்பில் 33 விழுக்காடு மட்டுமே வசூலிக்கப்பட்டிருந்ததை தணிக்கை கவனித்தது. குடிநீர் இணைப்பு கட்டணங்கள் மதிப்பீடு செய்யப்படாமலும் குறைவாக வசூலிக்கப்பட்டும் இருந்தன. நிதி தாமதமாக விடுவிக்கப்படுதல், வசூலிக்கப்பட்ட EMD தொகை வேறு பணிகளுக்கு பயன்படுத்தப்படுதல், பிடித்தம் செய்யப்பட்ட தொழிலாளர் நல நிதி அதற்கான கணக்கிற்கு மாற்றப்படாதது போன்ற பிற சிக்கல்களும் கவனிக்கப்பட்டன.**

## 4.1 முன்னுரை

JJMஐ செயல்படுத்துவதற்கான மத்திய அரசின் செயல்பாட்டு வழிகாட்டுதல்களின்படி, இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான மத்திய-மாநில நிதி பகிர்மான முறை, கிராமப்புற வீடுகளில் FHTCகள் வழங்குவதற்கு 50:50 என்ற விகிதத்திலும், குடிநீர் தரம் மற்றும் கண்காணிப்பு (Water Quality Monitoring and Surveillance - WQM&S) உள்ளிட்ட ஆதரவு நடவடிக்கைகளுக்கு 60:40 என்ற விகிதத்திலும் இருக்க வேண்டும். மத்திய அரசின் பங்கு, 2022-23 ஆம் ஆண்டு வரை, பொது நிதி மேலாண்மை அமைப்பு போர்ட்டல் மூலம் மாநில அரசு கணக்கிற்கு செலுத்தப்பட்டது. இது பெறப்பட்ட 15 நாட்களுக்குள், அனுமதிக்கப்பட்ட தொகையுடன் அதற்குப் பொருந்தக்கூடிய மாநிலப் பங்கையும் சேர்த்து, திட்ட இயக்குநரால் பராமரிக்கப்படும் திட்டத்தின் 'ஒற்றை முதன்மை கணக்கில்' (Single Nodal Account - SNA) மாநில அரசு விடுவிக்க வேண்டும். ஜனவரி 2023 முதல், மத்திய மற்றும் மாநிலத்தின் நிதிப் பங்கு இரண்டும் நேரடியாக SNAக்கு விடுவிக்கப்பட்டன. அனைத்து பண செலுத்தங்களும் SNAஐப் பயன்படுத்தி செயல்படுத்தும் முகமைகளால் போர்ட்டல் மூலம் செலுத்தப்பட்டன.

தமிழ்நாட்டில், JJMன் கீழ், 2019-2024 காலகட்டத்திற்கு பெறப்பட்ட நிதி மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களின் விவரங்கள் **அட்டவணை 4.1ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.1: மாநில அளவில் பெறப்பட்ட JJM நிதி மற்றும் செலவினம்**

**(₹ கோடியில்)**

| ஆண்டு | தொடக்க இருப்பு (OB) | வரவு | | | மொத்த வரவு | செலவினம் | | | மொத்த செல–வினம் | இறுதி இருப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மத்திய | மாநில | வட்டி | | மத்திய | மாநில | செலுத்தப்–பட்ட வட்டித் தொகை | | |
| 2019-20 | 11.76[1] | 373.10 | 184.83 | 3.54 | 573.23 | 99.97 | 99.13 | 0 | 199.10 | 374.13 |
| 2020-21 | 374.13 | 688.08 | 664.87 | 14.00 | 1,741.08 | 577.87 | 387.23 | 0 | 965.10 | 775.98 |
| 2021-22 | 775.98 | 630.71 | 826.3 | 22.35 | 2,255.34 | 467.25 | 506.68 | 0 | 973.93 | 1,281.41 |
| 2022-23 | 1,281.41 | 872.96 | 849.54 | 31.40 | 3,035.31 | 604.00 | 676.14 | 10.27 | 1,290.40 | 1,744.91 |
| 2023-24 | 1,744.91 | 2,617.10 | 2,556.03 | 36.54 | 6,954.58 | 2,620.71 | 2,614.95 | 67.94 | 5,303.60 | 1,650.98 |

(ஆதாரம்: TWAD வாரியம், சென்னை)

### 4.1.1 தாமதமாக விடுவிக்கப்பட்ட மத்திய உதவி

ஆண்டு 2022-23 வரையான JJMன் திட்ட காலத்தில் மாநில அரசால் பெறப்பட்ட மத்திய அரசின் பங்கு, நிர்ணயிக்கப்பட்ட தேதியிலிருந்து 6 முதல் 104 நாட்கள் வரையில் தாமதமாக SNAக்கு விடுவிக்கப்பட்டதாக பதிவுகளின் மீதான தணிக்கை ஆய்வு வெளிப்படுத்தியது. மேலும், மாநிலத்தின் பங்கு SNAக்கு விடுவிக்கப்பட்டதில் 14 முதல் 313 நாட்கள் வரை தாமதம் காணப்பட்டது. நிதி விடுவிக்கப்பட்டதில் ஏற்பட்ட தாமதங்கள் பற்றிய விவரங்கள் **இணைப்பு 4.1ல்** கொடுக்கப்பட்டுள்ளன. பொதுவாக மாநிலத்தின் பங்கு சரியான நேரத்தில் விடுவிக்கப்பட்டதாகவும், மேற்கூறப்பட்ட தாமதம் நிர்வாகக் காரணங்களால் ஏற்பட்டதாகவும் JJMன் திட்ட இயக்குநர் பதிலளித்தார் (பிப்ரவரி 2025). நிதி விடுவிக்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டாலும், நிதி பற்றாக்குறை காரணமாக JJMன் கீழ் பணிகளின் முன்னேற்றம் பாதிக்கப்படவில்லை எனத் தணிக்கை கண்டது.

## 4.2 JJMன் கீழ் சமூக பங்களிப்புகளின் குறைவான வசூல்

பயனர் கட்டணங்கள் மற்றும் செயல்பாடு மற்றும் பராமரிப்பு கட்டணங்கள் மீதான செலவினத்தை முழுமையாக மீட்டெடுப்பது இயக்கத்தின் நீண்டகால நிலைத்தன்மைக்கு பிரதானமானதாக அமையும் என்று ஜல் ஜீவன் இயக்கத்தின் செயல்பாட்டு வழிகாட்டுதல்கள் கூறுகின்றன. 2020 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட மாநிலத்திற்கான வழிகாட்டுதல்கள், இயக்கத்தின் உள்ளூர் கூறுகளின் செயல்பாடு மற்றும் பராமரிப்புக்கு VPகள் பொறுப்பேற்க வேண்டும் என வலியுறுத்தின. உள்ளூர் குழாய் நீர் வழங்கல் உள்கட்டமைப்பு மற்றும் தொடர்புடைய நீர் ஆதார மேம்பாட்டிற்கான சமூக பங்களிப்பு, கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி பணி தொடங்கப்படுவதற்கு முன்பு VPகளில் உள்ள வீடுகளிலிருந்து வசூலிக்கப்பட வேண்டும்:

- மலைப்பாங்கான, வனப்பகுதிகள் மற்றும் 50 விழுக்காட்டிற்கும் அதிகமான SC மற்றும்/அல்லது ST மக்கள்தொகை கொண்ட குடியிருப்புகள்/VPகளில் மூலதனச் செலவில் ஐந்து விழுக்காடு

[1] முந்தைய தேசிய ஊரக குடிநீர் திட்டத்திலிருந்து எடுக்கப்பட்ட தொடக்க இருப்பு.

ரொக்கமாக மற்றும்/அல்லது பொருளாக மற்றும்/அல்லது உழைப்பாக பெறப்பட வேண்டும்;

- மற்ற குடியிருப்புகள்/VPகளில், மூலதனச் செலவில் 10 விழுக்காடு ரொக்கமாக மற்றும்/அல்லது பொருளாக மற்றும்/அல்லது உழைப்பாக பெறப்பட வேண்டும்.

நீர் வழங்கல் திட்டங்களை மேற்கொள்வதற்கு கிராமத்தின் குறைந்தபட்சம் 80 விழுக்காடு குடும்பங்களிலிருந்து அவர்களின் விருப்பம் மற்றும் JJMன் கீழ் அவர்களின் பங்களிப்பு ஆகியவை தேவை. ஜூலை முதல் அக்டோபர் 2024 வரையிலான நிலவரப்படி, தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்கள் மற்றும் வட்டாரங்களில் இருந்த பயனாளிகளின் சமூகப் பங்களிப்பின் நிலுவை, வசூலிக்கப்பட்ட தொகை மற்றும் வசூலிக்கப்பட வேண்டிய தொகை **அட்டவணை 4.2ல்** விவரிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.2: சமூக பங்களிப்பின் நிலவரம்**

(₹ கோடியில்)

| மாவட்டம் | மாவட்ட அளவில் | | | தெரிவு செய்யப்பட்ட வட்டாரங்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | செலுத்தப் பட வேண்டிய தொகை | வசூலிக்கப் பட்ட தொகை | மீதம் (விழுக்– காட்டில்) | செலுத்தப் பட வேண்டிய தொகை | வசூலிக்கப் பட்ட தொகை | மீதம் (விழுக்காட்– டில்) |
| கோயம்புத்தூர் | 6.46 | 5.50 | 0.96 (*15*) | 1.38 | 0.96 | 0.42 (*31*) |
| நாகப்பட்டினம் | 3.37 | 0 | 3.37 (*100*) | 0.92 | 0 | 0.92 (*100*) |
| இராமநாதபுரம் | 7.75 | 1.84 | 5.91 (*76*) | 1.54 | 0.60 | 0.93 (*61*) |
| சேலம் | 28.26 | 5.01 | 23.25 (*82*) | 2.87 | 0.61 | 2.27 (*79*) |
| தேனி | 16.31 | 3.27 | 13.04 (80) | 3.42 | 0.90 | 2.52 (*74*) |
| விழுப்புரம் | 10.08 | 8.39 | 1.69 (17) | 1.05 | 0.98 | 0.07 (*7*) |
| **மொத்தம்** | **72.23** | **24.01** | **48.21 (*67*)** | **11.18** | **4.05** | **7.13 (*64*)** |

(ஆதாரம்: DRDAகளிடமிருந்து பெறப்பட்ட தரவு)

தெரிவு செய்யப்பட்ட ஆறு மாவட்டங்களில் நிலுவையில் இருந்த ₹72.23 கோடி மதிப்பிலான சமூகப் பங்களிப்புக்கு எதிராக ₹24.01 கோடி (33 விழுக்காடு) மட்டுமே வசூலிக்கப்பட்டிருந்தது **அட்டவணை 4.2ல்** இருந்து தெரிய வருகிறது. தெரிவு செய்யப்பட்ட வட்டாரங்களில் நிலுவையில் இருந்த ₹11.18 கோடி மதிப்பிலான சமூக பங்களிப்புக்கு எதிராக ₹4.05 கோடி (36 விழுக்காடு) மட்டுமே VPகளால் வசூலிக்கப்பட்டிருந்தன. மேலும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் சமூகப் பங்களிப்பு எதுவும் வசூலிக்கப்படவில்லை.

வசூலிக்கப்பட வேண்டிய மீதமுள்ள தொகை விரைவில் வசூலிக்கப்படும் என்று அரசு பதிலளித்தது (ஏப்ரல் 2025). இருப்பினும், பணிகள் செயல்படுத்தப்படும் முன்பு சமூகப் பங்களிப்பு வசூலிக்கப்படுவதை உறுதி செய்வதில் செயல்பாட்டு வழிகாட்டுதல்கள் பின்பற்றப்படவில்லை.

**பரிந்துரை 8: செயல்பாட்டு வழிகாட்டுதல்களின்படி தேவையான சமூக பங்களிப்புகள் பயனாளிகளிடமிருந்து வசூலிக்கப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.**

## 4.3 குடிநீர் கட்டணங்களின் குறைவான வசூல்

நீர் வழங்கல் திட்டங்களின் தடையில்லா செயல்பாடு மற்றும் பராமரிப்புக்கு தேவையான அளவுகோல்களில் இன்றியமையாத ஒன்று, செலவுத் தொகை மீட்பு மற்றும் முறையான நிதி கொள்கை ஆகும். இது செயல்படுத்தும் நிறுவனங்களின் நீண்ட கால நிதி பயன்பாடு மற்றும் அதன் நிலைத்தன்மையை அதிகரிக்கும். JJM-க்கான மாநில செயல்பாட்டு வழிகாட்டுதல்களிலும் குடிநீருக்கான கட்டண வசூல் வலியுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, VPகள் மாதத்திற்கு குறைந்தபட்ச நீர் கட்டணத் தொகையாக[2] ₹30 வசூலிக்க வேண்டும்.

இத்தகைய சூழலில், நவம்பர் 2024 நிலவரப்படி வழங்கப்பட்ட குடிநீர் குழாய் இணைப்புகளின் எண்ணிக்கை JJM போர்ட்டலில் இருந்தும் 2024-25 ஆம் ஆண்டில் VPகளால் மேற்கொள்ளப்பட்ட குடிநீர் கட்டண மதிப்பீடு தொடர்பான தரவு VP வரி போர்ட்டலில் இருந்து பெறப்பட்டன. விவரங்கள் **அட்டவணை 4.3ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.3: மதிப்பீடு செய்யப்படாத இணைப்புகளின் விவரங்கள்**

| மாவட்டம் | JJM டேஷ்போர்டின் படியான FHTC வழங்கல் | மதிப்பிடப்பட்ட குடிநீர் கட்டணங்கள் |
|---|---|---|
| கோயம்புத்தூர் | 3,72,578 | 3,07,075 |
| இராமநாதபுரம் | 1,11,024 | 21,313 |
| சேலம் | 5,65,111 | 2,64,994 |
| தேனி | 1,85,013 | 76,296 |
| விழுப்புரம் | 3,87,786 | 1,39,598 |

* நாகப்பட்டினம் மாவட்டத்திற்கான விவரங்கள் வழங்கப்படவில்லை

(ஆதாரம்: தணிக்கையால் தொகுக்கப்பட்ட தரவு )

ஐந்து மாவட்டங்களில் JJM டேஷ்போர்டு தரவின் படி வழங்கப்பட்ட FHTCகளின் எண்ணிக்கை, குடிநீர் கட்டணங்களுக்கான மதிப்பீடுகளின் எண்ணிக்கையை விட அதிகமாக இருந்ததை **அட்டவணை 4.3** வெளிப்படுத்தியது. இது FHTCகளைக் கொண்ட கணிசமான எண்ணிக்கையிலான வீடுகளில் குடிநீர் இணைப்புக் கட்டணங்களுக்கான மதிப்பீடு செய்யப்படவில்லை என்பதைக் குறிப்பதாக இருந்தது. இதன் விளைவாக வசூலிக்கப்பட்ட வருவாய் கணிசமான அளவில் குறைவுபட்டிருந்தது.

குடிநீர் இணைப்புக்கான கட்டணங்கள் மதிப்பீடு செய்யப்படாதது மற்றும் கட்டணங்களின் குறைவான வசூல், செயல்படுத்தும் முகமைக்கு வருவாய் இழப்பை ஏற்படுத்தியதோடு, இயக்கத்தின் செயல்பாடு மற்றும் பராமரிப்பில் கூடுதல் சுமையை உண்டாக்கியது.

அனைத்து வீடுகளிலும் குடிநீர் இணைப்புகள் மதிப்பிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அரசு பதிலளித்தது (ஏப்ரல் 2025). உள்ளூர் நீர் விநியோகத்திற்கான கட்டணங்கள் வசூலிக்கப்படுவதை உறுதி செய்ய பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பதை பதில் சுட்டிக்காட்டுகிறது.

[2] RD&PR துறையின் 09 டிசம்பர் 1998 தேதியிடப்பட்ட G.O.No.260ன் படி

**பரிந்துரை 9: கிராம ஊராட்சிகளின் வருவாய் ஆதாரத்தை அதிகரிக்கும் வகையில், அனைத்து பயனாளிகளிடமிருந்தும் குடிநீர் கட்டணங்கள் மதிப்பிடப்பட்டு வசூலிக்கப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.**

## 4.4 பிற சிக்கல்கள்

தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில், நிதி மேலாண்மையில் மாவட்டங்கள் தொடர்பான சிக்கல்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

### 4.4.1 JJM நிதியை DRDA நிர்வாகக் கணக்கிற்கு திருப்பி விடுதல்

தேனி, DRDAவின் ரொக்கப் புத்தகங்களின் மீதான மதிப்பாய்வு, JJMன் கீழ் பணிகளுக்காக ஒப்பந்ததாரர்களிடமிருந்து பெறப்பட்ட முன் வைப்புத்தொகை (Earnest Money Deposit - EMD)/பாதுகாப்பு வைப்புத்தொகை தொடர்பான ₹3.23 கோடி, 2019-20 மற்றும் 2023-24 க்கு இடையே DRDA நிர்வாகக் கணக்கிற்கு திருப்பி விடப்பட்டதை வெளிப்படுத்தியது. பணி முடிவடைந்ததும் ஒப்பந்ததாரர்களுக்குத் திருப்பித் தரப்பட வேண்டிய EMD தொகை, அவர்களுக்கு வழங்கப்படாமல் வழக்கமான நிர்வாகச் செலவுகளுக்குப் பயன்படுத்தப்பட்டிருந்ததை தணிக்கை கவனித்தது.

இது சுட்டிக்காட்டப்பட்டபோது, 2016-17 முதல் பணியாளர்களின் சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகளை ஈடுகட்ட அரசிடமிருந்து எந்த நிதியும் பெறப்படவில்லை என்றும் இதன் காரணமாக மேற்கூறப்பட்ட தொகை DRDAவின் நிர்வாகக் கணக்கிற்கு மாற்றப்பட்டதாகவும் தேனி மாவட்ட DRDA உதவி திட்ட அலுவலர் பதிலளித்தார் (செப்டம்பர் 2024). 2020-21 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளின் JJM பணிகளுக்கான EMD மற்றும் கூடுதல் பாதுகாப்பு வைப்புத்தொகை ₹1.25 கோடி என்றும், அதில் ₹30.55 இலட்சம் இதுவரை ஒப்பந்ததாரருக்கு விடுவிக்கப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள தொகை ஒப்பந்ததாரரின் கோரிக்கையின் பேரில் திருப்பித் தரப்படும் என்றும் அரசு பதிலளித்தது (ஜூலை 2025). இருப்பினும், சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகளுக்காக நிதி திருப்பப்பட்டிருந்ததைக் குறித்து பதிலில் ஏதும் குறிப்பிடப்படவில்லை.

### 4.4.2 சமுதாய பங்களிப்பு வசூலில் சீரற்ற தன்மை - தேனி

தேனி மாவட்டம் உத்தமபாளையம் மற்றும் போடிநாயக்கனூர் வட்டாரங்களில் குடிநீர் குழாய் இணைப்புக்கான வைப்புத்தொகை வசூல்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டது. இது, JJMன் கீழ் FHTCகளை வழங்குவதற்காக, குடியிருப்புக்குள்ளும் குடியிருப்புகளுக்கு இடையேயும், 305 வீடுகளிலிருந்து வசூலிக்கப்பட்ட சமூக பங்களிப்பு, ₹650 முதல் ₹3,000 வரை வேறுபட்டு இருந்ததை வெளிப்படுத்தியது. இருப்பினும், ஒரே மாவட்டத்திற்குள் காணப்பட்ட இவ்வேறுபாட்டிற்கு எந்த காரணமும் வழங்கப்படவில்லை.

சமூக பங்களிப்பு வசூலானது மூலதனச் செலவு மற்றும் குடியிருப்புகள்/VPகளில் உள்ள வீடுகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டிருந்ததால், ஒரே மாவட்டத்திற்குள் வசூலிக்கப்பட்ட சமூக பங்களிப்பில் வேறுபாடு காணப்படுவதாக அரசு

பதிலளித்தது (ஜூலை 2025) இவ்வேறுபாடு ஒரே குடியிருப்புக்குள்ளும் காணப்பட்டதால் பதில் ஏற்புடையதாக இல்லை.

### 4.4.3 பிடித்தம் செய்யப்பட்ட தொழிலாளர் நல நிதி அதற்கான கணக்கில் செலுத்தப்படாதது - நாகப்பட்டினம்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் JJM தொடர்பான பணிகளுக்காக ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்ட பண செலுத்தங்களை மதிப்பாய்வு செய்ததில், விலைப்பட்டியல் தொகையில் இருந்து ஒரு விழுக்காடு தொழிலாளர் நல நிதியாக (Labour Welfare Fund - LWF) பிடித்தம் செய்யப்பட்டிருந்தும், அந்நிதி **அட்டவணை 4.4ல்** வழங்கப்பட்டுள்ளபடி நாகப்பட்டினம் மாவட்டத்தின் மூன்று வட்டாரங்களால் LWF கணக்கில் செலுத்தப்படவில்லை என்பது தெரியவந்தது.

**அட்டவணை 4.4: தொழிலாளர் வாரியக் கணக்குகளில் LWF செலுத்தப்படாமல் இருத்தல்**

| வட்டாரம் | தொகுதிகளின் கணக்குகளில் கழிக்கப்பட்டு வைக்கப்படும் LWF தொகை (₹ல்) |
|---|---|
| கீழையூர் | 7,13,384 |
| நாகப்பட்டினம் | 4,83,379 |
| திருமருகல் | 3,64,087 |
| **மொத்தம்** | **15,60,850** |

(ஆதாரம்: DRDA வழங்கிய தரவு)

தொழிலாளர் நல நிதித் தொகையை LWF கணக்கில் செலுத்தத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அரசு பதிலளித்தது (ஏப்ரல் 2025). மேற்கூறப்பட்ட குறைபாடுகள் JJMன் கீழ் நிதி முன்னேற்றத்தில் காணப்பட்ட திறனற்ற கண்காணிப்பைக் குறிக்கின்றன.

# அத்தியாயம் V

# குடிநீர் தரம் மற்றும் கண்காணிப்பு

# அத்தியாயம் V

## குடிநீர் தரம் மற்றும் கண்காணிப்பு

**நீர் தர சோதனை ஆய்வகங்கள், சோதிக்கப்பட்ட மாதிரிகளில் நேர்மறை முடிவுகளைக் கொண்டவற்றை உயர் மட்ட ஆய்வகங்களுக்கு பரிந்துரைப்பதற்கான எந்த வழிமுறையும் இல்லாமல் செயல்பட்டு வந்தன. மேலும், தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் இருந்த நான்கு மாவட்ட ஆய்வகங்கள் NABL அங்கீகாரம் இல்லாமல் செயல்பட்டன. தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் பல்வேறு மட்டங்களில் இருந்த 18 ஆய்வகங்களிலும் (மாநில ஆய்வகம் உட்பட) உள்கட்டமைப்பு மற்றும் உபகரணங்கள் இல்லாதது கண்டறியப்பட்டது. பரிந்துரைக்கப்பட்ட 13 அளவுருக்களும் சோதிக்கப்படாததால் TWAD வாரிய பிரிவுகளால் நடத்தப்பட்ட நீர் தர சோதனை போதுமானதாக இல்லை. தெரிவு செய்யப்பட்ட எந்த மாவட்டத்திலும் கள சோதனைப் பெட்டிகளைப் பயன்படுத்தி நீர் தர சோதனைகள் மேற்கொள்ளப்படவில்லை.**

### 5.1 முன்னுரை

மத்திய அரசு வெளியிட்டுள்ள JJMன் செயல்பாட்டு வழிகாட்டுதல்கள், FHTCகள் மூலம் வழங்கப்படும் நீரின் தரத்தை உறுதி செய்வதற்காக நீர் தரம் மற்றும் கண்காணிப்பைப் (WQM&S) பரிந்துரைக்கிறது. இந்நடவடிக்கைகளில், குடிநீர் ஆதாரங்களில் இருந்து துறையால் எடுக்கப்பட்ட மாதிரிகள் ஆய்வகங்களில் பரிசோதிக்கப்படுதல், கள சோதனைப் பெட்டிகளைப் (Field Test Kits - FTKகள்) பயன்படுத்தி சமூகத்தால் தொடர் கண்காணிப்பு மேற்கொள்ளப்படுதல், சுகாதார ஆய்வு போன்றவை அடங்கும். மாநிலத்தின் சீரான குடிநீர் தர கண்காணிப்பு நெறிமுறையின்படி[1] (Uniform Drinking Water Quality Monitoring Protocol - UDWQMP) JJM நிதியில் இருந்து இரண்டு விழுக்காடு வரை WQM&Sக்கு ஒதுக்கப்பட வேண்டும். WQMS கட்டமைப்பு **விளக்கப்படம் 5.1ல்** விவரிக்கப்பட்டுள்ளது.

[1] மத்திய அரசின் குடிநீர் மற்றும் சுகாதார அமைச்சகத்தால் பிப்ரவரி 2013ல் வெளியிடப்பட்டது.

**விளக்கப்படம் 5.1: நீர் தரம் மற்றும் கண்காணிப்பு கட்டமைப்பு**




மாவட்ட குடிநீர் மற்றும் சுகாதார இயக்கம் (District Water and Sanitation Mission - DWSM) குடிநீரி தரத்தை கண்காணிக்கும் பொறுப்பை கொண்டுள்ளது என்று தமிழ்நாடு அரசு செயல்பாட்டு வழிகாட்டுதல்கள் கூறுகின்றன. JJMன் கீழ் WQMSக்கு ஒதுக்கப்பட்ட நிதி, கள அளவில் குடியிருப்புகளில் நீரின் தரம் மற்றும் காணிப்புக்காகவும் மற்றும் மாநில, மாவட்ட மற்றும் துணை மாவட்ட அளவில் குடிநீர் தர சோதனை ஆய்வகங்களை நிறுவுதல் மற்றும் மேம்படுத்துதலுக்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. 2020-24 ஆண்டுகளில் WQMSக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் பயன்பாடு **விளக்கப்படம் 5.2ல்** விவரிக்கப்பட்டுள்ளது.




அட்டவணை 5.2: WQMSக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் பயன்பாடு

(ஆதாரம்: TWAD வாரியத்தால் வழங்கப்பட்ட விவரங்கள்)

## 5.2 குடிநீர் தர பரிசோதனைக்கு போதுமான உள்கட்டமைப்பு மற்றும் உபகரணங்கள் இல்லாதது

மத்திய பொது சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் அமைப்பின் (Central Public Health and Environmental Engineering Organisation - CPHEEO) கையேடு, 2005, விநியோகிக்கப்படும் குடிநீர் அதன் தரநிலைகளுக்கு உட்படுத்தப்படுவதை உறுதி செய்வதில் நீர் வழங்கலை செயல்படுத்தும் நிறுவனம் முதன்மை பொறுப்பேற்கும் என்று கூறுகிறது. இதற்கு குடிநீர் மாதிரிகளின் தோற்றப் பண்புகள், இரசாயனம் மற்றும் நுண்கிருமிகளுக்கான சோதனைகள் நடத்தப்படுவது அவசியமாகிறது. தமிழ்நாட்டில், RD&PR துறை மற்றும் TWAD வாரியம் குடிநீ தரத்தை கண்காணிக்கும் பொறுப்பேற்கிறது. தெரிவு செய்யப்பட்ட ஆறு மாவட்டங்களின் மாவட்ட, துணை மாவட்ட மற்றும் வட்டார அளவிலான ஆய்வகங்களின் விவரங்கள் **அட்டவணை 5.1ல்** வழங்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 5.1: தெரிவு செய்யப்பட்ட ஆறு மாவட்டங்களில் நிறுவப்பட்ட ஆய்வகங்களின் விவரங்கள்**

| மாவட்டம் | மாவட்டத்தின் மொத்த வட்டாரங்கள் | மாவட்ட ஆய்வகம் | துணை மாவட்ட ஆய்வகங்கள் | வட்டார ஆய்வகங்கள் |
|---|---|---|---|---|
| கோயம்புத்தூர் | 12 | 1 | 1 | 1 |
| நாகப்பட்டினம் | 6 | 1 | 0 | 0 |
| இராமநாதபுரம் | 11 | 1 | 1 | 1 |
| சேலம் | 20 | 1 | 3 | 1 |
| தேனி | 8 | 1 | 0 | 1 |
| விழுப்புரம் | 13 | 1 | 1 | 1 |
| **மொத்தம்** | **70** | **6** | **6** | **5** |

(ஆதாரம்: TWAD வாரியப் பிரிவுகளால் வழங்கப்பட்ட விவரங்கள்)

### 5.2.1 உயர் ஆய்வகங்களுக்கு அறிவிக்கு வழிமுறை இல்லாதது

JJM செயல்பாட்டு வழிகாட்டுதல்களின்படி, வெவ்வேறு நிலைகளில் நீர் ஆதாரங்கள்/மாதிரிகளை பரிசோதிப்பதற்கான வழிகாட்டுதல்கள் **விளக்கப்படம் 5.3ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**விளக்கப்படம் 5.3: குடிநீர் மாதிரிகளை பரிசோதிப்பதற்கான வழிகாட்டுதல்கள்**

**துணைக் கோட்டம்/ வட்டார ஆய்வகம்**

- அதன் அதிகார வரம்பிற்குட்பட்ட 100 விழுக்காடு குடிநீர் ஆதாரங்களை சோதனைக்கு உட்படுத்துதல்.
- இரசாயன அளவுருக்கள் (வருடத்திற்கு ஒரு முறை) மற்றும் நுண்கிருமிகளுக்கான (bacteriological) அளவுருக்கள் (வருடத்திற்கு இரண்டு முறை) பரிசோதிக்கப்படுதல்.
- நேர்மறை முடிவுகள் கொண்ட மாதிரிகள் மாவட்ட ஆய்வகத்திற்கு அனுப்பப்படும்.

**மாவட்ட ஆய்வகம்**

- ஒரு மாதத்திற்கு 250 குடிநீர் ஆதாரங்கள்/மாதிரிகள் சோதிக்கப்படுதல்.
- சீரற்ற முறையில் புவியியல் பரவலில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து நீர் ஆதாரங்களுடன் துணைக்கோட்டம்/வட்டார ஆய்வகங்களால் குறிப்பிடப்பட்ட நேர்மறை முடிவுகள் கொண்ட மாதிரிகளும் சோதிக்கப்படுகின்றன.
- சோதிக்கப்பட்ட மாதிரிகளில் நேர்மறை முடிவுகளை உடையவை மாநில ஆய்வகத்திற்கு அனுப்பப்படும்.

**மாநில ஆய்வகம்**

- சீரற்ற முறையில் சீரான புவியியல் பரவலுடனும் அனைத்து மாவட்ட அளவிலான ஆய்வகங்களிலும் மொத்த குடிநீர் மாதிரிகளில் குறைந்தது ஐந்து விழுக்காடு பரிசோதிக்கப்படுதல்.
- மாவட்டம்/துணைக்கோட்டம்/வட்டாரத்தால் அனுப்பப்படும் நேர்மறை முடிவுகளைக் கொண்ட மாதிரிகள் சோதிக்கப்படுகின்றன.

**விளக்கப்படம் 5.3ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி, வட்டார/துணைக்கோட்ட ஆய்வகங்களால் சோதிக்கப்பட்டு நேர்மறை முடிவுகள் கொண்ட மாதிரிகள் மாவட்ட ஆய்வகத்திற்கு அனுப்பப்பட வேண்டும். இந்த மாதிரிகள் உட்பட புவியியல் பரவலின் படி சீரற்ற முறையில் எடுக்கப்பட்ட அனைத்து நீர் ஆதாரங்களையும் மாவட்ட ஆய்வகம் பரிசோதிக்க வேண்டும். இருப்பினும், மாவட்ட ஆய்வகங்கள் அவற்றின் நோக்கத்திற்கு மாறாக, சில குறிப்பிட்ட வட்டாரங்களையே வரம்பாக கொண்டு (இது வழிகாட்டுதல்களின் கருத்துக்கு முரணானது) வட்டார ஆய்வகங்களாக இயங்கி வந்ததை தணிக்கை கவனித்தது.

எடுத்துக்காட்டாக, இராமநாதபுரம் மாவட்டத்தில், மாவட்டம், துணை மாவட்டம் மற்றும் வட்டார அளவில் தலா ஒவ்வொரு ஆய்வகம் என மூன்று ஆய்வகங்கள் செயல்பட்டன. இருப்பினும், மாவட்ட ஆய்வகத்தின் அதிகார வரம்பில் நான்கு வட்டாரங்கள் மட்டுமே இருந்தன **(அட்டவணை 5.2)**.

**அட்டவணை 5.2: இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆய்வகத்திற்கு ஒதுக்கப்பட்ட வட்டாரங்கள் குறித்த விவரங்கள்**

| ஆய்வகம் | அதிகார வரம்பு |
|---|---|
| மாவட்ட ஆய்வகம், இராமநாதபுரம் | போகலூர், இராமநாதபுரம், ஆர்.எஸ்.மங்கலம், திருவாடானை |
| துணை மாவட்ட ஆய்வகம், பரமக்குடி | கடலாடி, கமுதி, முதுகுளத்தூர், பரமக்குடி |
| வட்டார அளவிலான ஆய்வகம், உச்சிப்புளி, மண்டபம் | மண்டபம், நயினார்கோவில், திருப்புல்லாணி |

(ஆதாரம்: RWS பிரிவு, TWAD, இராமநாதபுரம்)

மாவட்டம், துணை மாவட்டம் மற்றும் வட்டார அளவிலான ஆய்வகங்களில் ஒரே எண்ணிக்கையிலான பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததால் அவற்றிற்கான அதிகார வரம்பு சமவீதமாக நிர்ணயிக்கப்பட்டது என்று அரசு பதிலளித்தது (ஏப்ரல் 2025). மாவட்ட ஆய்வகம் ஒரு வட்டார ஆய்வகமாக செயல்பட்டு வந்ததால், அது செயல்படுத்த வேண்டிய சில மேலான செயல்பாடுகளில் குறைவு ஏற்பட்டது. இதனால் பதில் ஏற்புடையதாக இல்லை.

### 5.2.2 அங்கீகாரம் இன்றி இயங்கிய ஆய்வகங்கள்

மத்திய அரசு வெளியிட்டுள்ள JJM செயல்பாட்டு வழிகாட்டுதல்கள், குடிநீருக்கான அடிப்படை அளவுருக்கள், உள்ளூர் கள நிலவரங்களின் அடிப்படையில் கூடுதல் அளவுருக்கள் பரிசோதிக்கப்படும் பொருட்டு, குடிநீர் தர சோதனை ஆய்வகங்கள், IS/ISO/IEC 17025ன் கீழ் அங்கீகாரம் பெறவேண்டும் என்று கூறுகிறது. மாவட்ட அளவிலான அனைத்து குடிநீர் பரிசோதனை ஆய்வகங்களும் NABL அங்கீகாரம் பெறுவதற்கு TWAD வாரியம் தேவையான நடவடிக்கைகளை படிப்படியாக மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ்நாடு அரசு செயல்பாட்டு வழிகாட்டுதல்கள் வலியுறுத்துகின்றன. தெரிவு செய்யப்பட்ட ஆறு மாவட்டங்களில் இயங்கும் ஆய்வகங்களின் NABL அங்கீகாரம் குறித்த நிலவரம் **அட்டவணை 5.3ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.3: ஆய்வகங்களால் பெறப்பட்ட அங்கீகாரம் குறித்த விவரங்கள்**

| மாவட்டம் | NABL அங்கீகாரம் செல்லுபடியாகும் காலம் | NABL அங்கீகாரத்தைப் புதுப்பிக்காமல் செயல்பட்ட ஆய்வகம் (நவம்பர் 2024) - காலம் |
|---|---|---|
| கோயம்புத்தூர் | 30/01/2024 | 10 மாதங்கள் |
| நாகப்பட்டினம் | 21/04/2024 | 7 மாதங்கள் |
| இராமநாதபுரம் | 23/02/2024 | 9 மாதங்கள் |
| சேலம் | 31/07/2026 | பொருந்தாது |
| தேனி | 21/04/2024 | 7 மாதங்கள் |
| விழுப்புரம் | 11/09/2026 | பொருந்தாது |

(ஆதாரம்: TWAD பிரிவுகளால் வழங்கப்பட்ட பதிவுகள்)

நவம்பர் 2024 நிலவரப்படி, தெரிவு செய்யப்பட்ட ஆறு மாவட்டங்களைச் சார்ந்த ஆறு குடிநீர் பரிசோதனை ஆய்வகங்களுள் நான்கு, ஏழு முதல் பத்து மாதங்கள் வரை NABL அங்கீகாரம் இல்லாமல் செயல்பட்டு வந்தன.

அங்கீகாரம் புதுப்பிக்கப்படத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசு பதிலளித்தது (ஏப்ரல் 2025). இருப்பினும், அங்கீகாரம் புதுப்பிக்கப்படாமலேயே ஆய்வகங்கள் தொடர்ந்து செயல்பட்டு வந்தது மத்திய மற்றும் மாநில அரசுகளின் வழிகாட்டுதல்களுக்கு முரணானது.

**பரிந்துரை 10: குடிநீர் பரிசோதனை ஆய்வகங்களின் அங்கீகாரம் விரைவில் புதுப்பிக்கப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.**

### 5.2.3 ஆய்வகங்களில் உபகரணங்கள்/உள்கட்டமைப்பில் பற்றாக்குறை

CPHEEO கையேட்டின்படி, குடிநீர் தர ஆய்வகமானது குடிநீர் தரக் கண்காணிப்பிற்கான முக்கிய அம்சமாகும். குடிநீர் வழங்கல் சேவைகளின் நீர் தரம் தொடர்பான செயல்திறனை மதிப்பிடுவதற்கு, பகுப்பாய்வு ஆய்வகம் பொருத்தமான இடத்தில் அமைந்து, தகுதிவாய்ந்த பணியாளர்கள் மற்றும் அனைத்து உபகரணங்களை கொண்டிருப்பது அவசியம் ஆகும்.

#### *(i) உள்கட்டமைப்பு*

மாநில ஆய்வகம் மற்றும் தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் நிறுவப்பட்ட 17 ஆய்வகங்களில் இருந்த உள்கட்டமைப்பு மற்றும் பற்றாக்குறை பற்றிய விவரங்கள் **இணைப்பு 5.1ல்** வழங்கப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட ஆறு மாவட்டங்களிலும் நிறுவப்பட்டிருந்த 17 ஆய்வகங்களில், UDWQMPயால் பரிந்துரைக்கப்பட்ட உள்கட்டமைப்பு மற்றும் பிற உபகரணங்கள்/கருவிகள் பல்வேறு நிலைகளில் இல்லாதிருந்தது.

#### *(ii) உபகரணங்கள்/கருவிகள்*

மாநில ஆய்வகத்திலும், தெரிவு செய்யப்பட்ட ஆறு மாவட்டங்களில் நிறுவப்பட்டிருந்த 17 குடிநீர் பரிசோதனை ஆய்வகங்களிலும், பயனுள்ள குடிநீர் தர சோதனைக்குத் தேவையான உபகரணங்கள்/கருவிகளில்

குறிப்பிடத்தக்க குறைபாடுகள் காணப்பட்டன. இது **இணைப்பு 5.2ல்** விவரிக்கப்பட்டுள்ளது.

விரிவான நீர் தரக் கண்காணிப்புக்கான முறையான உள்கட்டமைப்புடன் அனைத்து உபகரண வசதிகளும் இருப்பது கட்டாயமாக உறுதி செய்யப்பட வேண்டிய நிலையில், UDWQMPயின் பரிந்துரை மற்றும் செயல்பாட்டு வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, நுண்கிருமிகள் மற்றும் இரசாயன பொருட்களுக்கான சோதனைகள் திறம்பட மேற்கொள்ளப்பட, மாவட்ட மற்றும் துணை மாவட்ட அளவிலான ஆய்வகங்களில் அத்தியாவசிய சோதனை உபகரணங்கள், கருவிகள் மற்றும் பிற உள்கட்டமைப்புகள் இல்லாதது தணிக்கையில் கண்டறியப்பட்டது. இரசாயன மாசுகள் (ஆர்சனிக், ஃப்ளோரைடு, நைட்ரேட் போன்றவை) மற்றும் நுண்கிருமி குறிகாட்டிகள் (E.கோலி, கோலிஃபார்ம் பாக்டீரியா போன்றவை) போன்ற முக்கிய நீர் தர அளவுருக்களை துல்லியமாகக் கண்டறிந்து பகுப்பாய்வு செய்வதற்குத் தேவையான அவசர சோதனைக் கருவிகள், வினையூக்கிகள் (reagents) மற்றும் தொடர்புடைய பிற வசதிகள் இல்லாமை இக்குறைபாடுகளில் அடங்கும்.

அத்தியாவசிய உபகரணங்கள், கருவிகள் மற்றும் பிற துணை உள்கட்டமைப்புகள் குறித்த விவரங்கள் சேகரிக்கப்பட்டு, அதற்கான டெண்டர் பணிகள் செயல்பாட்டில் இருப்பதாக அரசு பதிலளித்தது (ஏப்ரல் 2025). உபகரணங்கள் கொள்முதல் செய்யப்படுவதற்கான நிதி இருந்த போதிலும், ஆய்வகங்கள் உள்கட்டமைப்பு மற்றும் உபகரணங்களில் பற்றாக்குறையுடன் செயல்பட்டதால் பதில் ஏற்புடையதாக இல்லை.

## 5.3 குடிநீர் ஆதாரங்கள் மற்றும் அளவுருக்களை பரிசோதனை செய்தல்

தெரிவு செய்யப்பட்ட ஆறு மாவட்டங்களில், 2019-24 ஆண்டுகளில், TWAD வாரிய ஆய்வகங்களால், குடிநீர் ஆதாரங்களின் மீது மேற்கொள்ளப்பட்ட சோதனை குறித்த விவரங்கள் மற்றும் அவற்றின் முடிவுகள் **அட்டவணை 5.4ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 5.4: சோதிக்கப்பட்ட நீர் ஆதாரங்களின் எண்ணிக்கை குறித்த விவரங்கள்**

| மாவட்டம் | நீர் ஆதாரங்களின் எண்ணிக்கை | மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட வரம்பை விட கூடுதல் மாசுகளைக் கொண்ட நீர் ஆதாரங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | | | நுண்ணுயிரியல் | இரசாயன ரீதியாக |
| கோயம்புத்தூர் | 6,243 | 15,702 | 0 | 0 |
| நாகப்பட்டினம் | 1,561 | 21,847 | 2 | 36 |
| இராமநாதபுரம் | 5,013 | 65,001 | 5 | 843 |
| சேலம் | 32,916 | 99,855 | 64 | 275 |
| தேனி | 5,920 | 18,500 | 0 | 0 |
| விழுப்புரம் | 11,207 | 10,280 | 0 | 0 |
| **மொத்தம்** | **62,860** | **2,31,185** | **71** | **1,154** |

(ஆதாரம்: TWAD வாரியப் பிரிவுகளால் வழங்கப்பட்ட விவரங்கள்)

- வட்டாரம் மற்றும் VP அளவிலான அதிகாரிகள் மாசுபாடு தொடர்பாக எந்தப் பதிவையும் பராமரிக்கவில்லை என்பதால் அவர்களும் இது குறித்து அறிந்திருக்கவில்லை என தணிக்கை கண்டது.
- மேலும், தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் 43 குடிநீர் மாதிரிகளை தணிக்கை சோதனை செய்தது. அவற்றுள் கோயம்புத்தூர் மாவட்டத்தில் எடுக்கப்பட்ட ஐந்து மாதிரிகள் மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் எடுக்கப்பட்ட இரண்டு மாதிரிகளின் சோதனை முடிவுகளும் அவை பயன்படுத்தப்பட தகுதியற்றவை என வெளிப்படுத்தியது.

இரசாயன மற்றும் நுண்ணுயிருக்கான அளவுருக்களால் மாசுபட்ட நீரால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு நதி நீரை ஆதாரமாகக் கொண்டு CWSS திட்டம் வழங்கப்பட்டதாக அரசு பதிலளித்தது (ஏப்ரல் 2025). இவ்வாறு, மாசுபாடுகள் இருக்கும் நிலையில், அவை நிவர்த்தி செய்யப்பட்டு குடிநீரின் ஆதாரம் சீரமைக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்பதை பதில் குறிக்கிறது. மேலும், கட்டாயமாக மேற்கொள்ளப்பட வேண்டிய சோதனை குறித்து பதிலில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

- மத்திய அரசால் வெளியிடப்பட்ட JJM செயல்பாட்டு வழிகாட்டுதல்கள், குடிநீரில் சோதிக்கப்பட வேண்டிய 13 அடிப்படை தர அளவுருக்களின்[2] பட்டியலையும், அவை ஒவ்வொன்றின் ஏற்பு வரம்பு (acceptable limit) மற்றும் குடிநீருக்கான மாற்று ஆதாரம் இல்லாத நிலையில் அளவுருக்களின் அனுமதிக்கப்படக்கூடிய வரம்பு (permissible limit) ஆகியவற்றையும் பரிந்துரைக்கின்றது. பெறப்பட்ட சோதனை முடிவுகளின் மீதான ஆய்வு, சுகாதாரக் கேடு ஏற்படுத்தும் 13 அடிப்படை அளவுருக்களில் ஒன்றான ஆர்சனிக் என்னும் இரசாயன மாசுக்கான பரிசோதனை எந்த மாதிரிகளிலும் மேற்கொள்ளப்படவில்லை என்பதைக் குறிப்பதாக இருந்தது.
- நுண்ணுயிர் மாசுபாட்டை அறிவதற்கான தரநிலை அளவுருவான மொத்த கோலிஃபார்ம் மற்றும் E.கோலி அல்லது தெர்மோடாலரண்ட் கோலிஃபார்ம் பாக்டீரியாக்களுக்கான சோதனை மேற்கொள்ளப்படாமல் ஃபீகல் கோலிஃபார்ம் சோதனை மட்டுமே மேற்கொள்ளப்பட்டது.
- குடிநீர் தரத்திற்கென பரிந்துரைக்கப்பட்ட 13 அளவுருக்கள் மீதும் சோதனை மேற்கொள்ளப்படாததால், சோதனை முடிவுகளின் துல்லியம் மற்றும் நம்பகத்தன்மை பாதிக்கப்பட்டது. அதன் விளைவாக சுகாதாரத்தில் ஏற்படக்கூடிய அபாயங்களை அடையாளம் காண இயலவில்லை. இவ்வாறு, TWAD வாரியப் பிரிவுகளால் நடத்தப்பட்ட குடிநீர் தர சோதனை முழுமையானதாக இல்லை.

---

[2] pH மதிப்பு, கரைந்த மொத்த திடப்பொருள்கள், கலங்கல் நிலை, குளோரைடு, மொத்த காரத்தன்மை, மொத்த கடினத்தன்மை, சல்பேட், இரும்பு, மொத்த ஆர்சனிக், ஃப்ளூரைடு, நைட்ரேட், மொத்த கோலிஃபார்ம் பாக்டீரியா, ஈ.கோலி அல்லது தெர்மோடாலரண்ட் கோலிஃபார்ம் பாக்டீரியா.

ஆர்சனிக் மாசுபாடு புவி சார்ந்தது என்பதால் தமிழ்நாட்டில் குடிநீரில் இச்சிக்கல் இல்லை என அரசு பதிலளித்தது (ஏப்ரல் 2025). தொழிற்துறை/தொழிற்சாலை மூலம் ஏற்படும் மாசுபாட்டினைக் கண்டறியும் பொருட்டே இந்த அளவுரு கட்டாயமாக்கப்பட்டிருந்தும், அதனைக் குறித்து அரசு பதிலில் குறிப்பிடாமல் மாசுபாட்டிற்கான புவிசார் இயற்கை ஆதாரங்களை (geogenic) மட்டுமே குறிப்பிட்டிருந்ததால் பதில் ஏற்புடையதாக இல்லை.

**பரிந்துரை 11: விரிவான குடிநீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு உரிய நேரத்தில் தீர்வு நடவடிக்கை எடுக்கப்பட அனைத்து உபகரணங்களும் கொள்முதல் செய்யப்பட்டு விரைவில் ஆய்வகங்கள் முழுமையாக செயல்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.**

## 5.4 கள சோதனைப் பெட்டிகள் பயன்படுத்தப்படாமை

கள சோதனைப் பெட்டிகள் (Field Testing Kits - FTKகள்) பயன்படுத்தி, குடிநீரின் தர சோதனை மேற்கொள்ளப்படுவதை VWSCகள் உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய அரசின் செயல்பாட்டு வழிகாட்டுதல்கள் அறிவுறுத்துகின்றது. பரிசோதனைகள் சுய உதவிக்குழுக்களின் பயிற்சி பெற்ற உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்டு, முடிவுகள் JJM-WQMIS வலைதளத்தில் புதுப்பிக்கப்பட வேண்டும். மேலும் சோதனை முடிவுகள் குடிநீர் தர பதிவேடுகளைப் பராமரிக்கும் கிராம ஊராட்சி செயலாளரிடம் அறிவிக்கப்பட வேண்டும் என்று GoTN செயல்பாட்டு வழிகாட்டுதல்கள் கூறுகிறது. ஒவ்வொரு 15 நாட்களுக்கும் சோதனைகள் நடத்தப்பட்டு பதிவு செய்யப்படுவதை உறுதி செய்ய, மாதந்தோறும் ஐந்து விழுக்காடு VPகளை BDO(VP) குறுக்கு சரிபார்ப்பு செய்ய வேண்டும். தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில், 2019-24 ஆண்டுகளில், விநியோகிக்கப்பட்ட FTKகளின் விவரங்கள் **அட்டவணை 5.5ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 5.5: மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட FTK கள் குறித்த விவரங்கள் (ஆண்டு வாரியாக)**

| மாவட்டம் | | கோயம்-புத்தூர் | நாகப்-பட்டினம் | இராம-நாதபுரம் | சேலம் | தேனி | விழுப்-புரம் |
|---|---|---|---|---|---|---|---|
| **வட்டாரங்களின் எண்ணிக்கை** | | **12** | **6** | **11** | **20** | **8** | **13** |
| **VPகளின் எண்ணிக்கை** | | **228** | **193** | **429** | **385** | **130** | **688** |
| வழங்கப்-பட்ட FTKகள் | 2019-20 | 0 | 0 | 0 | 0 | 130 | 688 |
| | 2020-21 | 228 | 0 | 0 | 385 | 130 | 688 |
| | 2021-22 | 228 | 193 | 429 | 0 | 130 | 688 |
| | 2022-23 | 228 | 0 | 429 | 385 | 130 | 688 |
| | 2023-24 | 228 | 0 | 0 | 385 | 130 | 688 |

(ஆதாரம்: TWAD வாரியப் பிரிவுகளால் வழங்கப்பட்ட விவரங்கள்)

தெரிவு செய்யப்பட்ட ஆறு மாவட்டங்களுள், 2020-24 ஆண்டுகளில் மூன்று மாவட்டங்கள் மட்டுமே FTKகளைப் பெற்றதாகக் கூறப்பட்டதால், FTKகள் சீரான முறையில் விநியோகிக்கப்படவில்லை எனத் தணிக்கை கண்டது. அதற்கான காரணங்கள் எதுவும் வழங்கப்படவில்லை.



விளக்கப்படம் 5.4: பயன்படுத்தப்படாத கள சோதனைப் பெட்டி

மேலும், FTKகள் விநியோகிக்கப்பட்டு, சுய உதவிக்குழுக்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டிருந்த போதிலும், தெரிவு செய்யப்பட்ட எந்த மாவட்டத்திலும் பயிற்சி பெற்ற உறுப்பினர்களால் குடிநீருக்கான சோதனைகள் மேற்கொள்ளப்படவில்லை எனத் தணிக்கை கண்டது. தெரிவு செய்யப்பட்ட வட்டாரங்கள் மற்றும் VPகளில் FTKகள் திறக்கப்படாத நிலையில் பயன்படுத்தப்படாமல் இருந்தது JPVன் போது உறுதிப்படுத்தப்பட்டது. **விளக்கப்படம் 5.4** இதனை வெளிப்படுத்துகிறது.

FTK பதிவேடுகளைப் பராமரித்தல், BDOஆல் காலமுறையில் சரிபார்க்கப்படுதல் மற்றும் உள்ளூர் கண்காணிப்பு போன்ற முக்கிய அம்சங்கள் செயல்படுத்தப்படவில்லை. இதன் விளைவாக, செயல்பாட்டு வழிகாட்டுதல்களில் வலியுறுத்தப்பட்டுள்ளபடி, சமூக அளவிலான குடிநீர் தர கண்காணிப்பு மேற்கொள்ளப்படவில்லை. மேலும், FTKகளின் பயன்பாட்டுக் காலம் (shelf life) ஒரு வருடம் மட்டுமே. பெரும்பாலான FTKகள் இக்காலகட்டத்திற்குள் பயன்படுத்தப்படாததால் அவற்றின் கொள்முதல் பயனற்ற ஒன்றானது.

நிதி இருப்பு பற்றாக்குறையால், 2019-21 ஆண்டுகளில் FTKகள் தயாரிக்கப்படவில்லை என்று அரசு பதிலளித்தது (ஏப்ரல் 2025). 2021-24 ஆண்டுகளில, FTKகள் பேக் செய்யப்பட்டு மாநில அளவிலான குடிநீர் சோதனை ஆய்வகத்திலிருந்து ஒப்பந்ததாரர்கள் மூலம் விநியோகிக்கப்பட்டன. ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு VPயிலும் ஐந்து சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு FTKகளைப் பயன்படுத்துவதற்கான பயிற்சி அளிக்கப்பட்டு, 24.08 இலட்சம் சோதனைகள் நடத்தப்பட்டன என்று மேலும் கூறப்பட்டது. WQ&MSன் கீழ் நிதிப்பற்றாக்குறை இல்லாத நிலையில், FTKகளின் சீரான கொள்முதல் மற்றும் விநியோகம் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்பதால் பதில் ஏற்புடையதாக இல்லை. மேலும், சோதனை சரிபார்க்கப்பட்ட மாவட்டங்களில் FTKகளைப் பயன்படுத்தி எவ்வித சோதனைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

**பரிந்துரை 12: பரிசோதனைகளை மேற்கொண்டு அவற்றை பதிவேற்றுவதன் மூலம் கள சோதனைப் பெட்டிகள் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்யும்படி, செயல்படுத்தும் முகமைகளை அரசு அறிவுறுத்த வேண்டும்.**

## 5.5 செயல்படாத எதிர்மறை சவ்வூடுபரவல் ஆலைகள்

ஊரகப் பகுதிகளில் பாதுகாப்பான குடிநீரை வழங்குவது VPகளின் கடமை என்று தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994ன் பிரிவு 110 அறிவுறுத்தியுள்ளது. குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தரமான குடிநீர் விநியோகிக்கப்பட முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும், இதற்காக சமூக நீர் சுத்திகரிப்பு நிலையம் நிறுவப்படலாம் என்றும் மத்திய அரசின் JJM செயல்பாட்டு வழிகாட்டுதல்கள் அறிவுறுத்தியுள்ளது. மேலும், அவை நிறுவப்பட்ட பிறகு, குடிநீர் சுத்திகரிப்பு அமைப்புகள் வலுவான செயல்பாடு மற்றும் பராமரிப்பைக் கொண்டிருப்பதையும், நிர்ணயிக்கப்பட்ட தரநிலைகளின்படி அவை தொடர்ந்து செயல்பட கழிவுகள் பாதுகாப்பாக அகற்றப்படுவதையும் உறுதிசெய்யத் தேவையான தொழில்நுட்பத்தை தெரிவு செய்யும் பணி மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் இச்சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

குடிக்கத் தகுதியற்ற, உப்புத்தன்மை அல்லது உவர் நீர் உள்ள இடங்களில் நீரி தரம் தொடர்பான சிக்கல்களை சரிசெய்ய ஊரகப் பகுதிகளில் எதிர்மறை சவ்வூடுபரவல் (Reverse Osmosis - RO) ஆலைகள் நிறுவப்பட தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கியிருந்தது. DRDAகள் வழங்கிய விவரங்களின்படி, 2019-21 ஆண்டுகளில், முறையே 130, 46 மற்றும் 121 RO நிலையங்கள் முறையே இராமநாதபுரம், விழுப்புரம் மற்றும் சேலத்தில் நிறுவப்பட்டிருந்தன. மேலும் இந்த RO நிலையங்களின் செயல்பாட்டு நிலை **விளக்கப்படம் 5.5ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 5.5: RO ஆலைகளின் செயல்பாட்டு நிலை**




**விளக்கப்படம் 5.5ல்** காணப்படுவது போல, சோதனை சரிபார்க்கப்பட்ட மாவட்டங்களில் செயல்படாத ROக்கள் 43.8 விழுக்காடு முதல் 65.4 விழுக்காடு வரை இருந்தன. செப்டம்பர் 2024ல் JPVன் போது, தணிக்கையால் சோதனை சரிபார்க்கப்பட்ட சில செயல்படாத RO ஆலைகள் **விளக்கப்படம் 5.6ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**விளக்கப்படம் 5.6: இராமநாதபுரத்தில் சோதனை சரிபார்க்கப்பட்ட வட்டாரங்களில் இருந்த செயல்படாத RO ஆலைகள்**



**கல்லூர் VP, திருவாடானை வட்டாரம்**



**புதுப்பட்டினம் VP, திருவாடானை வட்டாரம்**




**வெள்ளமரிச்சுக்கட்டி VP, திருப்புல்லாணி வட்டாரம்**

மேலும், RO ஆலை நிறுவப்பட்ட தேதி மற்றும் RO ஆலை செயல்படாத காலம் குறித்த விவரங்கள் பதிவு செய்யப்படவில்லை. இத்தகைய முக்கிய விவரங்கள் இல்லாதது, பதிவேடுகளின் பராமரிப்பு மற்றும் ஆவணப்படுத்தல் செயல்பாட்டில் இருந்த இடைவெளிகளைக் குறிக்கிறது. இது RO ஆலைகளின் பயனுள்ள கண்காணிப்பு மற்றும் பராமரிப்பை பாதிப்பது மட்டுமல்லாமல், திட்டத்தை செயல்படுத்துவதில் ஒட்டுமொத்த மேலாண்மை மற்றும் பொறுப்புக்கூறல் பற்றிய வினாவை எழுப்புகிறது. இதன் விளைவாக, கிராமப்புற மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கப்படும் நோக்கம் அடையப்படவில்லை.

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள குறைபாடுள்ள RO ஆலைகளை செயல்படுத்தும் பொருட்டு ஒருமுறை நடவடிக்கையாக VPகள் மற்றும் ஊராட்சி ஒன்றியத்தின் பொது நிதியைப் பயன்படுத்தி அவற்றை சரிசெய்ய உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டதாக அரசு பதிலளித்தது (ஏப்ரல் 2025). மற்ற மாவட்டங்களைப் பொறுத்தவரை குறிப்பிட்ட பதில் எதுவும் பெறப்படவில்லை. RO ஆலைகள் நிறுவப்படுதலின் நோக்கத்தை முழுமையாக அடைய இயலவில்லை என்பதையும், அவற்றின் மீதான கண்காணிப்பிலிருந்த குறைபாடுகளையும் பதில் சுட்டிக்காட்டியது.

**பரிந்துரை 13: தரமான குடிநீரை வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட எதிர்மறை சவ்வூடு பரவல் ஆலைகளின் பயன்பாட்டை உறுதி செய்யுமாறு துறையை அரசு அறிவுறுத்த வேண்டும்.**

# அத்தியாயம் VI

# செயல்பாட்டுக்குப் பிந்தைய மேலாண்மை, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

# அத்தியாயம் VI

# செயல்பாட்டுக்குப் பிந்தைய மேலாண்மை, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

**மூன்றாம் தரப்பு ஆய்வு நிறுவனங்களின் கண்காணிப்பு மற்றும் சரிபார்ப்பு செயல்முறைகளில் குறைபாடுகள் காணப்பட்டன. நிறைவேற்றப்பட்ட பணிகளின் சோதனை-சரிபார்க்கப்பட்ட செலவுச்சீட்டுக்களில், TPIA அறிக்கைகள் இல்லாமல் விடுவிக்கப்பட்ட பண செலுத்தங்கள், முழுமையற்ற ஆய்வு அறிக்கைகள், TPIA அறிக்கை மற்றும் பணி நிறைவு அறிக்கைக்கு இடையிலான முரண்பாடுகள் போன்ற சிக்கல்கள் காணப்பட்டன. பெறப்பட்டதிலிருந்து ஆறு மாதங்களுக்கு மேலாக IEC பொருட்கள் மாவட்டங்களில் விநியோகிக்கப்படாமல்/ பயன்படுத்தப்படாமல் இருந்தன. குடிநீர் குழாய் இணைப்புகளை புவிசார்-குறியிடுதல் மற்றும் FHTCகளை ஆதாருடன் இணைத்தல் ஆகியவை முழுமையடையவில்லை. தெரிவுசெய்யப்பட்ட ஆறு மாவட்டங்களில் ஒன்றிலும் சமூக தணிக்கை மேற்கொள்ளப்படவில்லை.**

## 6.1 கண்காணிப்பில் காணப்பட்ட சிக்கல்கள்

### 6.1.1 மூன்றாம் தரப்பு ஆய்வு நிறுவனங்களின் கண்காணிப்பில் இருந்த குறைபாடுகள்

மாநிலத்திற்கான JJM செயல்பாட்டு வழிகாட்டுதல்கள், செயல்படுத்தும் முகமைகளால் மேற்கொள்ளப்படும் பணியின் தரம், கட்டுமானத்திற்குப் பயன்படுத்தப்படும் பொருட்களின் தரம் மற்றும் ஒவ்வொரு திட்டத்திலும் நிறுவப்பட்ட இயந்திரங்களின் தரம் ஆகியவற்றைச் சரிபார்க்க மாநில குடிநீர் மற்றும் சுகாதார இயக்கம் (State Water and Sanitation Mission - SWSM), மூன்றாம் தரப்பு ஆய்வு நிறுவனங்களை (Third Party Inspections agencies - TPIAs) தெரிவு செய்ய வேண்டும் என்று குறிப்பிடுகிறது. மேலும், TPIA மற்றும் VP தலைவரின் சரிபார்ப்பு மற்றும் பரிந்துரைக்குப் பிறகு மட்டுமே ஒப்பந்ததாரருக்கு பணம் செலுத்தப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டது.

TPIA அறிக்கைகளில் இரண்டு பகுதிகள் உள்ளன. செயல்படுத்தும் துறைகளால் நிரப்பப்பட வேண்டிய மொத்த வீடுகளின் எண்ணிக்கை, 01 ஏப்ரல் 2020 நிலவரப்படி வழங்கப்பட்ட FHTCகளின் எண்ணிக்கை, நிதி பகிர்வு முறை போன்ற பணி குறித்த தகவல்களை TPIA அறிக்கையின் படிவம் A கொண்டுள்ளது. பொருத்தமற்ற பொருட்களின் விவரங்கள், பணிக்குரிய பொருள் (எ.கா., எஃகு, சிமெண்ட் மற்றும் கான்கிரீட் க்யூப் சோதனைகள்) மீதான சோதனை அறிக்கைகள், நீர் தக்கவைப்புத் தன்மை (water tightness test) மற்றும் குழாய்கூறுகளின் இணைப்பு போன்ற OHTகளுக்கான முக்கியமான அளவுருக்கள் மற்றும் வழங்கப்பட்ட FHTCகளின் எண்ணிக்கை ஆகியவை ஆய்வு அதிகாரியால் பயன்படுத்தப்படும் TPIA அறிக்கையின் படிவம் Bல் உள்ளன.

தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் செலவுச்சீட்டுகளின் சோதனை சரிபார்ப்பில் தணிக்கையால் கவனிக்கப்பட்ட சில குறைபாடுகள் **அட்டவணை 6.1ல்** விவரிக்கப்பட்டுள்ளன;

**அட்டவணை 6.1: தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் செலவுச்சீட்டுகளின் சோதனை சரிபார்ப்பில் TPIA சான்றிதழில் காணப்பட்ட முரண்பாடுகள்**

**(₹ கோடியில்)**

| மாவட்டம் | TPIA சான்றிதழ்கள் இல்லாமல் மேற்கொள்ளப்பட்ட பணிகள் | | முழுமையற்ற படிவம் B உடன் மேற்கொள்ளப்பட்ட பணிகள் | | FHTC எண்ணிக்கையில் முரண்பாடு இருந்த பணிகள் | | FHTC எண்ணிக்கை குறிப்பிடப்படாமல் மேற்கொள்ளப்பட்ட பணிகள் | | நீர்தக்க வைப்புத் தன்மை சரிபார்க்கப்படாமல் மேற்கொள்ளப்பட்ட OHT பணிகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எண்–ணிக்கை | தொகை | எண்–ணிக்கை | தொகை | எண்–ணிக்கை | தொகை | எண்–ணிக்கை | தொகை | எண்–ணிக்கை | தொகை |
| கோயம்புத்தூர் | 8 | 6.24 | 32 | 2.44 | 4 | 0.15 | 1 | 0.06 | 1 | 0.09 |
| இராமநாதபுரம் | 20 | 2.61 | 61 | 7.58 | 10 | 1.51 | NA | NA | NA | NA |
| சேலம் | 2 | 0.72 | NA[1] | NA | 31 | 4.30 | NA | NA | NA | NA |
| தேனி | 2 | 0.40 | NA | NA | 2 | 0.92 | 1 | 0.30 | NA | NA |
| விழுப்புரம் | 4 | 0.71 | NA | NA | NA | NA | 2 | 0.57 | 2 | 0.52 |

(ஆதாரம்: DRDAன் செலுத்தங்களுக்கான செலவுச்சீட்டுகளின் சோதனை சரிபார்ப்பு)

இராமநாதபுரத்தில், சில பணிகளில் TPIA அறிக்கை இல்லாமைக்கு ஆவணக் குறைபாடுகள் காரணம் என்ற DRDAன் பதிலை அரசு அங்கீகரித்தது (ஜூலை 2025). மேலும், TPIA அறிக்கையின் முறையற்ற கண்காணிப்புக்காகவும் மற்றும் பொருட்கள் சோதிக்கப்படாமைக்கும் அதற்குக் காரணமான அதிகாரி மற்றும் சம்பந்தப்பட்ட TPIA மீதும் நடவடிக்கை எடுப்பதில் திட்ட இயக்குநர் தொடர்ந்து ஈடுபடுவார் என்று அரசு கூறியது (ஜூலை 2025).

### *பிற சிக்கல்கள்*

- TPIAஆல் ஏதேனும் குறைபாடுகள் அடையாளம் காணப்பட்டால், பணம் செலுத்தப்படுவதற்கு முன்னரே அவை TPIA மற்றும் VP தலைவரால் திருத்தம் செய்யப்பட்டு மீண்டும் சரிபார்க்கப்பட வேண்டும் என்று GoTN செயல்பாட்டு வழிகாட்டுதல்கள் அறிவுறுத்தியுள்ளது. நாகப்பட்டினம் மாவட்டத்தின் திருமருகல் வட்டாரத்தில் மேற்கொள்ளப்பட்ட 29 பணிகளிலும் TPIAஆல் பரிந்துரைக்கப்பட்ட திருத்த நடவடிக்கைகள் (ஏப்ரல்/மே 2024) BDO (VP) ஆல் நிறைவேற்றப்பட்டதாகக் கூறப்பட்டிருந்தது கவனிக்கப்பட்டது. இருப்பினும், இவை நிறைவேற்றப்பட்டிருந்ததை உறுதிப்படுத்த இப்பணிகள் TPIAஆல் மீண்டும் சரிபார்க்கப்படாமலேயே ஒப்பந்ததாரர்களுக்கு பணம் செலுத்தப்பட்டது. மேற்கொள்ளப்பட்ட பணிகளை மீண்டும் சரிபார்க்க TPIAக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அரசு பதிலளித்தது (ஜூலை 2025).

[1] NA- கிடைக்கவில்லை.

- மூன்று வட்டாரங்களில்[2] மேற்கொள்ளப்பட்ட 11 பணிகளுக்கான நிறைவு அறிக்கைகள் (ஏப்ரல் 2024) மற்றும் அளவீட்டு புத்தகங்களில், FHTCகளுக்கு 25mm PVC குழாய்கள் பயன்படுத்தப்பட்டிருந்தாக குறிப்பிட்டிருந்தாலும், TPIA அறிக்கையில் 20mm குழாய்கள் மட்டுமே பயன்படுத்தியதாக குறிப்பிடப்பட்டிருந்ததை மதிப்பாய்வு வெளிப்படுத்தியது. விவரங்கள் **இணைப்பு 6.1ல்** விவரிக்கப்பட்டுள்ளன. இந்த PVC குழாய்களுக்கான விலைப்பட்டி, 20mm குழாயின் விலை விகிதத்திற்குப் (மீட்டருக்கு ₹25.30) பதிலாக 25mm குழாயின் விலை விகிதத்தை (மீட்டருக்கு ₹43.25) தவறாகப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டிருந்தது. இதனால், ஒப்பந்ததாரருக்கு ₹1.58 இலட்சம்[3] அதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. இத்தொகை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரரிடமிருந்து மீட்கப்படும் என்று அரசு பதிலளித்தது (ஏப்ரல் 2025). TPIA அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த முரண்பாடுகள் சரிசெய்யப்படாமல் பணம் செலுத்தப்பட்டிருந்ததை பதில் சுட்டிக்காட்டியது.

**பரிந்துரை 14: மூன்றாம் தரப்பு ஆய்வு நிறுவனங்களிடமிருந்து அனைத்து வகைகளிலும் முழுமைபெற்ற சரிபார்ப்பு அறிக்கைகள் கிடைத்த பின்னரே ஒப்பந்ததாரர்களுக்கு பணம் விடுவிக்கப்படுகிறது என்பதை உறுதி செய்யுமாறு துறையை அரசு அறிவுறுத்த வேண்டும்.**

### 6.1.2 விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான கட்டண செலுத்தத்தில் இருந்த முரண்பாடுகள்

தமிழ்நாடு அரசின் செயல்பாட்டு வழிகாட்டுதல்களின்படி, கிராம செயல் திட்டம் (VAP)/மாவட்ட செயல் திட்டம் (DAP)/மாநில செயல் திட்டம் (SAP) ஆகியவற்றில் அங்கீகரிக்கப்பட்ட பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report - DPR) தயாரிக்கப்பட வேண்டும்.

மதிப்பீட்டில் DPR தயாரிப்பிற்காக ஒரு ஆலோசகரை நியமிக்க வேண்டும் என்று விதிமுறை வழங்கப்பட்டிருந்தாலும், இராமநாதபுரம் மாவட்ட வளர்ச்சி முகமை (DRDA) அவ்வாறு நியமிக்கவில்லை என்பது கவனிக்கப்பட்டது. இதன் விளைவாக, 2020-21ஆம் ஆண்டிற்கான அனைத்து மதிப்பீடுகளும் துறையால் தயாரிக்கப்பட்டன. இருப்பினும், நிறைவு அறிக்கைகள் (Completion Report - CR) மற்றும் இறுதி பட்டிக்கான செலுத்தங்களின் மீதான ஆய்வு, **இணைப்பு 6.2ல்** விவரிக்கப்பட்டுள்ளபடி, ₹17.17 இலட்சம் மதிப்புள்ள DPRக்கான கட்டண செலுத்தங்கள் பணிச் செலவாக தவறாக சேர்க்கப்பட்டு, ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததை வெளிப்படுத்தியது. ஒப்பந்ததாருக்கு செலுத்தப்பட்ட இறுதி பட்டியலில் DPR கட்டணங்கள் சேர்க்கப்பட்டிருந்தது நடைமுறையில் காணப்பட்ட கவனக் குறைவு என்றும், அதனை மீட்டெடுக்க உத்தரவு வழங்கப்பட்டு அனுமதிக்க இயலாத செலவினம் ₹17.17 இலட்சம் ஒப்பந்ததாரரிடமிருந்து பெறப்படும் என்றும் அரசு பதிலளித்தது (ஜூலை 2025). ஒப்பந்த

[2] கீழையூர், தலைஞாயிறு மற்றும் திருமருகல் வட்டாரங்கள்.

[3] 8,855.20 மீட்டருக்கு ₹25.30 மதிப்பிலான 20mm பைப்பிற்குப் பதிலாக ₹43.25 மதிப்பிலான 25mm PVC பைப்.

நடைமுறைகளின் பின்பற்றாமைக்காக, தொடர்புடைய அதிகாரிகளின் மீது திட்ட இயக்குநர் நடவடிக்கை மேற்கொள்வார் என்றும் அரசு கூறியது (ஜூலை 2025).

## 6.2 JJMன் கீழ் IEC நடவடிக்கைகளை செயல்படுத்துதல்

தகவல், கல்வி மற்றும் தொடர்பு (Information, Education, and Communication - IEC) நடவடிக்கைகள் JJMன் கீழ் ஆதரவு நடவடிக்கைகளுடன் ஒருங்கிணைந்தவை. நீர் பாதுகாப்பு, மழைநீர் சேகரிப்பு, நுண் நீர்ப்பாசனம், உடைமைகளின் பராமரிப்பு, கழிவு நீர் மேலாண்மை குறித்து பயனர் குழுக்களுக்கு கற்பிப்பதே இந்த செயல்பாடுகளின் நோக்கமாகும். தமிழ்நாடு அரசு செயல்பாட்டு வழிகாட்டுதல்களின்படி, IEC நடவடிக்கைகள், TWAD வாரியம், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் (State Institute of Rural Development and Panchayat Raj -SIRD & PR), DWSM, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் (Tamil Nadu Corporation for Development of Women - TNCDW) போன்ற பல்வேறு நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்த நடவடிக்கைகளின் செயல்திறனை அடையாளம் காண தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் IEC செயல்பாடுகளின் மீது சோதனைத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. IEC நடவடிக்கைகளுக்காக, குறிப்பாக விளம்பரப் பலகைகள், சுவரொட்டிகளை அச்சிட்டு காட்சிப்படுத்துதல் மற்றும் துண்டுப்பிரசுரங்களை விநியோகிப்பதற்காக, 2023-24ஆம் ஆண்டில், JJM திட்ட இயக்குநரால் ₹13.86 கோடி ஒதுக்கப்பட்டிருந்ததை தணிக்கை கண்டது. நாகப்பட்டினத்தில் உள்ள திருமருகல் வட்டாரத்திலும், இராமநாதபுரத்தில் உள்ள திருப்புல்லாணி மற்றும் திருவாடானை வட்டாரங்களிலும் உள்ள பதிவுகளை ஆய்வு செய்ததில், 2024 ஜனவரி மற்றும் மார்ச் மாதங்களில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து முறையே ₹3.76 இலட்சம் மற்றும் ₹8.46 இலட்சம் செலவில் விளம்பரப் பலகைகள், சுவரொட்டிகள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் போன்ற IEC பொருட்கள் பெறப்பட்டன என்பது தெரியவந்தது. இருப்பினும், செப்டம்பர் 2024 நிலவரப்படி, IEC தொடர்பான அச்சிடப்பட்ட சாதனங்கள் பெறப்பட்டு ஆறு மாதங்களுக்கு மேலாகியும், மாவட்டங்களில் விநியோகிக்கப்படாமல்/பயன்படுத்தப்படாமல் இருந்தன (**விளக்கப்படம் 6.1**).

**விளக்கப்படம் 6.1: விநியோகிக்கப்படாமல் வைக்கப்பட்டிருந்த IEC தொடர்பான சாதனங்கள்**




நாகப்பட்டினம் மாவட்டம் இராமநாதபுரம் மாவட்டம்

இராமநாதபுரம் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட வட்டாரங்களில் தணிக்கையால் நடத்தப்பட்ட குழு கலந்துரையாடலில் (செப்டம்பர் 2024),

உள்ளூர் மக்கள் JJMன் பல்வேறு கூறுகளைப் பற்றி அறிந்திருக்கவில்லை என்பது கவனிக்கப்பட்டது. தணிக்கையால் மேற்கொள்ளப்பட்ட பயனாளிகள் கருத்தாய்வில், 1,427 பயனாளிகளுள் (55 விழுக்காடு) மொத்தம் 794 பயனாளிகள், IEC செயல்பாடு குறித்து அறியவில்லை என பதிலளித்தனர். இவ்வாறு, கொள்முதல் செய்யப்பட்ட IEC தொடர்பான சாதனங்கள் விநியோகிக்கப்படாததால், IEC நடவடிக்கைகள் குறித்த JJMன் நோக்கமான மக்களைச் சென்றடைவது மற்றும் விழிப்புணர்வுக்கான முயற்சிகள் ஆகியவை பாதிக்கப்பட்டன.

IEC தொடர்பாக அச்சிடப்பட்ட சாதனங்கள் தற்போது சுய உதவிக்குழுக்கள் மற்றும் குடிநீர் மற்றும் சுகாதாரக் குழு உறுப்பினர்கள் மூலம் விநியோகிக்கப்படுவதாகவும், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும் அரசு பதிலளித்தது (ஏப்ரல் 2025). IEC தொடர்பாக அச்சிடப்பட்ட சாதனங்களின் விநியோகம் மீதான கண்காணிப்பில் இருந்த குறைபாடு விழிப்புணர்வு நடவடிக்கைகளை பாதித்ததால் பதில் ஏற்புடையதாக இல்லை.

## 6.3 குடிநீர் குழாய் இணைப்புகளை புவிசார் குறியீடு செய்தல்

மத்திய அரசால் வெளியிடப்பட்டுள்ள செயல்பாட்டு வழிகாட்டுதல்களின்படி, வெளிப்படைத்தன்மை மற்றும் பயனுள்ள கண்காணிப்பை உறுதி செய்வதற்காக, மாநிலங்கள், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள், நீராதார நிலைத்தன்மைக்கான கட்டமைப்புகள் உட்பட, அனைத்து நீர் வழங்கல் திட்ட உடைமைகளையும் புவிசார் குறியீடு(geo-tagging) செய்ய வேண்டும். மாநில அரசால் வெளியிடப்பட்டுள்ள மாநிலத்திற்கான செயல்பாட்டு வழிகாட்டுதல்களிலும் இது மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், JJM செயல்பாட்டு வழிகாட்டுதல்கள், JJM IMIS ஆனது, பணி முன்னேற்றம், புவிசார் குறியீடு, செலவினம் குறித்த விவரங்கள், செயல்பாட்டு நிலை உள்ளிட்ட ஒவ்வொரு FHTC இணைப்புகள் தொடர்பான தரவையும் பதிவேற்ற வேண்டும். இத்தரவு, சமூக தணிக்கைகள் மற்றும் கண்காணிப்புக்காக வெளியிடப்படவேண்டும்.

நாகப்பட்டினம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில், முறையே 517 மற்றும் 1,175 பணிகள் JJMன் ஒருங்கிணைப்பு நிதிகள் கீழ் RD&PR துறையால் அனுமதிக்கப்பட்டன. இவற்றுள், முறையே 133 மற்றும் 764 பணிகள் நிறைவேற்றப்பட்டிருந்தன. இருப்பினும், நிறைவேற்றப்பட்ட பணிகளின் கீழ் உருவாக்கப்பட்ட உடைமைகளில் புவிசார் குறியீடு செய்யப்படவில்லை. மேலும், செப்டம்பர் 2024 நிலவரப்படி, TWAD வாரியத்தால் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் புவிசார் குறியிடுதல் நிறைவடையவில்லை.

நிறைவு கூட்டத்தின் போது (மார்ச் 2025), புவிசார் குறியிடும் பணி நடைபெற்று வருவதாகவும், 88 விழுக்காடு நிறைவடைந்துள்ளதாகவும் TWAD வாரியத்தின் பொறியியல் இயக்குநர் கூறினார். நாகப்பட்டினம் மாவட்டத்தில் புவிசார் குறியிடுதலுக்கான உடைமைகள் எதுவும் நிலுவையில் இல்லை என்றும், பயனர் உள்நுழைவில் புவிசார் குறியிடுதலில் தொழில்நுட்ப பிழை இருப்பதாகவும், அது விரைவில் சரிசெய்யப்படும் என்றும் அரசு பதிலளித்தது (ஏப்ரல் 2025).

நீர் விநியோகத்திற்காக உருவாக்கப்பட்ட உடைமைகள் குறித்த விவரங்கள் திறம்பட இணைக்கப்படாததால், நிறைவு பெறாத புவிசார் குறியிடுதல் கண்காணிப்பை பாதிப்பதாக இருந்தது.

## 6.4 FHTCஐ ஆதார் உடன் இணைத்தல்

மத்திய மற்றும் மாநில அரசின் JJM செயல்பாட்டு வழிகாட்டுதல்கள், FHTC வழங்கலில் அடையப்பட வேண்டிய இலக்கு மற்றும் கண்காணிப்புக்காக, சட்டப்பூர்வ விதிகளுக்கு உட்பட்டு FHTCகள் குடும்பத் தலைவரின் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடுகின்றன. JJM மற்றும் ஒருங்கிணைப்புத் திட்டங்களின் கீழ் இராமநாதபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில், முறையே 1,33,882 மற்றும் 1,01,471 FHTCகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இருப்பினும், முறையே 1,08,258 மற்றும் 99,771 FHTCகள் மட்டுமே ஆதார் எண்களுடன் இணைக்கப்பட்டிருந்ததால், அப்பணி முழுமையடையாமல் இருந்தது. FHTCஐ ஆதாருடன் இணைக்கும் பணி தற்போது நிறைவடைந்திருப்பதாக அரசு பதிலளித்தது (ஏப்ரல் 2025). ஜூன் 2025 நிலவரப்படி, JJM டேஷ்போர்டு தரவுகள் 72 விழுக்காடு FHTCகள் மட்டுமே பயனாளிகளுடன் இணைக்கப்பட்டிருந்ததாக வெளிப்படுத்தியதால் பதில் ஏற்புடையதாக இல்லை.

## 6.5 JJMன் கீழ் சமூகத் தணிக்கை நடத்தப்படாமை

கிராம ஊராட்சிகள் மற்றும் VWSCகள் JJM திட்டத்தின் சமூக தணிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசின் JJM செயல்பாட்டு வழிகாட்டுதல்கள் அறிவுறுத்துகிறது. சமூகத் தணிக்கைகள், சமூக பங்களிப்பை நிறுவனமயமாக்கவும், வெளிப்படைத்தன்மையை அதிகரிக்கவும் மற்றும் திட்டத்தின் பலன்கள் திட்டத்திற்குட்பட்ட பயனாளிகளை சென்றடைவதை உறுதி செய்யவும் உதவுகின்றன. சமூகத் தணிக்கை மேற்கொள்ளப்படுவது குறித்து மாநிலத்தின் JJM செயல்பாட்டு வழிகாட்டுதல்களிலும் வலியுறுத்தப்பட்டிருந்தது.

தெரிவு செய்யப்பட்ட ஆறு மாவட்டங்கள் ஒன்றிலும் இதுவரை சமூகத் தணிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்பதை தணிக்கை கவனித்தது. SWSMஆல் மூன்றாம் தரப்பு தணிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று அரசு பதிலளித்தது (ஏப்ரல் 2025). இருப்பினும், அதற்கான விவரங்கள் எதுவும் வழங்கப்படவில்லை. சமூகத் தணிக்கை நடத்தப்படாதது திட்ட வழிகாட்டுதல்களைப் பின்பற்றவில்லை என்பதைக் குறிப்பதால் பதில் ஏற்புடையதாக இல்லை.

**பரிந்துரை 15: சமூகத் தணிக்கை மேற்கொள்ளப்படுவதிலும், குடிநீர் வழங்கலுக்காக உருவாக்கப்பட்ட உடைமைகளை புவிசார் குறியீடு செய்வதிலும் இயக்கத்தின் வழிகாட்டுதல்கள் பின்பற்றப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.**

## 6.6 நிறைவடைந்த பணிகளின் முறையற்ற பராமரிப்பு

சேலம் மாவட்டத்தில் உள்ள ஏற்காடு ஒன்றியத்திற்கு ₹12.70 கோடி செலவில் புதிய நீர் வழங்கல் திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு அனுமதி

அளித்திருந்தது (பிப்ரவரி 2021). ஆறு திறந்த கிணறுகள், ஒரு ஏரேட்டர், இரண்டு தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் ஆறு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் (OHT) கட்டப்படுவது இத்திட்டத்தில் அடங்கும். டெண்டர் செயல்முறைக்குப் பிறகு, ஜனவரி 2022ல் TWAD வாரியத்தால் பணி ஆணை வழங்கப்பட்டது. பணிகள் பிப்ரவரி 2022ல் தொடங்கப்பட்டு பிப்ரவரி 2023ல் நிறைவடைந்தன. ஒரு வருட பராமரிப்பு காலத்திற்குப் பிறகு, தொடர் பராமரிப்பிற்காக திட்டம், மார்ச் 2024ல் ஊராட்சி அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டது.

மார்ச் 2025ல் நீர் வழங்கல் திட்டத்தின் நேரடி கூட்டுத் தேர்ந்தாய்வின் போது (JPV), நீருந்தும் திறனில் சரிவு இருப்பது கவனிக்கப்பட்டது. இது நீரின் கலங்கல் தன்மையை அதிகரிக்க வழிவகுத்தது. இதன் விளைவாக, புதிய திறந்த கிணறுகளில் இருந்து தண்ணீர் மூன்று நாட்களுக்கு ஒரு முறை வழங்கப்பட்டு வந்தது. நீர் விநியோகம் ஏற்கனவே உள்ள பிற உள்ளூர் நீர் ஆதாரங்கள் மூலம் பராமரிக்கப்பட்டு வந்தது.

'பம்ப் செட்' பராமரிக்கப்படாததாலும், கிணற்றில் வண்டல் மண் அகற்றப்படாததாலும் நீருந்தும் திறன் குறைந்துவிட்டதாக உதவி நிர்வாகப் பொறியாளர் (Assistant Executive Engineer - AEE) தெரிவித்தார். மேலும், கிணற்றில் இருந்து தரைமட்டத் தொட்டிக்கும் மற்றும் தரைமட்டத் தொட்டியிலிருந்து OHTகளுக்கும் நீர் பரிமாற்றம் செய்யப்படுவதை விவரிக்கும் நீருந்து உள்ளீட்டுப் பதிவேடுகள் பராமரிக்கப்படவில்லை என்பதை தணிக்கை கவனித்தது. பதிவேடுகள் இல்லாத நிலையில், திட்டத்தில் நீர் சீராக விநியோகம் செய்யப்படுதலை கண்காணிக்க இயலாது எனத் தணிக்கை கண்டது.

இது சுட்டிக்காட்டப்பட்ட போது, சீரான நீர் விநியோகத்தை உறுதி செய்வதற்குத் தேவையான பராமரிப்பை மேற்கொள்ளும்படி BDOக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக AEE பதிலளித்தார் (மார்ச் 2025). இதுமுதல் தொடர்புடைய அனைத்து பதிவேடுகளும் பராமரிக்கப்படும் என்று BDO மேலும் உறுதியளித்தார். பதிவேடுகள் முறையாகப் பராமரிக்கப்படாதது நிறைவேற்றி முடிக்கப்பட்ட திட்டங்களின் மீதான கண்காணிப்பில் இருந்த குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியது.

# அத்தியாயம் VII

# ஜல் ஜீவன் இயக்கத்தின் பலன் மற்றும் விளைவு கட்டமைப்பு

# அத்தியாயம் VII

# ஜல் ஜீவன் இயக்கத்தின் பலன் மற்றும் விளைவு கட்டமைப்பு

**குடிநீரின் தரம் பாதிக்கப்பட்ட ஊரக வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்படுவதில் காணப்பட்ட தாமதம், மாவட்டங்கள் முழுவதும் நீர் விநியோகிக்கப்படுவதில் ஏற்றத்தாழ்வை விளைவித்தது. தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில், குழாய் இணைப்புகள் வழங்கப்பட்ட ஊரக வீடுகளுக்கு போதுமான அளவு தண்ணீர் கிடைக்கவில்லை மற்றும் விநியோகிக்கப்பட்ட குடிநீரின் தரமும் பாதிக்கப்பட்டு காணப்பட்டது. FHTC வீட்டிற்குள்ளேயே வழங்கப்பட வேண்டும் என்னும் வழிகாட்டுதல்களின் பரிந்துரைக்கு எதிராக பெரும்பாலான FHTCகள் வீட்டிற்கு வெளியே வழங்கப்பட்டிருந்தன.**

## 7.1 முன்னுரை

அனைத்து கிராமப்புற வீடுகளுக்கும் 2024 ஆம் ஆண்டுக்குள் குடிநீர் குழாய் இணைப்பை (FHTC) வழங்குவதே ஜல் ஜீவன் இயக்கத்தின் முதன்மை நோக்கமாகும். இந்த இயக்கத்தின் காலம் பிப்ரவரி 2025ல் 2028 வரை நீட்டிக்கப்பட்டது. இதற்கு இணையாக, நான்கு முக்கிய அளவிடக்கூடிய விளைவுகளை அடையவும் இவ்வியக்கம் முயல்கிறது, அதாவது, (i) ஊரக சமூகங்களின் மேம்பட்ட சுகாதார நிலைமைகள், (ii) பெண்கள் மற்றும் சிறுமிகள் எதிர்கொள்ளும் வேலைப்பளுவைக் குறைத்தல் மற்றும் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல், (iii) உயர் தொடக்க கல்வி நிலை மாணவிகளின் பள்ளி இடைநிற்றல் விகிதங்களைக் குறைத்தல் மற்றும் (iv) ஊரக சமூகங்களுக்கான வேலைவாய்ப்பு வசதிகளை அதிகரித்தல்.

## 7.2 முதன்மைப் பலன் அடையப்படாமை

### 7.2.1 FHTCகள் வழங்கப்படவில்லை

மார்ச் 2021க்குள் 'தரம் பாதிக்கப்பட்ட பகுதிகள், வறட்சிப் பாங்கான மற்றும் பாலைவனப் பகுதிகளில் உள்ள கிராமங்களில் FHTCகளை வழங்குவதற்கான முன்னுரிமை அளிப்பது' ஜல் ஜீவன் இயக்கத்தின் பரந்த நோக்கங்களுள் ஒன்றாகும். தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களுள், நாகப்பட்டினம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள் முழுவதிலும் நிலத்தடி நீர் குடிப்பதற்கு ஏற்றதாக இல்லை, அவை உப்புத்தன்மை கொண்டதாகவும் மற்றும் உவர் நீர் எனவும் வகைப்படுத்தப்பட்டன. இருப்பினும், மற்ற மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது இந்த மாவட்டங்களில் FHTC வழங்கல் மிகவும் குறைவாக இருந்தது கவனிக்கப்பட்டது. அது, இவ்விரண்டு மாவட்டங்களிலும் ஜூன் 2024 நிலவரப்படி, முறையே 46 விழுக்காடு மற்றும் 31 விழுக்காடாக இருந்தது. திட்டம் தொடங்கப்பட்ட நான்கு ஆண்டுகளுக்குப் பிறகும், இந்த மாவட்டங்கள் JJMன் கீழ் ஊரக வீடுகளை உள்ளடக்குவதை உறுதி செய்வதில் திட்டமிடப்பட்ட முன்னேற்றத்தைப் பதிவு செய்ய இயலவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தேனி மாவட்டம் வீடுதோறும் குடிநீர் ‘ஹர் கர் ஜல்’ என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், அகமலை VPயில், 1,622 வீடுகளில் ஒன்றிற்கும் FHTC வழங்கப்படவில்லை என்பது JPVல் தணிக்கையால் கவனிக்கப்பட்டது (மார்ச் 2025). மக்கள் இயற்கை நீர் ஆதாரம் (நீர்நிலைகள், ஆற்று நீர்வீழ்ச்சிகள் போன்றவை) அல்லது பொது குழாய்களை சார்ந்திருந்தனர்.

மொத்தம் 1,427 நபர்களை உள்ளடக்கிய பயனாளிகளின் கருத்தாய்வில் 147 பேர் இத்திட்டத்தின் கீழ் தங்களுக்கு FHTCகள் வழங்கப்படவில்லை என்று கூறியிருந்தனர். அதில் 143 பேர் நாகப்பட்டினம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள்.

இராமநாதபுரம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் மூன்று முக்கிய MVSகள் செயல்படுத்தப்பட்டு வருவதாக அரசு பதிலளித்தது (ஜூலை 2025). மேலும், பணி நிறைவேறியதும், FHTCகள் வழங்கலில் தன்னிறைவை அடையும் பொருட்டு, இராமநாதபுரம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் மீதமுள்ள FHTCகள் வழங்கப்படும் என்று கூறப்பட்டது. JJM செயல்படுத்தப்பட்டு ஐந்து ஆண்டுகள் நிறைவேறிய பிறகும் FHTC வழங்கப்படுதலில் தன்னிறைவு நிலை அடையப்படவில்லை என்பதை பதில் சுட்டிக்காட்டியது.

### 7.2.2 FHTCகளில் போதுமான நீர் விநியோகம் இல்லாமை மற்றும் முறையற்ற விநியோகம்

JJM செயல்பாட்டு வழிகாட்டுதல்கள், வழங்கப்படும் ஒவ்வொரு குழாய் இணைப்பு மூலமாகவும் குறைந்தபட்சம் நாளொன்றுக்கு ஒரு நபருக்கு 55 லிட்டர் தண்ணீர் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்துகிறது. இதை உறுதி செய்வதற்காக, தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில், 2019-24 ஆண்டுகளில் குடியிருப்புகளுக்கு[1] வழங்கப்பட்ட தண்ணீர் குறித்த பதிவுகளை தணிக்கை பெற்றது. அதன் விவரங்கள் **அட்டவணை 7.1ல்** வழங்கப்பட்டுள்ளன.

[1] JJM செயல்பாட்டு வழிகாட்டுதல்களின்படி, குடியிருப்பு என்பது குறைந்தபட்சம் 20 வீடுகள் மற்றும்/அல்லது 100 நபர்களைக் கொண்ட குழுவாக வரையறுக்கப்படுகிறது.

**அட்டவணை 7.1: 2019-24 ஆண்டுகளில் குடியிருப்புகளுக்கு வழங்கப்பட்ட நீரின் அளவு**

| மாவட்டம் | குடியிருப்புகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட நீரின் அளவு | | தேவையான அளவு குடிநீர் வழங்கப்பட்ட குடியிருப்புகளின் விழுக்காடு |
|---|---|---|---|---|
| | | 55 lpcdக்கும் குறைவாக | 55 lpcd அல்லது அதற்கும் மேலாக | |
| கோயம்புத்தூர் | 1,200 | 1,096 | 104 | *8.67* |
| நாகப்பட்டினம் | 980 | 980 | 0 | *0* |
| சேலம் | 5,109 | 1,901 | 3,208 | *62.79* |
| தேனி | 607 | 0 | 607 | *100* |
| விழுப்புரம் | 2,284 | 1,191 | 1,093 | *47.85* |
| இராமநாதபுரம் | 2,306 | 2,269 | 37 | *1.06* |
| **மொத்தம்** | **12,486** | **7,437** | **5,049** | ***40.44*** |

(ஆதாரம்: தொடர்புடைய DRDAகள்/TWAD வாரியம்)

நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள எந்த குடியிருப்புகளுக்கும் 55 lpcd தண்ணீர் வழங்கப்படவில்லை என்பது **அட்டவணை 7.1ல்** இருந்து தெளிவாகிறது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் 100 விழுக்காடு FHTCகள் வழங்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருப்பினும், 8.67 விழுக்காடு குடியிருப்புகளுக்கு மட்டுமே பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகளின்படியான அளவில் தண்ணீர் வழங்கப்பட்டிருந்தது கவனிக்கப்பட்டது.

மேலும், FHTCகளுக்கு வழங்கப்பட்ட தண்ணீர் தொடர்பான தணிக்கை வினவல், FGDகள், JPVகள் (ஆகஸ்ட்/செப்டம்பர் 2024) மற்றும் பயனாளிகள் கருத்தாய்வு ஆகியவை கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி நீர் விநியோகத்தில் பற்றாக்குறையை வெளிப்படுத்தின:

- நாகப்பட்டினத்தில் வேதாரண்யம் வட்டாரத்தில் தெரிவு செய்யப்பட்ட மூன்று[2] VPகளில் 55 lpcd தண்ணீர் வழங்கப்பட இயலவில்லை. இவற்றுள், கோடியக்கரை VPல் வழங்கப்பட்ட தண்ணீர் அளவு 17 lpcd மட்டுமே.
- இராமநாதபுரத்தில், தெரிவு செய்யப்பட்ட 10 VPகளிலும் தேவையான அளவு தண்ணீர் வழங்கப்படவில்லை என்றும், நான்கு முதல் ஏழு நாட்களுக்கு ஒரு முறை மட்டுமே தண்ணீர் விநியோகம் செய்யப்படுவதாகவும், இதனால் பொதுமக்கள் தண்ணீரை விலை கொடுத்து வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாகவும் தெரிவித்தனர்.

[2] கோடியக்கரை, மருதூர் வடக்கு மற்றும் மொல்லைக்கரை VPகள்.

- சேலத்தில், FGDல் பங்கேற்ற பயனாளிகள், மூன்று நாட்களுக்கு ஒரு முறை மட்டுமே தண்ணீர் வழங்கப்பட்டதாகக் கூறினர்.
- கோயம்புத்தூரில், ‘CWSS 295 குடியிருப்புகள் திட்டத்திலிருந்து’ போதுமான அளவு தண்ணீர் வழங்கப்படாததால், கிணத்துக்கடவு வட்டாரத்தின் எந்த VPகளுக்கும் தொடர்ந்து நீர் விநியோகிக்கப்படவில்லை. இது **பத்தி 2.5.2.2ல்** மேலும் விளக்கப்பட்டுள்ளது.

இது, பயனாளிகள் கருத்தாய்வின் போது, போதுமான அளவு தண்ணீர் கிடைக்கவில்லை **(விளக்கப்படம் 7.1)** என்ற 346 பயனாளிகளின் (FHTCகள் வழங்கப்பட்ட 1,280 பயனாளிகளுள்) கூற்றினால் மேலும் உறுதிப்படுத்தப்பட்டது.

**விளக்கப்படம் 7.1: FHTCகள் மூலம் போதுமான அளவு தண்ணீர் கிடைக்கவில்லை என்று தெரிவித்த பயனாளிகள்**




மேலும், 98 பயனாளிகள் தினசரி அடிப்படையில் தண்ணீர் கிடைக்கவில்லை என்று கூறினர். இவர்களுள் 88 பயனாளிகள் கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

இராமநாதபுரம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் மறுசீரமைப்பு பணிகள் மற்றும் புதிய MVS பணிகள் நிறைவடைந்த பிறகு, மாவட்டங்களில் உள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் 55 lpcd தண்ணீர் வழங்கப்படும் என்று அரசு பதிலளித்தது (ஏப்ரல் 2025). JJM தொடங்கப்பட்டு ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகும் குறைந்தபட்ச அளவான 55 lpcd வழங்கப்படாததால் பதில் ஏற்புடையதாக இல்லை.

### 7.2.3 பரிந்துரைக்கப்பட்ட தர அளவுருக்களின்படி குடிநீர் வழங்கப்படாமை

JJM செயல்பாட்டு வழிகாட்டுதல்களின்படி, வழங்கப்படும் குடிநீர், நுண்கிருமி அளவுருக்கள் தொடர்பான BIS: 10500:2012 குடிநீர் தரநிலைகளை பூர்த்தி செய்ய வேண்டும். கள ஆய்வின் போது, தணிக்கை, ஆறு மாவட்டங்களில் இருந்து சீரற்ற முறையில் தெரிவுசெய்யப்பட்ட 43 குடியிருப்புகளில்[3] குடிநீர் மாதிரிகளை எடுத்து TWAD வாரியத்தி மாவட்ட நீர் சோதனை ஆய்வகங்களில் அவற்றை பரிசோதித்தது. இதில் கோயம்புத்தூர் மாவட்ட குடியிருப்புகளில் எடுக்கப்பட்ட ஐந்து மாதிரிகளும், இராமநாதபுரம் மாவட்டத்தின் இரண்டு மாதிரிகளும் மேற்கண்ட

[3] கோயம்புத்தூர் - 5; நாகப்பட்டினம் - 3; இராமநாதபுரம் - 13; சேலம் - 8; தேனி - 4 மற்றும் விழுப்புரம் - 10.

வழிகாட்டுதல்களை பூர்த்தி செய்யவில்லை. குடிநீர் தர பரிசோதனையில் கவனிக்கப்பட்ட சிக்கல்கள் **பத்தி 5.3**ல் விவரிக்கப்பட்டுள்ளன.

மேலும், தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் பயனாளிகள் கருத்தாய்வு மற்றும் FGDகளில் தணிக்கையின் வினாக்களுக்கு பதிலளிக்கையில், FHTCகள் வழங்கப்பட்ட 1,280 பயனாளிகளுள் 209 பேர், அவர்கள் பெற்ற குடிநீரின் தரம் குறித்து அதிருப்தி தெரிவித்திருந்ததை[4] வெளிப்படுத்தியது. மேற்கண்ட 209 பயனாளிகளுள் 123 பயனாளிகள் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

விழுப்புரம், இராமநாதபுரம் மற்றும் தேனி போன்ற தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களின் சில குடியிருப்புகளில் மேற்கொள்ளப்பட்ட JPVன் போது, வழங்கப்பட்ட குடிநீர் பயன்பாட்டிற்கு ஏற்றதாக இல்லை என்று பயனாளிகள் தெரிவித்தனர்.

இராமநாதபுரம் மாவட்டத்தில், நிலத்தடி நீரின் தரமே குடிநீர் தரத்தில் காணப்பட்ட குறைபாடுகளுக்கு காரணம் என்றும், TWAD வாரியத்தால் செயல்படுத்தப்படும் புதிய MVS மற்றும் CWSS பணிகள் நிறைவடைந்தபின், சீரான தரம் மற்றும் அளவுடன் குடிநீர் வழங்கப்படும் என்றும் அரசு பதிலளித்தது (ஏப்ரல் 2025). இருப்பினும், கோயம்புத்தூர் மற்றும் தேனி மாவட்டங்களில் நீரின் தரத்தில் காணப்பட்ட குறைபாடு குறித்து பதிலில் குறிப்பிடப்படவில்லை.

### 7.2.4 FHTCகள் வழங்கப்படுதலில் காணப்பட்ட பிற சிக்கல்கள்

#### *7.2.4.1 தவறான அமைவிடங்களில் வழங்கப்பட்ட FHTC குழாய்கள்*

JJM செயல்பாட்டு வழிகாட்டுதல்கள், ஒவ்வொரு வீட்டிற்கும் சமையலறை, சலவை & குளியல் பகுதி மற்றும் கழிப்பறை போன்ற மூன்று விநியோக இடங்களில் (குழாய்கள்) உள்ள குழாய்களுள் ஒன்று ஜல் ஜீவன் இயக்கத்தின் நிதியுதவியுடன் FHTCயாக வழங்கப்படலாம் என கருத்துரைக்கின்றது.

செப்டம்பர் 2024 நிலவரப்படி, தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் வழங்கப்பட்ட 2,69,645 FHTCகளில், 2,59,613 FHTCகள் (96 விழுக்காடு) வழிகாட்டுதல்களை மீறி பயனாளியின் வீட்டிற்கு வெளியே நிறுவப்பட்டதாக தணிக்கை ஆய்வு வெளிப்படுத்தியது. விவரங்கள் **இணைப்பு 7.1ல்** வழங்கப்பட்டுள்ளன. தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 12 வட்டாரங்களில் மேற்கொள்ளப்பட்ட JPVன் போது இந்த நிலை உறுதிப்படுத்தப்பட்டது **(விளக்கப்படம் 7.2)**.

---

[4] கோயம்புத்தூர் - 25; நாகப்பட்டினம் - 14; இராமநாதபுரம் - 123; சேலம் - 4 மற்றும் விழுப்புரம் - 43.

**விளக்கப்படம் 7.2: கான்கிரீட் ஸ்டாண்ட் கம்பம் இல்லாமல் திறந்தவெளியில் வழங்கப்பட்ட FHTC**




வழிகாட்டுதல்களிலிருந்து காணப்பட்ட இவ்விலகல், திட்டமிடப்பட்ட பலனை மக்களுக்கு வழங்கத் தவறியது மட்டுமல்லாமல், வீட்டிற்கு வெளியே இருந்த இவ்விணைப்புகள் மற்ற பிரச்சினைகள் ஏற்படவும் வழிவகுத்தன.

(i) குழாய்கள் நிறுவப்படுவதற்கான இடம் இல்லாமை (ii) பயனாளிகளின் கோரிக்கை (iii) சிறிய கிராமப்புற வீடுகள் பொருட்டு எளிதான பயன்பாட்டு வழி போன்ற காரணங்களால் வீடுகளுக்கு வெளியே குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டதாக அரசு பதிலளித்தது (ஏப்ரல் 2025). திறந்த இடங்களில் குழாய்கள் நிறுவப்படுவது அவற்றின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பைப் பாதிக்கும் என்பதால் பதில் ஏற்புடையதாக இல்லை.

### *7.2.4.2 பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களுக்கான தண்ணீர் குழாய் இணைப்புகள்*

JJM செயல்பாட்டு வழிகாட்டுதல்களின் **பத்தி 3.3ன்** படி, பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், GP கட்டிடங்கள், சுகாதார மையங்கள், நல்வாழ்வு மையங்கள் மற்றும் சமூக கட்டிடங்களுக்கு குழாய் இணைப்பை வழங்குவது JJMன் நோக்கங்களுள் ஒன்றாகும். நவம்பர் 2024 நிலவரப்படி, மாநிலத்தில் இருந்த பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களின் JJM குழாய் இணைப்புகள் குறித்த விவரங்கள் **அட்டவணை 7.2ல்** வழங்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 7.2: நவம்பர் 2024 நிலவரப்படி பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களின் JJM குழாய் இணைப்புகள்**

| | தமிழ்நாடு | | தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்கள் | |
|---|---|---|---|---|
| | கிராமப்புற பள்ளிகள் | FHTCகள் வழங்கப்பட்டவை | கிராமப்புற பள்ளிகள் | FHTCகள் வழங்கப்பட்டவை |
| கிராமப்புற பள்ளிகள் | 38,855 | 38,848 | 6,340 | 6,339 |
| அங்கன்வாடி மையங்கள் | 40,242 | 40,191 | 6,628 | 6,624 |

(ஆதாரம்: JJM டேஷ்போர்டு)

JJM டேஷ்போர்டில் பதிவேற்றப்பட்ட தரவுகளின்படி, பெரும்பாலும் அனைத்து ஊரகப் பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களுக்கும் FHTCகள் வழங்கப்பட்டுள்ளன என்பது **அட்டவணை 7.2**லிருந்து தெரிய வந்தது. அதேசமயம், JPVல் ஊரகப் பள்ளிகளின் சோதனைச் சரிபார்ப்பின் போது, JJM டேஷ்போர்டு அவற்றுக்கான குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டிருந்த போதிலும் சேலம் மாவட்டத்தின்[5] இரண்டு ஊரகப் பள்ளிகள் மற்றும் ஒரு அங்கன்வாடி மையத்திற்கு FHTCகள் வழங்கப்படவில்லை என்பதை தணிக்கை கவனித்தது.

மேலும், மாநிலத்தில் உள்ள 1,626 ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் மற்றும் 6,444 அங்கன்வாடிகளுக்கு இன்னும் தண்ணீர் குழாய் இணைப்புகள் வழங்கப்படவில்லை என்று திட்ட இயக்குநர் அக்டோபர் 2024ல் தெரிவித்தார். இவற்றுள், 1,564 அங்கன்வாடிகள் தெரிவு செய்யப்பட்ட ஆறு மாவட்டங்களைச் சேர்ந்தவை. இது டேஷ்போர்டில் பதிவேற்றப்பட்ட தரவுகளுக்கு முரணானது.

தெரிவு செய்யப்பட்ட மூன்று மாவட்டங்களான நாகப்பட்டினம், இராமநாதபுரம் மற்றும் விழுப்புரத்தைப் பொறுத்தவரை, உடனடியாக குழாய் இணைப்புகள் வழங்கப்பட வட்டார வளர்ச்சி அலுவலர்கள்/VP தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என அரசு பதிலளித்தது (ஏப்ரல் 2025). தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் மீதமிருந்த மூன்று மாவட்டங்களில் அனைத்து ஊரக பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகளுக்கும் தற்போது குழாய் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. JJM டேஷ்போர்டில் பதிவேற்றப்பட்ட தகவல்கள் துல்லியமாக இல்லை என்பதை பதில் சுட்டிக்காட்டியது.

**பரிந்துரை 16: அனைத்து பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களுக்கும் FHTCகளை வழங்கும் வகையில், அவற்றை JJM வரம்பிற்குள் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

5 காவேரிபுரத்தில் உள்ள அரசு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி மற்றும் கொளத்தூர் தொகுதியில் உள்ள நவப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி மற்றும் அங்கன்வாடி (ஒரே வளாகத்தில்).

## 7.3 JJMன் விளைவுகள்

### 7.3.1 நிலையான வளர்ச்சி இலக்கு - 6

நிலையான வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals - SDGகள்) கட்டமைப்பு என்பது உலகளாவிய அளவில் பொது நலனுக்கான ஒரு தனித்துவமான வெளிப்பாடாகும். இதில் 2030ஆம் ஆண்டின் நிலையான வளர்ச்சிக்கான செயல்திட்டம் 2015ல் ஐக்கிய நாடுகள்பொதுப் பேரவையின் 193 உறுப்பினர்களால் ஏற்பளிக்கப்பட்டது. இது, ‘ஒருவரும் விடுபடாமல் இருத்தல்’ (Leaving no One Behind - LNOB) என்ற கொள்கையால் இயக்கப்படும் 17 உலகளாவிய குறிக்கோள்களையும் அவற்றின் 169 இலக்குகளையும் மையமாகக் கொண்டது.

SDG உலகளாவிய இலக்கு 6 - சுத்தமான நீர் மற்றும் சுகாதாரம் - 2030ஆம் ஆண்டுக்குள் பாதுகாப்பான மற்றும் மலிவு விலையில் குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் ஆகியவற்றை அனைவருக்கும் அளிக்க விழைகின்றது. குறிப்பாக, SDG-6ன் இலக்கு 6.1, 2030 ஆம் ஆண்டுக்குள் அனைவருக்கும் பாதுகாப்பான மற்றும் மலிவு விலையில் குடிநீர் கிடைப்பதற்கான உலகளாவிய மற்றும் சமமான வசதிவாய்ப்பு அளிக்கப்படுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மத்திய அரசும் 2030க்கான செயல்திட்டத்தை அடையும் பொருட்டு, நிலையான வளர்ச்சிக்கான உலகளாவிய உறுதிப்பாட்டுடன் இணைந்து செயல்பட்டது. ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் குழாய் நீர் இணைப்பை வழங்குவதே இதன் இலக்காகும். SDG-6 இலக்கை அடைய, JJM உட்பட பல்வேறு[6] திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகளை மத்திய அரசு செயல்படுத்துகிறது. SDG-6ன் கீழ் மாநிலத்தின் செயல்திறன், **அட்டவணை 7.3** ல் வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 7.3: SDG-6ன் கீழ் தமிழ்நாட்டின் செயல்திறன்**

| ஆண்டு/ காலம் | SDG-6 மதிப்பெண் | | மாநிலங்களின் தரவரிசை |
|---|---|---|---|
| | இந்தியா | தமிழ்நாடு | |
| 2018 | 63 | 66 | 9 |
| 2019-20 | 88 | 90 | 8 |
| 2020-21 | 83 | 87 | 11 |
| 2023-24 | 83 | 87 | 11 |

நிதி ஆயோக்கின் SDG இந்தியா குறியீடு 2023-24ன் படி, தமிழ்நாட்டில் 81.87 விழுக்காடு ஊரக குடும்பங்கள் குழாய் நீர் வழங்கல் (Piped Water Supply - PWS) மூலம் வளாகத்திற்குள்ளேயே பாதுகாப்பான மற்றும் போதுமான குடிநீரைப் பெறுகின்றன.

[6] (அ) ஸ்வச் பாரத் மிஷன்; (ஆ) AMRUT 2.0 திட்டம்; (இ) PM Krishi Sinchayee Yojna (PMKSY); (ஈ) மிஷன் அம்ரித் சரோவர்; (உ) ஜல் சக்தி அபியான்; (ஊ) அடல் பூஜல் யோஜனா; (எ) பிரதான் மந்திரி க்ரிஷி சிஞ்சயீ யோஜனா; (ஏ) தேசிய நதி பாதுகாப்பு திட்டம் (NRCP); (ஐ) நமாமி கங்கே - ஒருங்கிணைந்த கங்கை பாதுகாப்பு பணி மற்றும் (ஒ) தேசிய முன்னோக்கு திட்டம் (National Perspective Plan - NPP).

### 7.3.2 JJMன் முக்கிய அளவிடக்கூடிய விளைவுகளில் அடையப்பட்ட சாதனை

ஊரக குடும்பங்களின் சமூக-பொருளாதார நல்வாழ்வை உறுதி செய்வதற்காக, **பத்தி 7.1ல்** கூறப்பட்டுள்ள நான்கு முக்கிய அளவிடக்கூடிய விளைவுகளை அடைய JJM முயல்கிறது. திட்டத்தின் முன்னேற்றத்தை மதிப்பிடும் வகையில், பயனாளி கருத்தாய்வு, JPVகள் மற்றும் FGDகளை தணிக்கை மேற்கொண்டது. அதில் திட்டத்தில் அடையப்பட்ட விளைவுகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.



- **தெரிவு செய்யப்பட்ட VPகளில் மேற்கொள்ளப்பட்ட FGDகளின் போது, வீடுகளில் தண்ணீர் வழங்கப்பட்ட நேர்வுகளில் பெண்களின் வேலைப்பளு குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளதாகக் கூறினர்.**
- **அதேபோன்று, பள்ளித் தலைமை ஆசிரியர்கள், சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் கிராமப்புற செவிலியர்கள் போன்ற சமூக உறுப்பினர்களும், பள்ளியில் கல்வி கற்றுக் கொள்ளவதற்கு குழந்தைகளால் நேரம் செலவிட முடிகிறது என்று கூறினர்.**

#### *7.3.2.1 உயர் தொடக்க பள்ளி மாணவிகளின் குறைவான இடைநிற்றல்*

தணிக்கை நடத்திய பயனாளிகளின் கருத்தாய்வில், 1,280 பயனாளிகள் தங்களுக்கு FHTCகள் வழங்கப்பட்டதாகக் கூறியிருந்தனர். பயனாளிகளில் ஒருவரும் தங்கள் வீடுகளில், 'வகுப்புகள் 1 முதல் 5' வரையுள்ள பிரிவு மற்றும் ' வகுப்புகள் 6 முதல் 8' வரையுள்ள பிரிவைச் சார்ந்த பள்ளி செல்லும் மாணவிகள் பள்ளியை விட்டு இடைநின்றதாகத் தெரிவிக்கவில்லை. தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளி நிலையில் பள்ளியை விட்டு இடைநின்ற குழந்தைகள் குறித்த தரவுகளை தணிக்கை பெற்றது. கல்வித் துறையில் மாநில அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகள் காரணமாக, தெரிவு செய்யப்பட்ட அனைத்து மாவட்டங்களிலும், மேற்குறிப்பிடபட்டிருந்த கல்வி நிலையில் பள்ளியை விட்டு வெளியேறிய மாணவர்களின் விகிதம் மிகக் குறைவு (0.01 விழுக்காடு முதல் 0.2 விழுக்காடு வரை) என்பது கவனிக்கப்பட்டது.

#### *7.3.2.2 பெண்களின் குறைக்கப்பட்ட வேலைப்பளு*

இராமநாதபுரம் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டட இரண்டு வட்டாரங்களில் மேற்கொள்ளப்பட்ட FGDகளில், பெண்கள் தொலைதூரப் பகுதிகளிலிருந்து (500 மீட்டர் முதல் ஒரு கி.மீ வரை) தண்ணீர் கொண்டுவர வேண்டியிருந்தது என்றும், வீட்டிற்கே குடிநீர் வழங்கப்பட்டால் மட்டுமே அவர்களது இந்தச் சுமை குறையும் என்றும் ஊரக சமூகங்களின் பிரதிநிதிகள் கூறினர்.



விளக்கப்படம் 7.3: கடம்பூர் VP - குடியிருப்புக்கு வெளியே இருந்து தள்ளு வண்டிகளில் கொண்டு வரப்படும் தண்ணீர்

இவ்வாறு, JJM தொடங்கப்பட்டு நான்கு ஆண்டுகளுக்குப் பிறகும், FHTCகளை அடைவதில் எந்த முன்னேற்றத்தையும் இராமநாதபுரம் மாவட்டம் பதிவு செய்யவில்லை மற்றும் முக்கிய விளைவுகளில் ஒன்றான பெண்களின் வேலைப் பளுவைக் குறைத்தல் என்பதை அடைவதிலும் பின்தங்கியிருந்தது (**விளக்கப்படம் 7.3**).

FHTCகள் வழங்கப்பட்ட 1,280 பயனாளிகளின் மீது தணிக்கை நடத்திய கருத்தாய்வின் போது வழங்கப்பட்ட பதில்கள் **விளக்கப்படம் 7.4ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

விளக்கப்படம் 7.4: பெண்களின் வேலைப் பளுவில் காணப்பட்ட குறைவு




### *7.3.2.3 வேலை வாய்ப்புகளின் அதிகரிப்பு*

பயனாளிகள் கருத்தாய்வில், வீடுகளுக்கு FHTCகள் வழங்கப்பட்டதன் காரணமாக வேலைவாய்ப்புகளில் எவ்வித குறிப்பிடத்தக்க தாக்கமும் ஏற்படவில்லை என்பது வெளியானது. 41 விழுக்காடு பயனாளிகள் அதிக நேரம் கிடைப்பதன் காரணமாக வேலைவாய்ப்புகள் அதிகரித்துள்ளதாகக் கூறியிருந்தாலும், 58 விழுக்காடு பயனாளிகள் அதில் எந்த மாற்றமும் இல்லை என்று கூறினர் (**விளக்கப்படம் 7.5**).

விளக்கப்படம் 7.5: FHTC வழங்கப்படுவதன் மூலம் கிராமத்தில் வேலைவாய்ப்புகள் அதிகரித்துள்ளனவா?




### *7.3.2.4 நீர்வழிப் பரவும் நோய்களின் குறைவு மற்றும் ஆரோக்கியமான ஊரக சமூகங்கள்*

ஊரக சமூகங்களின் நீண்டகால வளர்ச்சிக்கு நீர்வழி பரவும் நோய்களைக் குறைப்பது என்பது அளவிடக்கூடிய முக்கிய விளைவுகளில் இன்றியமையாத ஒன்றாகும். இவ்வளர்ச்சிக்கு, நோய்த் தடுப்பு நடவடிக்கைகள், விழிப்புணர்வு முயற்சிகள் மற்றும் முறையான கழிவுநீர்/கழிவுகள் அகற்றல் ஆகியவற்றில் கவனம் செலுத்தக்கூடிய வலுவான சுகாதாரப் பராமரிப்பு அமைப்பு போன்ற பல காரணக்கூறுகள் உள்ளன. இதனால், FHTCகள் வழங்கப்பட்டதன் மூலம் குறைக்கப்பட்ட நீர்வழி பரவும் நோய்களின் அளவை மட்டுமே ஊரக சமூக வளர்ச்சியுடன் தொடர்புபடுத்தி முடிவாக நிலைநிறுத்த இயலாது. பயனாளிகளின் கருத்தாய்வில், திட்டத்திற்கு முன்பான நீர்வழி பரவும் நோய்களின் விவரங்களைப் பற்றி கூற இயலவில்லை என்றாலும், 594 பயனாளிகள் (46.4 விழுக்காடு) JJM மூலம் வீடுகளுக்கு தரமான தண்ணீர் வழங்கப்பட்டதன் காரணமாக வாந்தி, வயிற்றுப்போக்கு, மஞ்சள் காமாலை, காலரா போன்ற நீர்வழி பரவும் நோய்களில் குறைவை உணர்ந்ததாகத் தெரிவித்தனர்.

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்கத்தால் வழங்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களின் நீர்வழி பரவும் நோய்கள் குறித்த தரவுகளுடன் திட்டத்தின் தொடக்க காலம் (2019-20) மற்றும் 2023-24ஆம் ஆண்டின் இறுதியிலும் FHTCகள் வழங்கப்பட்டதால் மாவட்டங்களில் ஏற்பட்ட முன்னேற்றத்தை தணிக்கை ஒப்பிட்டது.

**அட்டவணை 7.4: தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் வழங்கப்பட்ட FHTCகளுடன் ஒப்பிடும்போது நீர் வழி பரவும் நோய்களின் பரவல் குறித்த தரவு**

| மாவட்டம் | பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை | | வழங்கப்பட்ட FHTCகளின் விழுக்காடு (JJM டேஷ்போர்டு தரவு) | |
|---|---|---|---|---|
| | 2019-20 | 2023-24 | 2019-20 | 2023-24 |
| கோயம்புத்தூர் | 0 | 2,355 | *39.65* | *100* |
| நாகப்பட்டினம் | 625 | 1,233 | *5.20* | *38.05* |
| இராமநாதபுரம் | 580 | 7,329 | *9.80* | *28.23* |
| சேலம் | 12 | 3,405 | *7.52* | *80.20* |
| தேனி | 0 | 3,052 | *24.31* | *100* |
| விழுப்புரம் | 2,886 | 13,096 | *1.05* | *81.17* |
| **மாநில மொத்தம்** | **28,548** | **1,12,884** | ***15*** | ***82*** |

(ஆதாரம்: பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்ககம் மற்றும் JJM டேஷ்போர்டு தரவு)

FHTCகள் வழங்கப்படுவதில் அதிக சாதனை படைத்த மாவட்டங்களில் கூட நீர் மூலம் பரவும் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் எந்தக் குறைவும் இல்லை என்பது **அட்டவணை 7.4ல்** இருந்து கண்டறியப்பட்டது. நோய் அறிவிப்புகளில் மேம்பட்ட நடைமுறைகள் உட்பட பல்வேறு காரணக் கூறுகளால் தண்ணீர் மூலம் பரவும் நோய்களின் அதிகரிப்பு இருக்கலாம் என்றாலும், FHTCகள் மூலம் பரிந்துரைக்கப்பட்ட தரமான தண்ணீரை வழங்குவது, மாநிலத்தில் நீண்ட கால சிறந்த சுகாதாரத் தரங்களை உறுதி செய்வதற்கு உதவக்கூடும்.

இராமநாதபுரத்தில், பயன்படுத்தக்கூடிய வகையில் குடிநீருக்கான உள்ளூர் ஆதாரம் இல்லாததால், புதிய MVS மற்றும் ஏற்கனவே இருந்த CWSS பணிகளின் சீரமைப்பையே இம்மாவட்டம் முழுமையாகச் சார்ந்திருந்ததாக அரசு பதிலளித்தது (ஜூலை 2025). இச்செயல்பாடுகள் நிறைவடைந்ததும், அளவிடக்கூடிய அனைத்து முக்கிய விளைவுகளையும் அடைவதற்கான சாத்தியக்கூறு இருப்பதாகவும் கூறப்பட்டது.



**(பிரெடெரிக் சியெம்லே)**

**சென்னை** — **முதன்மை கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை-I), தமிழ்நாடு**

**நாள்** 14 **ஜனவரி** 2026

**மேற்கையொப்பமிடப்பட்டது**



**புது டில்லி** — **(கொ. சஞ்சய் மூர்த்தி)**

**நாள்** 27 **ஜனவரி** 2026 — **இந்திய தணிக்கைத் தலைவர்**

# இணைப்புகள்

## இணைப்பு 1.1

### (பார்வை: பத்தி 1.5; பக்கம் 4)

### தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்கள், வட்டாரங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் விவரங்கள்

| வ. எண் | மாவட்டம் | வ. எண் | வட்டாரம் | வ. எண் | கிராம ஊராட்சி |
|---|---|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | 1 | காரமடை | 1 | பெல்லபாளையம் |
| | | | | 2 | சிக்கதாசம்பாளையம் |
| | | | | 3 | சின்னகள்ளிபட்டி |
| | | | | 4 | நெல்லித்துறை |
| | | | | 5 | தோலம்பாளையம் |
| | | 2 | கிணத்துக்கடவு | 6 | தேவனாம்பாளையம் |
| | | | | 7 | கப்பலாங்கரை |
| | | | | 8 | குதிரையாலம்பாளையம் |
| | | | | 9 | சொலவம்பாளையம் |
| | | | | 10 | வடப்புதூர் |
